
ச.து.சு. யோகியார்

எஸ். ஆர். அசோக் குமார் (சலன்)



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

ச.து.சு. யோகியார்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன் மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி ; நேஷனல் மியூசியம் புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

ச.து.சு. யோகியார்

எஸ். ஆர். அசோக் குமார்
(சலன்)

சாகித்திய அக்காதெமி

S.D.S. Yogiar - Monograph by **S.R. Ashok kumar (Chalan)** - Sahitya Akademi, New Delhi, 1999. Rs. 25.

முதல் வெளியீடு : 1999
ISBN - 81 - 260 - 0779 - 6

சாகித்திய அக்காதெமி
தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி - 110 001.

விற்பனை :
'ஸ்வாதி' மந்திர் சாலை, புதுதில்லி - 110 001,

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் - 560 002.

'குணா பில்டிங்', 304 - 305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா - 700 053.

172, மும்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலயா சாலை.
தாதர், மும்பய் 400 014.

விலை : ரூ. 25/-

Laser Typesetting at Laser Systems, Chennai - 17
அச்சிட்டோர் : Mani Offset, Chennai - 5.

பொருளடக்கம்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களில் மகாகவி பாலபாரதி ச.து.சுப்பிரமணிய யோகியார் குறிப்பிடத்தக்கவர். பாரதிக்குப்பின் வந்த கவிஞர்களில் சொல்வளமும், பொருட்செறிவும் நிறைந்த கவிதைகளை அவர் எழுதியது, தமிழ் கூறும் நல்லுலகுக்கு கிடைத்த மாபெரும் சிறப்பு என்றே கூறவேண்டும்.

யோகியாரது கவிதைகள் எளிமையானவை. அதே சமயம் பண்டிதர்களில் இருந்து பாமரர்கள் வரை ஒரு முகத்துடன் பாராட்டப்பட்டவை. கவிதைகளின் ஆழம் அதன் இலக்கிய நயம் இரண்டும் அவர் ஒரு மிகச் சிறந்த கவிஞர் என்று இன்றும் பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றன

பாரதிக்கு பின் வந்த கவிஞர்களில் யோகியார் தனித்து நிற்கிறார் என்று கூறினால் அது மிகை அல்ல. யோகியாரின் பல்வேறு சிறப்புகளை எடுத்துக் கூறும் முன் அவர் எழுதிய கவிதைகளின் மூலமே ஒரு தன்னிலை விளக்கத்தையும் நாம் குறிப்பிட்டுக் கூறலாம். அவரே கூறுகிறார். "சொல்லினாலே கவி சொல்ல வந்தேன்" என்று. அம்மகாகவி, கோடி கவிதைகள் எழுதி இருக்கிறாரோ இல்லையோ அவர் எழுதிய எழுத்துக்கள் மக்களால் பாராட்டப்படுகின்றன என்பது மட்டும் உண்மை.

கவிதை, இசைப்பாடல்கள், கட்டுரை, கதை, நாடகம் திரைப்படவசனங்கள் என்று பல துறை வித்தகராக திகழ்ந்த யோகியார் தமிழன் தேடாமல் பெற்ற செல்வம் இவரைப் பற்றி ஒரு புத்தகம் எழுத வாய்ப்பளித்த சாகித்ய அகாடமிக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறந்தும் இறவாமல் தனது தமிழ்த் தொண்டினால் இன்றும் வாழ்ந்துவரும் மகாகவி யோகியார் அடி போற்றி இந்த நூல் எழுதத் துவங்குகிறேன்.

எஸ். ஆர் அசோக் குமார்

(சலன்)

1. யோகியாரின் பிறப்பும் வளர்ப்பும்

'கவிஞன் பிறக்கிறான்' என்பதற்கொப்ப இந்தப் பாரத பூமியில் 1904-ம் ஆண்டு நவம்பர் 30-ம் நாள், கேரளாவில் உள்ள எல்லப்பள்ளி கிராமத்தில் துரைசாமி-மீனாட்சியம்மாள் இருவருக்கும் யோகியார் பிறந்தார்.

சுப்பிரமணியன் என்ற பெயர் அவருக்கு சூட்டப்பட்டது. நாளடைவில் அது மருவி சங்ககிரி துரைசாமி சுப்பிரமணிய யோகியார் என்றானது.

எல்லப்பள்ளி கிராமத்தில் பிறந்தாலும் இவரது பள்ளிப் பருவம் ஈரோடு மகாஜன உயர்நிலைப்பள்ளியில்தான் கழிந்தது. இவரது தந்தையார் துரைசாமி ஐயர் இந்தி, உருது, பாரசீக மொழிகளில் மிகுந்த புலமை பெற்றவர்.

இவர் திருக்குரானின் சிறப்புகளையும் அதன் உட்பொருளையும் விளக்குவது கேட்டு, முகமதிய சகோதரர்கள் மெய்சிலிர்த்து நிற்பர். ஐயரின் புலமைக்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு. அந்நாளில் ஐயரவர்கள் ஐதராபாத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றியவர். இவரது ஆங்கிலப் புலமை அனைவராலும் அன்றே பாராட்டப்பட்டது.

முகமதியரின் சட்டத்தை முறையாகப் பயின்று பல பொதுநலத் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இறுதிவரையில் எல்லோருக்கும் நல்லவராகவே விளங்கியவர். துரைசாமி ஐயர் தனது 38-வது வயதில் நோயினால் பாதிக்கப்பட்டு மறைந்தார். தாயார் மீனாட்சியம்மாள் தேசபக்தியுடன் தெய்வபக்தியும் கொண்டவர். தன் மகனை அன்போடு வளர்த்து வந்தார். பல நற்பண்புகளை அணிகலனாக தன் மகனுக்கு சிறுவயதிலேயே அணிவித்து மகிழ்ந்தார். இதனால் மகனை வாழ்க்கையில் உயர்நிலை அடையச் செய்தார். மீனாட்சியம்மாளின் பாக்யம்தான் மகனை அவர் வாழ்ந்த காலத்திலேயே சான்றோனாகப் பார்த்து மகிழ முடிந்தது.

மகாகவி பாலபாரதி, ச.து.சு. யோகியார் தன் தந்தையாரின் சிறப்புக்குரிய ஆங்கில தமிழ்ப் புலமையும் கொண்டு திகழ்ந்தார். சர்வமத சமுதாய நோக்கும், பொதுப்பணி, நாட்டுப்பற்று ஆகியவற்றை ஒருங்கே பெற்றவராகத் திகழ்ந்தார். பக்திப் பாடல்களைப் புனைந்ததற்கு இவரது அன்னையாரே காரணமாக இருந்தாரெனக் கூறலாம்.

தந்தையாரின் மறைவுக்குப் பின்னர் யோகியாரின் குடும்பம் சங்ககிரிக்குக் குடிபெயர்ந்தது. யோகியார் அங்கிருந்த தொடக்கப் பள்ளியில் ஆரம்பக் கல்வி பயின்றார். பின்னர் ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921-ம் வருடம் எஸ்.எஸ்.எல்.சி. தேறினார். அவர் பயின்ற நூல்கள்தான் யோகியாரைப் புகழ்பெற்ற அறிஞராகச் செய்தது.

யோகியார் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத புலமையில் தேர்ச்சி பெற்றவராக விளங்கிவந்தார். சமஸ்கிருத மொழியில் பல நூல்களை இவரது ஆற்றல், மொழிபெயர்த்துத் தந்தது.

"பாலபாரதி" பட்டம் சிறிய தந்தையாரால் இவருக்கு சூட்டப்பட்டது. பாரதி வெங்கடேச ஐயர் இதனால் அகமகிழ்ந்தார். பட்டம்பெற்ற விவரத்தை யோகியார் அவர் சகோதரர் ச.து.ராமச்சந்திரனிடம் கூறினார்.

"சிறிய தந்தை பாலபாரதி வெங்கடேச ஐயர்தான் எனது கவிதை குருவாக விளங்கினார். ஒரு நாள் இரவு இவரை மொட்டை மாடிக்கு வெங்கடேச ஐயர் அழைத்துச் சென்றார். அவர் யோகியாரிடம் அந்நாள் நன்னாள் எனவும், நலம் செய்ய உரிய நாளெனவும் தெரிவித்தார். இப்படிப்பட்ட நல்ல நாளில் 'பாலபாரதி' என்ற பட்டத்தை உனக்கு நான் வழங்குகிறேன். இனி நீ பாலபாரதி சுப்பிரமணி என்ற பெயர் பெறுவாய் எனக்கூறி யோகியாரின் தமிழ்ப் பற்றைத் தூண்டிவிட தூண்டுகோலாகத் திகழ்ந்தார்."

குரு வெங்கடேச ஐயர் கவிதையின் முற்பாதியைச் சொல்வார். யோகியார் பிற்பாதியைச் சொல்லி முடிப்பார். இவ்வாறு அவரது கவித்திறன் பயிற்சி வளர்ந்து வந்தது. அன்று தமிழ்க் கவிதைப் பயிற்சியைத் தொடங்கிய வெங்கடேச ஐயர் ஒரு தீர்க்கதரிசி என்றே கூறலாம்.

ஒரு சமயம் மதிய உணவருந்த தாயார் மீனாட்சியம்மாள் யோகியாரை அழைத்தார். வழக்கம் போல புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு உணவருந்தச் சென்றார். தாயாருக்கு தன் மகன் மீது அளவிலாத கோபம். ஏனென்றால் அவர் சமைத்துப்போடும் உணவை ருசித்து சாப்பிடுவது இல்லையே என்ற ஏக்கம்தான். கையிலிருந்த புத்தகத்தைத் திறந்தார். படிக்கத் தொடங்கிவிட்டார். தட்டில் என்ன இருக்கிறது என்பது கூட யோகியாருக்குத் தெரியாது. தாயார் அவரைச் சோதிக்க குழம்பிலிருந்த கறிவேப்பிலை கொத்தை மட்டும் தட்டில் வைத்துவிட்டு ஓரமாக நின்று பார்த்தார். யோகியார் புத்தகத்தில் ஆழ்ந்திருந்திருந்ததால் கறிவேப்பிலையை எடுத்து உண்டார். அதன்பின் தாயார் கட்டித் தயிரை ஊற்றினார். அதையும் சாப்பிட்டார் யோகியார்.

"சாப்பாடு முடிந்ததா?" என்றார் தாயார். "வயிறும் நிரம்பி விட்டது" என்றார் பிள்ளை. உடனே எழுந்தார். அது கண்டு தாயார் பதறிப் போய் பக்கத்தில் வந்து "நீ சாப்பிட்டது சாதமல்ல கறிவேப்பிலையும், தயிரும்தான். அதற்குள் எழுந்து கொண்டாயே" எனக் கூறினார்.

"அப்படியா சாதம் போடுங்கள் சாப்பிடுகிறேன்" எனத் திரும்பவும் அமர்ந்தார்.

"உன் புத்தகப் படிப்பினால் இலையில் என்ன இருக்கிறது என்று கூடத் தெரியவில்லையே கொஞ்சம் கவனத்தோடு சாப்பிடக்கூடாதா?" என அன்போடு யோகியாரை அன்னையார் வினவினார். 'உங்களுக்குத் தெரியாதா எனக்கு என்ன தர வேண்டுமென்று, நீங்கள் எது தந்தாலும் சாப்பிடுகிறேன்' எனக் கூற தாயாரின் கண்களில் கண்ணீர் மல்கியது.

தாயைத் தெய்வமாக மதிக்கும் தமிழ்த் திருநாட்டில் அதற்கு உவமையாக அவதார புருஷராக யோகியாரைக் கூறலாம். ஒன்பதாவது வயதிலேயே பாலபாரதி பட்டம் பெற்றார். முதல் நூல் 1924-ம் ஆண்டு வெளிவந்த "தேசபக்தகீதம்". இது ஒரு தனிப் புத்தகமாக அன்றே வெளிவந்தது. அதில் காப்புச் செய்யுளாக விநாயகப் பெருமானை துதித்துப் பாடிய வெண்பா சிறப்பானது.

சீர்பூத்த சக்தி திருவருளையான் பேச
நீர்பூத்த வேணி நிமலனருள் - ஏர்பூத்த
குஞ்சரத் தானைத்துக் கோமான் கணபதியின்
அஞ்சாணமாகும் மன்னரன்

இப்படிக் கணபதியைப் போற்றிப்பாடிய யோகியார் எதிர்காலத்தில் மிகச்சிறந்த கவிஞராக வருவார் என்பதற்கு இந்தக் காப்புச் செய்யுள் ஒன்றே சான்று.

யோகியாரின் பள்ளி நாட்கள்

மூத்த சகோதரர் யோகியாரின் பள்ளி நாட்களை நமக்காக நினைவு கூர்கிறார் இளையவர் ராமச்சந்திரன். "குஞ்சண்ணா". (அப்படித்தான் யோகியாரை தம்பி அன்போடு அழைப்பார்.) படிப்பில் என்றுமே முதல் மாணவன்தான். புத்தகமும் கையுமாக இருந்தவரை பந்து விளையாட அழைத்துச் சென்றேன். விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது பந்து ஒரு முறை குஞ்சண்ணாவிடம் சென்றது. அவர் ஓங்கி (பேட்) மட்டையில் அடிக்க அப்பந்து ஓரிரு வீடுகள் தள்ளிப் பாய்ந்து சென்றது. அது கண்டு அனைவரும் அவரைக் கேலி செய்தனர்.

பந்தைத் தேடிச் சென்ற நண்பர் பந்தைக் காணாது கோபத்துடன் திரும்பி வந்தார். அவர் யோகியாரிடம் 'நீ இந்த விளையாட்டிற்கு தகுதியற்றவன்' என்றார்!' இப்படி நண்பர் சொன்னதும் அன்றுமுதல் யார் விளையாடக் கூப்பிட்டாலும் விளையாடச் செல்லமாட்டார். ஆனால் இளைஞர்கள் விளையாட வேண்டும்; விளையாட்டுத் துறையில் நம்நாடு முதல்நிலை பெறவேண்டும் என விரும்பினார். தன் கவிதையில் குழந்தைகள் ஒற்றுமையாக விளையாட வேண்டுமென யோகியார் வலியுறுத்திக் கூறியுள்ளார். பின்னாளில் யோகியார் சிறுவர்களுக்காக சித்ர அரிச்சுவடி போன்ற பல நூல்களை தமிழில் எழுதியுள்ளார். குழந்தைகள் தங்களது பள்ளி நாட்களில் படிப்பில் மட்டுமே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் விரும்பினார்.

திருமணம்

யோகியாருக்கு இறைவனிடமும், யோகத்தைப் பயின்ற பல யோகிகளிடமும் மெல்ல, மெல்ல தொடர்பு ஏற்பட்டது. பரம்பொருளை எண்ணி எண்ணி மனம் ஒன்றிட வேண்டும். இந் நினைவு கொண்ட யோகியாருக்கு திருமணம் செய்து வைக்க தாயாரும், உறவினரும் முடிவெடுத்தார்கள்.

உறவிலேயே மணம் செய்ய ஒரு பெண்ணைத் தேர்ந்து எடுத்தனர். அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் யோகியார் சாமியார் ஆகப் போகிறார் என பேசிக்கொண்டனர். அது தவறு என்பதை நிருபிக்கவே இந்த திருமண ஏற்பாடு என்பதை அவருக்கு வேண்டியவர்கள் நினைத்தார்கள்.

யோகத்திலும், பக்தியிலும், சித்தர்களின் செயல்களிலும் தன்னை ஆட்படுத்திக்கொண்டார். அத்தகைய யோகியாருக்கு திருமணச் செய்தி பெரும் இடியாகக் காதில் விழுந்திருக்க வேண்டும்.

திருமணத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாக யாருக்கும் தெரியாமல் யோகியார் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். யோகியார் எங்கிருக்கிறார் என பலர் பல பக்கம் தேடி அலைந்தார்கள்.

யோகியார் ஈ.வெ.ரா. பெரியார் அவர்களிடம் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார். சிலர் பெரியாரைக் கண்டு யோகியாரைப் பற்றி விசாரித்தார்கள். பெரியாரும் தயங்காமல் சட்டென 'குணவேல் சுவாமிகளிடம் போய்க் கேள்' என்றாராம்.

குணவேல் சுவாமிகளை குரு என்று ஏற்றுக்கொள்ள பலர் தயங்கினார்கள். ஆனால் யோகியார் மட்டும் இறுதிவரை சுவாமிகளின் சீடராகவே வாழ்ந்தார்.

குணவேல் சுவாமிகளின் சொல்லைத் தட்டாமல் யோகியார் திருமணம் செய்து கொண்டார். திருமணத்தால் தனக்கிருந்த விருப்பமும், நாட்டமும் குறையாதா என்றார். அப்படியெல்லாம் ஏதும் ஆகிவிடாதென சுவாமிகள் யோகியாரிடம் தெரிவித்தார்.

ஈரோடு அப்பாச்சிமார் மடத்தில் இவரைக் கண்டுபிடித்தனர். 1925ம் ஆண்டு ஈரோட்டிலுள்ள அக்ரகாரத் தெருவில் நடைபெற்ற 5 நாள் திருமணத்தில் கமலம்மாவை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

யோகியார் அன்னை காளியிடம் அளவிலாத பக்தி கொண்டிருந்தார். ஆண்டவனிடத்தில் சரணடைய வேண்டுமென நினைத்திருந்தார். நாள்தோறும் குளித்து முடித்ததும் பூஜை செய்ய உட்கார்ந்துவிடுவார். பூஜை பல மணி நேரம் நடக்கும்.

நமக்கென்ன வேண்டும் என்பது தேவிக்குத் தெரியும். நாம் எதையும் கேட்கக்கூடாது. அவர் தரும் இன்ப துன்பங்களை மகிழ்ச்சியோடு நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதே யோகியாரது கொள்கையாகும்.

பூஜை முடித்துவிட்டு காளியை நினைத்துக் கவி மழை பொழிவார். சுருங்கச் சொன்னால் நான் எங்கே பாடுகிறேன் என் குரலின் மூலம் காளிதானே பாடுகிறார் என்று கூட கூறி இருக்கிறார்.

"பாடு நீ என்பார் எங்ஙனம் பாடுவேன்
உண்மையறிந்திலர் உலகத்து மக்கள்
பாடும் குரல் நான்; பாடுவாள் காளி"

இன்னொரு இடத்தில்

"நீயே கர்த்தா நான் கருவி
நீயே நெஞ்சக நித்திய விளக்கு
நீ பாட்டிசைப்பாய் நான் கேட்டிசைப்பேன்
என்னைப் பாடென்பார் இதனை அறியார்"

எல்லோரும் காளியைப் படங்களில் பார்த்திருக்கிறோம். புகைப்படங்களை வாங்கி கண்ணாடி போட்டு மாட்டியிருக்கிறோம். காளி கருப்பா சிவப்பா என்று கேட்டால் சிலர் யோசிப்பார்கள். சிலர் நீல நிறம் என்பார்கள். ஒருசிலர் கருப்புதான் என்பார்கள். இதைத் தெளிவாகப் புரிந்து யோகியார் அழகாகக் கூறுகின்றார்.

"கருப்புத் தெய்வமடா - தம்பி
காளித் தெய்வமடா!
விருப்புற்று நமக்கே - அவள்தான்
வேண்டுவன தந்து வினையறுப்பாளடா!

இப்பாடலின் சிறப்பு யாதெனில் அண்ட சராசரம் ஆளும் நமக்கு வேண்டியதைக் கொடுத்து நம் வினையறுப்பாள். நற்பயன் வராது மனம் மகிழ்வடையாது. முதலில் நலம் தந்து பின் தீய சக்திகளை அழிப்பாளாம் காளி.

யோகியாரின் சிறப்புகளைக் கூறும்போது அவரது கவி ஆற்றிலின் சொல்லாட்சியைக் குறிக்காமல் இருக்க முடியாது. காளியைப் பற்றி சொல்லிக் கொண்டே வரும் யோகியார் ஆணழகி என ஓரிடத்தில் புதிய சொல்லாட்சியை எடுத்துக் கூறுகிறார்.

"வெள்ளி வான் பாற்கடலின்
வேதத்து அனந்தன் மேல்
அள்ளும் - மது விழியால்
அம்பிகை என் ஆணழகி"

தீவினையை அழிக்க வந்துள்ள சக்தி காளி. அந்தக் காளி ஆண்மைத் தன்மைகொண்டு பல செயல்களைப் புரிகின்றாள். அதனால் அவளை ஆணழகி என அழைத்துப் பெருமையடைகிறார், நம் யோகியார்.

எப்படியோ தினந்தோறும் அவர் காளியைப்பற்றிப் பாட்டெழுதாமல் இருக்க மாட்டார். காளியைப் பல்வேறு வடிவங்களில் பார்க்கிறார்.

பராசக்தியாக, தேவியாக, பாரத மாதாவாக இவர் பார்ப்பதின் விளைவு அங்கும் ஒரு புதிய சொல்லாட்சி மலர்கிறது. தமிழ்க்குமரியை வர்ணித்து வரும் யோகியார் பளிங்கனையை என்ற வார்த்தையை மிக அழகாகக் கையாண்டிருக்கிறார்.

"இளங்கோவின் சிலம்பு முறல் இன்னிசையில் தவழ்ந்து
இணைக்குறள் முப்பாலுண்டு குறுகு நடைபயின்று
களங்கமிலாப் பக்தியினால் பன்னிருவர் நால்வர்
கற்கண்டு சொற்கோவைக் கவி மாலை புனைந்து
பளிங்கனையை கவிக்கரசன் கம்பனெனும் தேவன்
பண்ணிவைத்த காவியத்தின் பசும்பொன்முடி தரித்த
இளங்குமரி தமிழ்த்தாய்தான் என்றென்றும் பாடும்
இளந்தமிழ்நாட் டீடொப்ப தில்லை எந்த நாடும்"

மற்றோரிடத்தில் பராசக்திதான் அவர் நெஞ்சத்தில் முழுமையாக வியாபித்து இருக்கிறாள் என்கிறார்.

"தேவி பராசக்தி அன்னைதான் - எந்தன்
சிந்தைக் கருக்கலில் மின்னுவாள்- அவள்
ஆவி பெரிதென எண்ணுகோ - வானக்
காவியல் அண்டங்கள் யாவுமே - அவள்
காலடியின் சிறு தூசிகள் - வனப்
பூவெனும் நல், விழியினாள் - பாதம்
போற்றிப் பணிவது நம் தொழில்"

யோகியார் எதைப் பற்றிப் பாடினாலும் காளியைக் குறிக்காமல் பாடியதில்லை எனலாம்.

காளியாத்தா காளியாத்தா என ஆரம்பிக்கும் இசைப் பாடலாக இருந்தாலும் சரி, காளியம்மை என்மேல் கருணை கொண்டு சில நாள் என்று கூறும் இரங்கல்பாவாக இருந்தாலும் சரி, யோகியாரைப் பொருத்தவரை எல்லாமே காளி, காளி, காளிதான்!

மகளின் மறைவு

திருமணம் முடிந்தது.

யோகியார் இல்லறம் கண்டார். முதல் குழந்தை, பிறந்த முதல் மாதத்திலேயே இறந்தது. அடுத்தடுத்து பிறந்த குழந்தைகளும் தங்காமல் மறைந்தன. ஆறாவது குழந்தையாக ஒரு பெண் பிறந்தாள். அக்குழந்தைக்கு ராஜம் எனப் பெயரிட்டனர். ராஜம் பிரச்னையில்லாமல் ஒன்றரை வயதுவரை வாழ்ந்தாள். பிறந்த குழந்தைகள் எல்லாம் ஒரு சில மாதங்களிலேயே மறைந்தன. ஆனால் இந்தக் குழந்தை ஒன்றரை வயது வாழ்ந்ததால் ராஜம் தங்கிவிடுவாள் என்ற நப்பாசை அவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

குழந்தைக்கு ஒன்றரை வயதாகும்போது கொடிய நோய் தாக்கியது. யோகியார், அவரது துணைவியார், தாயார், குடும்பத்திலுள்ள அனைவருமே ராஜம் உயிரோடிருக்க வேண்டுமென எல்லா தெய்வங்களையும் வேண்டினார்கள்.

நாம் ஒன்று நினைக்க ஆண்டவன் வேறு விதமாக அல்லவா நினைக்கிறான். ஐந்து குழந்தைகளைப் பலி கொண்ட யமன் ஆறாவது குழந்தைக்கும் பாசக்கயிற்றை வீசினான். உண்மைதான். பாசத்துக்கும், எமனுக்கும் அங்கே மிகப் பெரிய போட்டியோ, சண்டையோ நடந்திருக்க வேண்டும். ஆனால் முடிவில் வென்றது எமன்தான்! சோகம், சந்தோஷம் இந்த இரண்டில் எதுவானாலும் சரி கவிஞர்களிடமிருந்து வெளிப்படுவது அருமையான கவிதைதான்!

யோகியார் தன் கண்மணி ராஜத்தை நினைத்துப் பாடினார். அதனால் ஒரு கவிதை தமிழுக்கே கிடைத்தது. அந்நாளில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட மொழிகளில் இக்கவிதை மொழிபெயர்க்கப் பட்டது. இப்படி நாற்புத்தொன்பது பாடல்கள் உருவாயின.

ஆரம்பத்திலேயே எங்கே நீ போனாய் என்று தான் தொடங்குகிறார் யோகியார்.

"சின்னஞ் சிறு குழந்தை
சிங்காரப் பெண் சிறுமி
என் நெஞ்சு அமுதூற்றும்
இனிமை எங்கு போனதுவோ

இந்த இரங்கற்பாவில் உவமைகள் கொட்டிக் கிடக்கின்றன. புதிய சொல்லாட்சி மிளிர்கின்றது. ஆனால் இவை அனைத்தும் எளிய நடையில் இருப்பதுதான் யோகியாரின் கவிச்சிறப்பு.

"வானத்தே ஒரு சுடர்தான்
வையத்தைப் பார்ப்பதற்கு
மீனத் திரள் வடித்த

மின்அரசி போல்வந்தாள்
தேசம் எல்லாம் சுற்றும்
சிறு பறவை சின்னேரம்
வீசும் கிளை ஒன்றில்
விற்றிருந்து போவது போல்
காலையிலே கண்விழித்துக்
கடும் புயலில் அகப்பட்டு
மாலையிலே வாடி
வதங்கியதோர் மலரைப் போல
ஆண்டு இரண்டு கூட
நிறையாத ஆயுளுடன்
மாண்டு விட்டாள் என்னுடைய
மண் உயிராம் பெண் பாவை"

அருமை மகள் ராஜத்தின் மறைவு அவரை உலுக்கியது, இப்பாடல்கள் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

பெயர் வந்த காரணம்!

சிறுவயதிலிருந்தே கவி புனையும் ஆற்றலை யோகியார் பெற்றிருந்தார். யோகத்தில் அதிக நாட்டங் கொண்டவராகவும் திகழ்ந்தார். யோகிகளிடம் சீடனாகச் சேர்ந்து யோக ஞானத்தை வளர்த்துக் கொள்ள விரும்பினார். மகான் - குணவேல் சுவாமிகள் இவருக்கு குருவாக அமைந்து வழிகாட்டினார்.

யோகியார் பூஜை செய்யும்போது அறைக் கதவைத் தாழிட்டுக் கொள்வார். பல மணி நேரம் பூஜை செய்யும் பழக்கமுடையவர். இதனால் சித்த யோகத்தில் ஒரு நிலையை அடைவதற்கு இவரால் முடிந்தது.

சிறுவயதில் அவருடைய நண்பர்கள் கு.ராஜவேலு, எல்.கே. முத்துசாமி ஆகியோருடன் விளையாடினார். யோகத் திறமையைப் பற்றிப் பேச்சுவாக்கில் அவர்களிடம் சொன்னார். அதனால் அவர்கள் சந்தேகப்பட்டதாலே என்னவோ ஒரு பள்ளத்தைத் தோண்டச் செய்து அதில் படுத்துக் கொண்டார். மண்ணைப் போட்டு மூடவும் செய்தார். மாலை முடிந்து இரவு நெருங்கியது.

விளையாட்டில் திளைத்த இளைஞர்கள் இவரை மறந்துவிட்டு, வீட்டுக்குச் சென்றுவிட்டனர். தாயார் மீனாட்சியம்மாள் தன் மகன் வீடு திரும்பவில்லை என்று மகனைத் தேடத் தொடங்கினார். அவருடைய நண்பர்களிடம் விசாரித்தபோதுதான் அவர்களுக்கே யோகியாரின் நினைவு வந்தது.

பள்ளத்தில் மண் போட்டு மூடிய நண்பனை எண்ணி ஓடிவந்து மூடிய பள்ளத்தைத் தோண்டி அவரை வெளியே எடுத்தார்கள். அப்போது யோகியார் தூங்கி எழுவது போல் எழுந்து அமர்ந்தாராம்.

அன்று முதல் யோகி என்ற பெயர் இவருடன் இணைந்தது. சாதாரண சுப்பிரமணியாக இருந்த இவர் சுப்பிரமணிய யோகியானார்.

அவ்வப்போது தனது யோக நிலைகளைத் தானே பரிசோதித்துக் கொள்ளும் தன்மையுடையவர் யோகியார்.

சிவபெருமான் ஆலகால விஷத்தை எப்படி அவரது தொண்டையில் நிறுத்திக் கொண்டாரோ, அதுபோல் ஆலகால விஷத்தை உண்டு தன் திறமையைத் தானே சோதித்துப் பார்த்துக் கொண்டார்.

சிருங்கேரி சாரதாபீடம் மகா சன்னிதானமான சந்திர மௌளீஸ்வரரைப் பார்க்க ஒருமுறை யோகியார் சென்றார். மகா சன்னிதானம் முதல் மாடியில் இருந்தார். உள்ளே வந்து நின்ற யோகியார் அவரைப் பார்க்க மாடிக்குச் செல்ல அனுமதி கேட்டார். அருகிலிருந்த பல பக்தர்கள் நீங்களே மேலே சென்று பார்க்கலாமென கூறினார்கள்.

சன்னிதானம் மேலே வரச் சொல்கிறார் போலும் என நினைத்து, மாடிப்படி ஏறி மேலே சென்றார். யோகியாரைப் பார்த்த மாத்திரத்தில் மகா சன்னிதானம் "யோகியாரே நீங்கள் ஏன் மேலே வந்தீர்கள், சொல்லியிருந்தால் நானே கீழே வந்து இருப்பேனே" என்றார்.

ஞானாந்தகிரி சுவாமிகள் தனது தபோவனத்திற்கு யோகியார் வந்துவிட்டார் என்றால், மிகப் பெரிய கொண்டாட்டமாக நினைத்து மகிழ்வார். காரை சித்தர் எழுதிய "கனகவைப்பு" என்ற தமிழ் நூலை யோகியார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். மூல நூலையே யோகியார்தான் எழுதினார் என்று கூடச் சிலர் கூறுவார்கள்.

யோகியார் சித்தரைக் காண எப்போது சென்றாலும் அவருக்குச் சமமாக ஒரு நாற்காலியைப் போடச் செய்து, அதில் யோகியாரை அமரச் செய்வார்

ஒருமுறை குணவேல் சுவாமிகளைக் காண யோகியாரும் அவரது இளைய சகோதரர் ச.து. ராமச்சந்திரனும் ரிஷிகேசம் சென்றார்கள். யோகியாரைப் பார்த்ததும் சுவாமிகளுக்கு மிகவும் சந்தோஷம். சுவாமிகள் சமாதி அடையப் போவதாக தெரிவித்தார். நீ வந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சி. சமாதி அடைந்தபின் பூத உடலை என்ன செய்ய வேண்டுமென யோகியாரிடம் தெளிவாகத் தெரிவித்துவிட்டு, சமாதி அடைந்தாராம் அந்த மகான்.

இவ்வாறு பல்வேறு ஆச்சாரியர்களும், சுவாமிகளும், சித்தர்களும் யோகியாரின் காளி பக்தியையும், யோகத் திறமையையும், நற்பண்புகளையும் உணர்ந்து போற்றினார்கள்.

மகாகவி யோகியாரைப் பொருத்தவரை பள்ளிப் பருவமும், வாலிபப் பருவமும் அதிக வித்தியாசமானதல்ல. காரணம் அவருக்கு பகல், இரவு எல்லாமே ஒன்றுதான். ஆனால் தேவையானது புத்தகங்கள்தான்.

அவருக்கு வெளியுலகம் தெரியாதென யாரும் எண்ணக்கூடாது. அவரது வீட்டுக்கருகே தனியார் நடத்திய நூலகம் இருந்ததாம். அதில் இவர் படிக்காத நூல்கள் மிகக் குறைவாகத்தான் இருக்கும். ஒருநாளில் 24 மணி நேரம் கூட அவருக்கு நூல்களைப் படிக்க போதாமல் இருந்தது. அவர் படித்த நூல்களை மனம் என்ற ஏட்டில் எழுதி ஆழப் பதிய வைத்துக் கொள்வார். அவரது குணங்களில் இது ஒப்பற்றதாகும். சில நூல்களில் முக்கியமான இடங்களில் பென்சிலால் கோடிட்டு வைப்பார். அவரது சொந்தப் புத்தகத்தில்தான் அவ்வாறு செய்வார்.

இவரது தலையாய பண்பில் ஒன்று புத்தகங்களை வாங்கிச் சேர்ப்பது. மற்றவரிடமிருந்து வாங்கி வரும் புத்தகங்களைப் படித்ததும் திருப்பித் தந்துவிடுவார்.

ஆனால் இவரிடமிருந்து புத்தகத்தை வாங்கிச் செல்வோர் திரும்பக் கொடுக்கவே மாட்டார்கள். யோகியார் அத்தகைய செயலுக்கு நேர்மாறானவராக விளங்கினார்.

தேசப்பற்று

யோகியாரைப் பொருத்தவரை நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் இரு கண்களாகவே அவருக்கிருந்தன.

ஒவ்வொரு காலகட்டத்திலும் கவிஞர்கள் நாட்டுக்காக, மொழிக்காக பாடிய பல பாடல்கள் சாகாவரம் பெற்றவை. யோகியாரும் அதற்கு விதிவிலக்கல்ல. தேசபக்த கீதத்தில் இருந்து ஆரம்பித்து அவர் வாழ்ந்த காலம் வரை நாட்டையும், மொழியையும் போற்றித்தான் என்றென்றும் பாடியுள்ளார். இவரது நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் யோகியாரின் கவிதைகளில் நாம் காண்கிறோம். தாய்நாட்டுப் பற்றைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து வந்துள்ளார்.

யோகியார் காளி உபாசகராக இருந்தார். அவரது எழுத்துக்கள் அனைத்தும் காளி தேவிக்கே அர்ப்பணம் என்று சொல்லாமல் சொல்வதாய் இருந்தது. அவர் காளி, சக்தி, தேவியை வாழ்த்தி எழுதிய பாடல்கள் எண்ணற்றவை. தனது நாட்டை பாரத மாதாவாகவும், பாரத தேவியாகவும் கவிபுனைந்து பாடி மகிழ்ந்து உள்ளார்.

தேசபக்தியும், தெய்வபக்தியும் கொண்டவராகவே யோகியார் விளங்கி வந்தார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சொல்லுக்கு ஏற்ப, சமதர்ம சமுதாய நோக்கம் கொண்டவர். தணியாத தமிழ்க்காதல் தேசபக்தியாக வளர்ந்தது. அதனால் சுதந்திர வேட்கையோடு புதியதோர் உலகைப் படைக்க எண்ணி கவிப்பூக்களால் பாதை வகுத்தவர்.

வாழ்க மணிக்கொடி பாரத மெய்க்கொடி வாழ்கவே அதை வந்து பணிந்து மகிழ்ந்திட வீரர்கள் சூழ்கவே என்ற பாடல், அன்றைய காங்கிரஸ் பொன்விழாவில் பாட்டாக ஒலித்து சிறப்புப் பரிசைப் பெற்றது.

சுருங்கச் சொன்னால் தமிழ்நாடு அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக உருமாறியிருக்க வேண்டிய பாடலை யோகியார் எழுதியுள்ளார். தமிழ்க்குமரி என்னும் நூலில் உள்ள அப்பாடல் இதோ ;

"பங்கயத்துக் குமரி முனைப் பாதம் சேர்ந்தாள்
பசும் பொன்முடி வேங்கடத்தைப் புனைந்தங் கார்த்தாள்
பொங்கிவரும் காவிரியை இடையில் கோத்தாள்
புறமூன்றும் கடற்கன்னி பணியப் பார்த்தாள்
மங்கலம்சேர் மேலைமலைச் செங்கோ லூற்றாள்
மலர் மொட்டுலங்கையெனும் மகளைப் பெற்றாள்
எங்கள் குலத் தெய்வம் தாய் - எமக்கு வீடு
இளமை குன்றாக் கன்னி எங்கள் தமிழர் நாடு.

தேசபக்தி, நாட்டுப்பற்று கொண்டிருந்த கவிஞர்கள் மகாத்மா காந்தியைப் பற்றி கவிதை எழுதாமல் இருக்க முடியாது.

மகாகவி யோகியார் மகாத்மா காந்தியைப் பற்றி கூறும்போது

தலையணை இடைக்கை யாகும்
தரையதே படுக்கையாகும்
கலைமுடி கருத்தே யாகும்
கருணையே உருவமாகும்
நிலையுற லகமே யாகும்
நித்தியன் பாதம் போற்றும்
நலமுள்ள காந்தியென்னும்
ஞானியாமவன்றாள் போற்றி!

என்று காந்தியை ஞானியாகக் கூறிய யோகியார் கவிதைகள் நம் நாடு விடுதலை அடைவதற்கு முன்னர் வெளிவந்தவை. அவை அனைத்தும் நாட்டுப் பற்று மிக்குடையதாகவும், சுதந்திர எழுச்சியைத் தூண்டிவிடக் கூடியதாகவும் இருந்தன.

விடுதலைப் போராட்டத்தில் யோகியார்

மகாகவி யோகியார் ஒரு சிறந்த தேசபக்தர். தாய்நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர். உதக மண்டலத்தில் காவல்துறை அலுவலகத்தில் ஆரம்ப காலத்தில்

பணியாற்றினார். காந்தியடிகளின் கட்டளைக்கு இணங்கி அவ்வேலையைத் துறந்தார். காங்கிரஸ் பேரியக்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார். இந்த நாட்டிற்குத் தொண்டாற்றினார். அந்நேரத்தில்தான் மகாத்மா காந்தி அவர்கள் உப்பு சத்தியாகிரகத்தில் எல்லோரையும் இணையுமாறு அறைகூவல் விடுத்தார். அவரது வேண்டுகோளை ஏற்று யோகியார் சென்னையில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டார்.

ஈ.வெ.ரா. பெரியார் அவர்களோடு வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டார். நமது தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய பலரில் மகாகவி யோகியாரின் பணி சிறப்பானது. காரணம் பலமுறை விடுதலைப் போரில் பங்கு கொண்டார். அதனால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

ஒன்றரை ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். அந்த அனுபவத்தை வைத்து "எனது சிறைவாசம்" என்ற தலைப்பில் ஒரு தொடர் கட்டுரை எழுதினார். குறிப்பாக சொல்லப்போனால் காந்தியடிகளின் சுதந்திரப் பேராட்டத்தில் கலந்து கொண்டார். 1932-ம் ஆண்டு ஜனவரி 22-ம் நாளன்று ஈரோட்டில் தடை உத்தரவை மீறி போராட்டத்தில் யோகியார் ஈடுபட்டார். அதன் விளைவு சிறையிலடைக்கப் பட்டார். எட்டுத் திங்கள் கடுங்காவலும், இருபத்தைந்து ரூபாய் அபராதமும் தண்டனையாகப் பெற்றார். பணம் செலுத்தத் தவறினால் மேலும் ஆறுவாரம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றார். அவர் அபராதம் செலுத்தவில்லை. அதனால் தொடர்ந்து சிறையிலே இருக்க நேர்ந்தது.

"சிறைச்சாலை ஓர் தவச்சாலை, புன்மைக்கோட்டம், இழிவுக்குகை, ஆனால் அதுதான் நமது சுதந்திர தேவியின் கோயிலின் வாயில். அடிமைத் தனத்தின் குறுகிய சந்துகளில் சென்றால்தான் நாம் அழகிய அகண்ட விடுதலையின் இராஜ பாட்டையில் நடக்கமுடியும். ஆகவே சிறைச்சாலையை நான் வணங்குகிறேன், வாழ்த்துகிறேன், போற்றுகிறேன். சிறைகள் நீடுவாழ்க!" என்றார். யோகியார் சிறையில் தாம் அடைந்த துன்பங்களையெல்லாம் "எனது சிறைவாசம்" என்ற கட்டுரையில் கூறியுள்ளார்.

சிறைச்சாலையில் மனங்கவரும் கவிதைகளைப் புனைந்தார். சிறைச்சாலை இவரை கவிஞராக மாற்றியது என்றால் அது மிகையாகாது. யோகியாரைப் பொருத்தவரை பிரச்சனை என்பது சிறைச்சாலையல்ல. நம்நாட்டிற்கு சுதந்திரம் பெறுவதான் உயிர்மூச்சு என வாழ்ந்தவர்களில் இவரும் ஒருவர். உடல் நலிவுற்றாலும் மனவலிமையோடு சிறைச்சாலையை மகிழ்வோடு ஏற்றுக்கொண்ட மாமனிதரில் யோகியார் முதன்மையானவர்.

அபராதத் தொகை செலுத்திவிட்டால் போதும். வெளியே செல்ல அனுமதிப்போம் என அன்றைய பிரிட்டிஷ் அரசு சொல்லியது. அதற்கு யோகியார் பணியவில்லை. சிறையில் பற்றிக்கொண்ட ஆஸ்த்மா நோய்தான் பின்னாளில் அவரின் உயிரைக் குடித்தது. இந்நோய் ஓராண்டு காலம் வாட்டி வதைத்தது. யோகியார் ஈ.வெ.ரா. பெரியார், மூதறிஞர் ராஜாஜி ஆகியோரோடு சிறையில் கழித்த நாட்கள் பல.

2. யோகியாரின் படைப்பிலக்கியம்

மகாகவி யோகியார் பல்துறை வித்தகர். சிறந்த கவிஞர் மட்டுமல்ல. உரை நடையாசிரியர் இசைப் பாக்கள் புனைவதில் ஆற்றல் மிக்கவர். அந்தக் காலத்தில் திரைத்துறையில் நடிப்பதைத்தவிர எழுத்து சம்பந்தப்பட்ட அத்துனைப் பொறுப்புகளையும் ஏற்று திறம்படச் செய்தவர்.

அவற்றில் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் ஆகியவை அடங்கும். அரை டஜன் படங்களுக்கு மேல் இயக்கியவர். அது மட்டுமின்றி பல பத்திரிகைகளுக்கு கதை, கவிதை, கட்டுரைகள் எழுதிப் புகழ் பெற்றவர்.

தமிழ், ஆங்கிலம் மட்டுமல்ல சமஸ்கிருதமும் அறிந்தவர். பல்வேறு ஆங்கில புத்தகங்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்தும் புகழ் பெற்றவர்.

திருமணம் முடிந்ததும் பத்திரிகைப் பணி இவரை சென்னைக்கு வரவழைத்தது. இவர் விஞ்ஞானம், தந்திர சாஸ்திரம், தத்துவ சாத்திரம், சோதிடம் முதலியவற்றில் நல்ல முதிர்ந்த அனுபவமும் அறிவையும் பெற்றவர். நாடிஜோதிட நூலான தரிக்கால் என்ற அச்சேறாத கிரந்த நூலுக்கு விரிவுரை எழுதியுள்ளார். நந்தி நூல் என்ற ஒரு பழம்பெரும் நூல், சுவடி வடிவில் இவர் இல்லத்தில் இன்றும் உள்ளது.

புதுமை, பித்தன், குடி நூல், குமாரவிகடன், சுதந்திரச் சங்கு, ஆனந்த போதினி ஆகிய ஏடுகளில் ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றி வந்துள்ளார். பத்திரிகைப் பணி யோகியாரது படைப்பாற்றலின் வெளியீட்டுக் கருவியாக அமைந்தது.

புதுமை இதழின் ஆசிரியராகயிருந்து ஒவ்வொரு இதழின் முதல் பக்கத்திலும் காளிதாசன் என்ற புனைப்பெயரில் கவிதை இயற்றியுள்ளார்.

இதே இதழில் உமர் கயாமின் ருபயாத் என்ற ஆங்கிலக் கவிதையின் தமிழ் மொழியாக்கமும் எனது சிறைவாசம் எனும் கட்டுரையும், "சுதந்திரச் சங்கு" எனும் இதழில் "குளத்தங்கரை குயில்கள்" என்ற சிறுகதையும் யோகியாரால் எழுதி வெளியாயின. யோகியாரின் மொழி பெயர்ப்புப் பணி, தன் வரலாற்று சுயசரிதை வெளியீடு, சிறுகதைப் படைப்பு ஆகிய திறன்களின் வளர்ச்சிக்கு இவ்விதழ்கள் விளைநிலமாக அமைந்தன.

ஆங்கிலத்தில் அவரது புலமை எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். சீதா கல்யாணத்தை யோகியார் கவிதை நடையில் எழுதியவர். அதுவன்றி "யமா யமி" "தி இண்டு ஆட்டம்" "தி டியு டிராப்ஸ்" ஆகியவை கையெழுத்துப் பிரதிகளாகவே உள்ளன. மிக விரைவில் அவை நூல் வடிவில் வெளிவர இருக்கின்றன.

மறைந்த ஆங்கிலக் கவிஞர் சர் ஸ்டிபன் ஸ்பெண்டர் யோகியார் சிறப்பறிந்து, அவர் வாழ்ந்த சென்னைக்கு வந்தார். அவர் யோகியாரை சந்தித்து பலமணி நேரம் இலக்கியம், கலாச்சாரம், ஆன்மீகம் ,பற்றியும் பேசினார். இச் சந்திப்பை ஆங்கிலக் கவிஞர் சர் ஸ்டிபன் ஸ்பெண்டர் குறிக்கும் போது, திரு. யோகியார் நான் சந்தித்தவர்களில் மிக முக்கியமான ஒருவர். இவரது அறிவாற்றல் என்னை வியக்கவைக்கிறது, என்று கூறுகின்றார்.

சாத்தனார் எழுதிய கூத்த நூல் என்ற புத்தகம் நாட்டிய சாஸ்திரத்தை மையமாகக் கொண்டது. அக்காலத்தில் சாத்தனாரின் ஓலைச் சுவடியில் எழுதிய சூத்திரங்களைப் படித்து அதற்கு பொழிப்புரை, பதவுரையை எழுதியவர் யோகியார். இச்சுவடி யோகியாருக்கு கிடைத்ததொரு சிறப்பான கதைதான்.

யோகியார் புதுமை விரும்பி. பழைமையை பேணிக் காப்பவர். எந்த ஊருக்குப் போனாலும் அந்த இடத்தின் சிறப்பினைத் தெரிந்து கொள்ள விரும்புவார். ஒருமுறை தான் பயின்ற ஊரான ஈரோட்டிற்குச் சென்றிருந்தார். அங்குதான் சாத்தனார் எழுதிய ஓலைச்சுவடி விவரத்தை யோகியார் அறிந்தார். அதைப் பெறுவதற்காக தேடும் பணி தொடர்ந்தது. இந்தச் செய்தி காட்டுத் தீயெனப் பரவியது. ஓலைச் சுவடி வைத்திருந்தவருக்கு இச்செய்தி தெரிந்தது. இனி இந்த ஓலைச் சுவடி யோகியாரிடம் இருக்க வேண்டுமென முடிவு செய்தார்.

“கூத்தநூல்” ஓலைச் சுவடியை அவரே நேரில் வந்து யோகியாரிடம் சேர்ப்பித்தார். “இந்தச் சுவடி பெருமை முழுவதும் உணர்ந்தவர் நீங்கள் தான். இந்தச் சூத்திரங்களின் பொருள் கூட எனக்குத் தெரியவில்லை. இனி நீங்களே சூத்திரங்களைப் படித்து, பொருளுணர்ந்து கற்றறிந்து அறிஞர்களுக்கும் தெரிவிக்கவேண்டும். எனக்குத் தெரிந்தவரை இதை நீங்கள் வைத்திருப்பதுதான் சாலச்சிறந்த ஒன்று. என் பெயரைக் கூட வெளியிடவேண்டாமென வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்” என்றார்.

யோகியாரின் இறுதி வாழ்வுவரை அச்சூத்திரங்கள் எங்கிருந்து பெற்றார் என்பதைக் கூறவேயில்லை. சாத்தனார் எழுதிய “கூத்த நூல்” பல்வேறு நடனமணிகளைக் கவர்ந்த நூலாகும். இலக்கியம் பயின்ற தமிழ்ப் பண்டிதர்கள் அறிந்து கொண்ட சிறந்த நூல்.

சுருங்கச் சொன்னால் இந்நூலிலுள்ள தமிழ் பலருக்கு இன்றும் கூடப் புரியவில்லை என்பார்கள். ஆனால் யோகியார் மட்டும் பதவுரை, பொழிப்புரை ஆகியவைகளைச் சிறப்பாக எழுதி தமிழ் மொழிக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்.

யோகியாரின் அந்திமகாலம் மிகவும் வருத்தமுடைய நாட்கள். அந்நாளில் இந்நூல் ஒரு மிகப் பெரிய பிரச்சனையை சந்தித்தது. பதவுரை அடங்கிய கையெழுத்துப் பிரதியை தட்டச்சு முறையில் பிரதி எடுக்க முடிவு செய்தனர். பின் தட்டச்சுப் பயிற்சியாளரை அணுகினர். பிரதி எடுத்துத தர அவரும் இசைந்தார்.

தட்டச்சு பயிற்சியாளர் வீட்டிற்குச் சென்று கையெழுத்துப் பிரதிகளை வைத்துவிட்டு அலுவலகம் சென்றார். அலுவலகப் பணிநிமித்தம் உடனே வெளியூர் செல்ல நேர்ந்தது.

ஒருவாரம் கழித்து ஊர் திரும்பி வந்து தட்டச்சு பயிற்சியாளருடன் யோகியார் குடும்பத்தினர் தொடர்புகொண்டனர் அப்பொழுதுதான் கையெழுத்துப் பிரதி பற்றி நினைவு அவருக்கு வந்தது. தன் மனைவியிடம், தான் கொண்டுவந்த பிரதிகளை எடுத்து வரும்படி கூற மனைவி ஏதும் புரியாமல் நின்றார்.

இருவரும் வீடு முழுக்க தேடத் துவங்கினார்கள். எங்கு தேடியும் கையெழுத்துப் பிரதிகள் கிடைக்கவேயில்லை. என்ன செய்வதென தட்டச்சுப் பயிற்சியாளருக்கும் புரியவில்லை. மனைவியைத் திட்டிக் கொண்டே அலுவலகம் சென்றார்.

இவர் திட்டிய திட்டில் குழம்பியிருந்த மனைவி மேசைமீதிருந்த பேப்பர் கட்டையும் சேர்த்து எரித்துவிட்டதாகத் தெரிவிக்க தைரியமில்லை. கையெழுத்துப் பிரதி தீக்கிரையானது.

சுமார் 1800 சூத்திரங்களுக்குப் பொழிப்புரை பதவுரை எழுதிய பிறகு, பெரிய புத்தகமாக உருவாகக்கூடிய எழுத்துத்தான் அவை. யோகியாரிடம் தீக்கிரையான விஷயம் கூறவே துணிவில்லாமலிருந்த மனைவி, அந்த அதிர்ச்சியில் செய்வதறியாது நின்றார். யோகியார் உடல் நிலை நோய்வாய்ப்பட்டு நடக்க, படுக்க இயலாமல் உட்கார்ந்த நிலையிலேயே இருந்தார்.

இந்தச் சூழ்நிலையில் திரும்பவும் எப்படி சூத்திரங்களுக்கு பொழிப்புரை, பதவுரை எழுதப் போகிறார். இந்தச் செய்தி அவரது குடும்பத்தாருக்கு புரியாத புதிராகவே இருந்தது. இந்த விஷயத்தை யோகியாரின் டாக்டர் திரு. சீனிவாசாச்சாரியிடம் தெரிவித்தனர் குடும்பத்தினர்.

அவரும் யோகியாரிடம் மெல்ல அந்தச் செய்தியைச் சொல்லத் தொடங்கினார்.

டாக்டார் : நீங்கள் சமீபத்தில் என்ன புத்தகம் எழுதியுள்ளீர்கள்?

யோகி : சாத்தனார் எழுதிய "கூத்தநூல்" என்ற புத்தகத்திற்கு விளக்கவுரை எழுதியுள்ளேன். அதை இனிமேல்தான் பிரசுரிக்க வேண்டும்.

டாக்டர் : உங்கள் உடல்நிலை சரியில்லாத நிலையில் எப்படி எழுதினீர்கள்?

யோகி : நான் முன்பு எழுதியவைதான். இன்று எழுதவில்லை. ஆனாலும் ரொம்ப கஷ்டமான நூல். புத்தகமாக வெளிவந்தால் பல நடன மணிகளுக்கும், நடன ஆசிரியர்களுக்கும் பயனுள்ளதாகவே இருக்கும்.

டாக்டர் : எழுதி முடித்தாகிவிட்டதா? இப்பொழுது எந்த நிலையில் அந்தப் புத்தகம் உள்ளது.

யோகி : எழுதி முடித்தாகிவிட்டது. கையெழுத்துப் பிரதியை தட்டச்சில் பிரதி எடுக்க கொடுத்துள்ளார்கள். இன்னும் சில நாட்களில் வந்துவிடும்.

டாக்டர் : வீட்டிலேயே வந்து அதை பிரதி எடுத்துக்கொடுக்கச் சொல்லக்கூடாதா, காணமல் போனால் என்னவாகும்?

யோகி : அப்படி ஆகாது என்று நினைக்கிறேன். காணாமல் போனால் பிரச்சனைதான்.

டாக்டர் : அப்படியே காணாமல் போனால் என்ன செய்வீர்கள்?

யோகி : போனால் நிச்சயமாக என்னால் இனி எழுத முடியும் என்று கூற முடியாது.

டாக்டர் : காணாமல் போய்விட்டது என்றுதான் கூறுகிறார்கள்.

யோகி : அப்படியா, இனி எப்படி எழுதுவேன்.

டாக்டர் மெல்ல, மெல்ல விஷயத்தைச் சொல்ல யோகியார் மிகப் பெரிய இடி விழுந்ததுபோல உட்கார்ந்துவிட்டார். யோகியாரின் கையெழுத்து முத்து முத்தாக கண்ணைக் கவரும் விதத்தில் இருக்கும்.

இப்படி எழுதி பழக்கமான யோகியார் எப்படி எல்லா சூத்திரங்களுக்கும் மீண்டும் பொழிப்புரையும், பதவுரையும் எழுதப் போகிறார் என எல்லோர் மனதிலும் எழுந்ததும் மிகப் பெரிய கேள்வி எழுந்தது அவரது விடாமுயற்சியால் மீண்டும் தானே சாத்தனார் எழுதிய ஓலைச் சுவடிகளுக்கு விளக்கவுரை எழுத ஆரம்பித்து, இயன்றவரை இந்தப் பணியை செவ்வனே செய்தும் முடித்தார் யோகியார்.

மத்திய சங்கீத நாடக அகடமியும், மாநில சங்கீத நாடக சங்கமும் இணைந்து இந்த விளக்க உரையை புத்தகமாக பிரசுரித்து மகிழ்ந்தன. மீதமுள்ள சூத்திரங்களுக்கு விளக்க உரையை யாரும் எழுத முன் வரவில்லை.

யோகியார் இறந்த பிறகு, இவை பிரசுரிக்கப்பட்டதால் வேறு யாராவது எழுதித்தர முன்வந்தால் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டதில் தவறேதுமில்லை.

மகாவித்வான் திரு. மே.வீ. வேணுகோபால் பிள்ளை அவர்களைக் கூட கேட்டதாகக் கூறுவார்கள். இந்த அரிய பெரிய செயலை யாரும் ஏற்கத் தயாராக இல்லை. காரணம் இது தமிழோடு சம்பந்தப்பட்ட விஷயம் மட்டும் இல்லை. தமிழ் பாண்டித்தியம் தேவை. சமஸ்கிருதம், நாட்டிய சாஸ்திரமும் தெரிந்திருக்க வேண்டும்.

அப்படி மூன்றும் தெரிந்த ஒருவரால்தான் இதை முழுமையாகச் செய்ய முடியும். அப்படி ஒருவர் கிடைப்பது கஷ்டமான விஷயம். அதனால்தானோ என்னவோ சூத்திரங்களை மட்டும் அப்படியே பிரசுரிப்பது என்று முடிவெடுத்தனர் போலும்.

இன்னும் ஒரு கூற்று கூட உண்டு. அவை எந்த அளவிற்கு உண்மை என்பதை தமிழ் படித்த அறிஞர்கள், சமஸ்கிருத நிபுணர்கள், நாட்டிய விற்பன்னர்கள்தான் கூற வேண்டும்.

அன்றைய தமிழ்நாடு சங்கீத நாடக சபை தேர்வுக்குழுவைச் சந்தித்து கலந்து ஆலோசித்தபோது டாக்டர் ராகவன், "சாத்தனார் எழுதிய கூத்த நூல் என்பதே பொய். இதை யோகியார்தான் எழுதினார். என்றும், சாத்தனார் பெயரை உபயோகித்தால்தான் அதற்கு அங்கீகாரம் கிடைக்கு"மென கூறியதாகவும் ஒரு தகவல் உண்டு.

"சாத்தனார் பெயரில் யோகியார் எழுதினாலும் யோகியாருக்குப் பெருமை. சூத்திரங்களுக்கு மட்டும் விளக்கவுரை எழுதினாலும் யோகியாருக்குப் பெருமைதான்" என்று நாட்டிய நர்த்தகி ருக்மணிதேவி கூறியதாகவும் கூறுவர்.

இந்தியாவின் தலைசிறந்த பத்திரிகைகளில் ஒன்றான "இந்து" நாளிதழ், தனக்கு வரும் தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தகங்களை இவரது விமர்சனத்துக்கு அனுப்பும். பல புதிய கவிஞர்கள் எழுதும் கவிதைகளை படிக்க பலருக்கு கஷ்டமாகயிருக்கும். ஆனால் யோகியார் பொறுமையாக அதைப்படித்து அதற்கு உண்டான மதிப்பை வழங்கிவிடுவார்.

கவியரசர் கண்ணதாசனின் புத்தகங்கள் பல 'இந்து' பத்திரிக்கையின் மூலம் இவருக்கு வந்து இருக்கிறது.

யோகியாரின் நினைவு நாள் கூட்டமொன்றில் கவியரசர் கண்ணதாசன் பேசும்போது, ஒரு விமர்சனம் எப்படியிருக்க வேண்டும் என்பதை அழகாக குறிப்பிட்டார்.

யோகியாரின் விமர்சனங்களைப் பற்றி குறிப்பிடும்போது யோகியாரின் விமர்சனம் யார் மனதையும் புண்படுத்தாது, வசைபாடாது, தவறு இருந்தால் நாசுக்காக சுட்டிக்காட்டும் தன்மையுடையது. எனது புத்தகங்கள் பலவற்றை இவர் விமர்சனம் செய்திருக்கிறார். எந்த விதத்திலும் எழுத்தாளரின் மனம் நோகும் வண்ணம் அதில் ஒரு எழுத்துக்கூட இருக்காது.

யோகியார் கவிதைகளை வாசிக்கும் அழகே தனிதான். அவர் எழுதிய கவிதைகளை அவர் சகோதர தோழர்களுக்கும், ரசிகர்களுக்கும் ஏற்ற இறக்கங்களுடன் வாசிக்கும் முறையே அலாதிதான். அது கேட்டு சுவைக்கக் கூடிய ஒன்று.

யோகியாருக்கு தேவை எல்லாம் ஒரு அமைதியான இடம். சந்தடியில்லாமல் இருந்தால் மகிழ்ச்சியடைவார். அவரை தொல்லை படுத்தாமல் இருந்தால் பக்கங்கள் பலவற்றை எழுதித்தள்ளிவிடுவார். எழுத்துக்கள் கண்ணில் ஒற்றிக்கொள்ளும் வண்ணமிருக்கும்.

உட்கார்ந்த இடத்தில் தோன்றும்போது வரி வரியாக கலை பொக்கிஷங்களை எழுதிக் குவித்திருக்கிறார் இவருக்கு தெரிந்ததெல்லாம் எழுத்து, கவிதை, தமிழ் சொற்கள்தான். வளமான பகுதிக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணமேயில்லாமல் அவர் விட்டுச் சென்ற பணிகள் பல. கையெழுத்துப் பிரதிகளாகவே பல எழுத்துக்கள் இன்னும் அச்சேறாமல் இருக்கின்றன.

ஒரு கவிஞன் இதயம் எவ்வளவு மென்மையானது என்பதை அவரது பல பாடல்களில் இருந்து நாம் உதாரணம் காட்டலாம். வெளியே தெரியாத பாட்டின் மூலம் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். யோகியாருக்கு கை, கால்களில் சிரங்கு வந்துவிட்டது. அதன் தொல்லை தாங்க முடியவில்லை.

என்ன செய்வது என்று புரியவில்லை. கவிஞரல்லவா பாடல் எழுதத் துவங்கிவிட்டார்

"சிரங்கப்பசீலா மகராசன் பெற்ற செல்வக்குமாரா

அரங்கைக்கும் புறங்கைக்கும்

அழகான முழங்கைக்கும்

பரபரங்குது சொர சொரங்குது

பன்னீர் ஒழுகுது வெந்நீர் கேக்குது."

இப்படி வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வுக்கும் அதன்மூலம் ஏற்படும் அனுபவத்திற்கும் பாடல்களாலே பரிகாரத்தை யோகியார் ஏற்படுத்தி மகிழ்வார்.

சுருங்கச் சொன்னால் அவரது "காசில்லா கனகரத்தினம்" பாடல் வரிக்கு வரி ஏழைகளின் நிலை, அவர்கள் படும் துன்பம், இன்னல்கள் இவைகளை நம் கண்முன் சரியாக நிறுத்தும் காவியம் என்று சொல்லலாம்.

"மொட்டச்சிமார் நால்வர்

மூளிப்பெண் மூவருக்கும்

கட்டத்துணி இல்லை

கண்ணாலம் காத்திருப்பார்"

நான்கு பெண்கள், அதில் மூன்று பேருக்கும் காட்டுவதற்கு துணி கூட இல்லையாம். அவ்வளவு ஏழ்மை நிலை என்பதை சொல்லாமல் சொல்கிறார் யோகியார். ஆனால் கல்யாண வயது வந்து விட்டதாம். இப்படிப்பட்ட இவர்களின் தந்தை பெயரென்ன தெரியுமா?

"பேர் பெற்றபேர்தான்

கனக ரத்தினம் எனும் பேராம்

ஊர் சுற்றும் நாய்க்கேனும்

எச்சில் இலை உண்டு

பஞ்சை பார்ப்பான்

பரதேசிக்கு அதுவும் இல்லை"

இந்தக் கவிதையைப் புரிந்துகொள்ள வாசகர்களுக்கு விளக்கம் தேவையே இல்லை என்று கூறலாம். நாய்க்குக் கூட எச்சில் உணவுண்டு, ஆனால் மனிதனுக்கு அது கூட இல்லை.

"நெஞ்சம் கொதிப்பேற
நினைவெல்லாம் தற்கொலையின் மீதேற
காசினிக்கு கருணையில்லை
கடவுளுக்கு கண்ணில்லை
சீச்சீ சமூகத்தின்
சிறுமைகளுக்கோர் எல்லையில்லை."

தற்கொலை செய்து கொள்ளும் முன்பு இந்த சமூகத்தின் மேல் வெறுப்பு, கடவுள் மேல் கோபம், சமுதாய சீர் கேடுகளின் மேல் வருத்தம் என்று எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இவரை ஆட்கொண்டுவிடுகின்றன. குறிப்பாக கடைசி நான்கு வரிகள் ஒவ்வொரு மனிதனையும் சிந்திக்க வைக்கும்.

மாயா ஜால வித்தைக்காரர்

கவிஞன் மென்மையானவன். உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடுவது கவிதை ஊற்று. கவிஞன் மலரைப் பாடுவான், நிலவைப் பாடுவான், நிலத்தைப் பாடுவான். சிறந்த கவிகளுக்கு உரிய இலக்கணம் பல்வேறு பொருளில் பாடுவது மட்டுமல்ல. எழுத்துத் துறையில் பல்வேறு பிரிவுகளை எழுதிப் பார்ப்பதுதான். கதை, கவிதை, இசைப்பாடல்கள், கட்டுரை என அனைத்து பிரிவுகளிலும் கவிஞனால் நுழைந்து வெளிவரமுடியும்.

மகாகவி யோகியாரும் இதேபோல் பல பிரிவுகளில் தம் படைப்புகளை உருவாக்கி இருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக எழுத்துத்துறைக்கே சம்பந்தம் இல்லாத ஒரு விஷயத்தில் அவர் முயன்று வெற்றி பெற்று இருக்கிறார் என்பதுதான் விந்தையிலும் விந்தை.

கவிஞர்கள் நுழையாத இடம், எழுத்தாளர்கள் எட்டிப்பார்க்காத இடம், படைப்பாளிகள் பங்கு பெறாத இடம், ஆம்! அதுதான் மாயாஜால உலகம்.

படைப்புத்திறன் மிக்க படைப்பாளி செய்யும் தொழிலில் மாயா ஜாலத்தை கலைக்கு ஒப்பிடுவது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றுதான்; அப்படிப் படைக்கப்பட்டவற்றை மறைப்பதோ அல்லது மாயாஜாலத்தின் மூலம் மறைவதோ கிடையாது.

உலகக் கவிஞர்கள் வரிசையை எடுத்துக்கொண்டாலும் எந்த ஒரு கவிஞரும் மாயஜாலத்தை கற்றிருப்பார்களா என்பது சந்தேகந்தான்!

மகாகவிக்கு சிறுவயது முதலிருந்தே மாயாஜால வித்தைகளைக் காட்டி மக்களை மகிழ்விக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. எனவே துவக்கத்தில் சிறு சிறு மாயாஜால வித்தைகளைக் கற்றார். அதனால் நண்பர்களை மகிழ்விக்கச் செய்தார்.

நண்பர்களின் உற்சாக வரவேற்பில் யோகியாருக்கு ஊக்கம் ஏற்பட்டது. இதனால் பெரிய வித்தைகளைக் கற்றுக் கொண்டார். பணத்தட்டுப்பாடு இவரது பயிற்சிக்குத் தடையாக இருந்தது. மாயாஜால வித்தைக்காரர் வித்தை காட்டும் பொருட்களை கடனாகக் கொடுக்கமாட்டார் அல்லவா?

அப்பொருட்களை வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு யோகியார் தள்ளப்பட்டார். பண வசதியில்லாத குறையினால் பல வித்தைகளைக் கற்றுக்கொள்ள முடியவில்லை.

அதிக செலவில்லாத வித்தைகளை விரைவாகவே யோகியார் கற்றுக்கொண்டார். ஒரு சிறந்த மகாகவி மாயாஜல வித்தைகளைச் செய்கிறார் என்றால் அதுவே மிகப்பெரிய செய்திதானே? பல்வேறு வித்தைகளைச் செய்து காட்டி அனைவரையும் மகிழ்வைத்தார்.

இவர் யோகாப்பியாசம் செய்து வந்தார். அதனால் மகத்தான சக்தி உண்மையிலேயே இவரிடம் இருந்து வந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக யோகியார் தம்பி எஸ்.டி. ராமச்சந்திரன் கூறினார்;

"ஒருநாள் இரவு எங்கள் உறவினர் திருமணத்திற்குச் சென்றோம். இரவு உறங்க அதே தெருவில் இருக்கும் வீட்டு மேல் மாடி அறைக்குச் சென்றோம். எங்களுக்கென உறங்குவதற்கு ஒரு தனி அறையைத் தந்தார்கள். நானும் என் சகோதரர் யோகியும் படுத்துக்கொண்டோம்.

இரவு சுமார் 12 மணியிருக்கும். பேய்க்காற்று அடித்தது. கதவுகளும், ஜன்னல்களும் அடித்துக் கொண்டன. என் சகோதரர் எழுந்தார். கால்மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்தார். சில மந்திரங்களை ஜெபிக்கத் தொடங்கினார். கண்மூடிய நிலையில் அவர் இருக்க, நான் அஞ்சியவாறே கண்விழித்தபடி இருள்சூழ்ந்த இருட்டை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போது திடீர் என்று சிறு தூரத்தில் சதையில்லாத எலும்புக்கை என் கழுத்தைப் பிடிக்க மெல்ல மெல்ல முன்னோக்கி வந்து கொண்டிருந்தது. எனக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. பக்கத்தில் இருந்த சகோதரர் யோகியைப் பிடித்து உலுக்கினேன். அவர் கண்விழித்துப் பார்த்தார். எலும்புக்கை, எலும்புக்கை என்று பயத்தால் கத்தினேன். என்னைப் பார்த்து ஒன்றும் செய்யாது என்றார். கைகளைப் பார்த்து நில்லு அப்படியே திரும்பிப்போ" என்றார்.

பெட்டிப் பாம்பாக இவர் இட்ட கட்டளைக்குப் பணிந்து செல்லும் சேவகன் போல எலும்புக் கை திரும்பியது. பின்பு இருகைகளும் மறைந்தன.

மறுநாள் காலை யோகியாரிடம் இரவில் நடந்ததை குறித்துக் கேட்டேன். ஒரு சிறிய கதையைச் சொல்லி முடித்தார். அந்தக் கைக்கு சொந்தக்காரர் அதே வீட்டில் இறந்தவர் என்றார். அவ்வீட்டில் அவரைத் தவிர வேறு யாரும் தங்கக்கூடாதென நினைப்பவர் என்றார். அதனால் யார் வந்தாலும் இப்படி ஏதாவது வெளியேற்ற முயற்சி செய்கிறார் என்றார்.

இவர் ஈரோட்டில் குடியிருந்தபோது வீட்டு மாடியில் குடியிருந்த குடும்பத்தினர் பேய் பிசாசை வெளியேற்ற பூஜை செய்தனர். பூஜை செய்ய பூஜாரி வரவழைக்கப்பட்டார். பல்வேறு பொருட்களை அதிகமாகவே பூஜைக்காக வாங்கிக்கொண்டு, பூஜை அறைக்குள் நுழைந்து கதவை மூடிக்கொண்டார்.

பத்து நிமிடங்கள் கூட ஆகி இருக்காது. பூஜாரி அறையிலிருந்து அலறி அடித்துக்கொண்டு வேளியே வந்தார்.

'இங்கு யாராவது காளி பூஜை செய்கிறார்களா' எனக் கேட்டார் பூஜாரி.

அதற்கு யோகியாரின் தாயார் அவரிடம்,

"ஆமாம் என் மகன் காளிபூஜை செய்பவன்" என்று கூற, "எனக்கு முன்பே ஏன் சொல்லவில்லை. நான் பிழைத்ததே பெரிய விஷயம். உங்கள் மகன் பெரியவன். மற்றவர்கள் அவனுக்கு கீழ்தான். மிகச்சிறந்த காளி பக்தனை வீட்டிலேயே வைத்துக் கொண்டு இப்படிச் செய்யலாமா?" இப்படிக் கேட்டுவிட்டுச் சென்றாராம் பூஜாரி.

ஒரு பெண் திருமணமாகி குழந்தை பெற்றார். கறுப்புப் புடவையைக் கட்டிக் கொண்டால் கிழிசல் உண்டாகுமாம். பல நாட்கள் கவனியாமல் விட்ட இவர், ஒரு நாள் ஏன் இப்படி ஏற்படுகிறது என்று புரியாமல் குழப்பமடைந்தாராம்.

புதிய கருப்புப் புடவைகளை வாங்கி அணிந்து கொண்டு, இரவு உறங்கிவிட்டு காலையில் கண்விழித்துப் பார்த்தால் கிழிந்தோ அல்லது ஓட்டையாகவோ காணப்படுமாம். இதற்கு முடிவு தெரியாத அப் பெண்ணுக்கு யாரோ யோகியாரைப் பற்றிக் கூறினார்கள். அப்பெண் நேராக சென்று நடந்ததை யோகியாரிடம் தெரிவித்தார்.

யோகியார் அவரிடம் ஒரு புதிய கறுப்புப் புடவையை வாங்கி வரச் சொன்னார். புடவை முழுதும் பிரித்துப் பார்க்கச் செய்தார். எங்கும் கிழிசலோ, ஓட்டையோ இல்லை. அதன்பின் அப்புடவையை காளிபடத்தின் முன் தட்டில் வைக்கச் சொன்னார்.

மறுநாள் மாலை வந்து புடவையைப் பெற்றுக் கொள்ளும்படி சொன்னார். அடுத்த நாள் அப்பெண் வந்தபோது பூஜையிலிருந்த புடவையை எடுத்துக்கொடுத்தார்.

இந்தப் புடவையைக் கட்டிக் கொண்டு உறங்கு. கிழிசல் இருந்தால் வந்து சொல் என்றார்.

அடுத்த நாள் அந்தப் பெண் யோகியாரிடம் அந்தப் புடவை கிழியவேயில்லை என்றார் அன்று முதல் எந்த நிறப் புடவையாக இருந்தாலும் ஒன்றுமே ஆகவில்லை. மாயாஜாலத்தில் மட்டுமல்ல, மந்திர தந்திரங்கள் அறிந்தவராகவும் யோகியார் விளங்கினார்.

மாயாஜாலம் என்பது ஆரம்பத்தில் கடினமானது. அனுபவம் முதிர முதிர எளிதாகத் தெரியும். கண் எதிரில் இருப்பதை நொடிப்பொழுதில் மறைக்கலாம். வேறு பொருளாக மாற்றுவதுதான் மாயாஜாலத்தின் குறிக்கோள்.

மக்களைக் கவரும் வகையில் மாயாஜால வித்தைகளைச் செய்து காட்டி மகிழவைப்பது அந்தத் தொழிலைச் செய்பவரின் கடமை. இளைஞராக இருந்தபோது நெஞ்சில் எழுந்த ஆசை ஒரு கால கட்டத்தில் பெரிய ஆலமரமாகவே எழுந்தது எனலாம். பணம் மட்டும் இவரிடம் இருந்திருந்தால் மிகப் பெரிய மாயாஜால விற்பன்னராக ஆகியிருப்பார் எனலாம்.

மக்கள் நல்லறிவைப் பெறவேண்டும், அவர்களுக்கு மகிழ்ச்சி தர வேண்டும் என்ற நோக்குடன் எழுதுகின்றனர். வாள்முனையை விட பேனா முனை கூரானது. கவிதையும் மாயாஜாலமும் வித்தியாசமான வெவ்வேறு உலகந்தான். ஒருவகையில் இரண்டும் மகிழ்ச்சி தரக்கூடியவைதான்.

இளமைப் பருவம் இனிமையானது. உலகில் அத்துணை செய்திகளையும் தெரிந்து கொள்ள நினைக்கும் பருவம். எந்தத் தவற்றையும் நியாயப் படுத்த நினைக்குமது. நல்லது, கெட்டது என்பதைப் பிரித்து பார்க்க முடியாத பருவம். இப்பருவத்தில்தான் யோகியாருக்கு மாயாஜாலத்தின் மீது நாட்டம் ஏற்பட்டது. ஆங்கிலத்தில் ஒரு பொன்மொழி உண்டு.

Jack of all trades but master of none.

யோகியாரைப் பொருத்தவரை

Jack of all trades and master of all arts.

என்றுதான் சொல்லத் தோன்றும்.

இவருக்குத் தெரியாதவை ஒன்றுமில்லை எனலாம். ஒரு மனிதரை அறிந்து கொள்ள வேண்டுமானால், அவரது நண்பர்களை அழைத்து வாருங்கள் என்றாராம் ஒரு வெளிநாட்டு அறிஞர். யோகியாரைப் பற்றி அவரது நண்பர்கள் கூறும் வார்த்தை அவர் அறியாதது ஏதுமில்லை என்பதுதான்.

அவர் பயின்ற நூல்களே அதற்குத் சான்றாக இன்றும் கட்டியம் கூறுகின்றன.

எறும்பு வாழ்க்கையைப் பற்றி தொடங்கி விண்ணுலகம் செல்லும் விண்கலம்வரை நன்கு கற்றறிந்தவர். புதிய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர்.

மாயாஜால ஆர்வம் அதிகமாகி கழைக்கூத்தாடி செய்யும் சிறு சிறு வித்தைகளைச் செய்து பார்க்கவேண்டும் என்று முயன்றார். அம்முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார். மிகப் பெரிய புதையலைக் கண்டெடுத்ததுபோல் மகிழ்ச்சியடைந்தார்.

மாயாஜால வித்தை இந்தியாவில் எங்கு நடந்தாலும் அந்த நிகழ்ச்சிக்கு முதல் நுழைவுச் சீட்டு வாங்குவது, யோகியாராகத்தான் இருக்கமுடியும்.

வித்தைகளை செய்யும் முன்னும், பின்னும் அவர்கள் எப்படி பேசிப் பழகுகிறார்கள் என்பதை கூர்ந்து கவனிப்பார். அதை மனதில் படிய வைத்துக் கொள்வார். இதற்குக் காரணம் எதிர்காலத்தில் சிறந்த மாயாஜால விற்பன்னராக வேண்டுமென்ற எண்ணந்தான்.

இதன் விளைவாக அமெரிக்க மாயாஜால சங்கத்தில் அவரை ஒரு உறுப்பினராக இணைத்துக் கொள்ளத் தூண்டியது. அத்துறையில் யோகியார் தன்னை கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக் கொள்ள முயன்றார். முயன்றால் முடியாதது இல்லை அல்லவா? எனினும் இவர் முயன்றும் அத்துறையில் முதல் நிலை அடையமுடியவில்லை. அதற்கு காரணங்கள் பல.

அதற்கு மூன்று காரணங்களை இங்கே சொல்லலாம். முதலாவது பணம் இன்மை. மக்களைக் கவர வேண்டுமெனில் பல உபகரணங்களை வைத்துதான் வித்தை செய்ய வேண்டும். மனிதனை சிங்கமாகவோ வேறு எந்த வகையான பிராணியாகவோ மாற்ற வேண்டுமெனில் பணமில்லாத குறைதான்.

மாயாஜால வித்தைக்கு படிப்பறிவு மட்டுமே பயன்தராது. பயிற்சியால்தான் முழுவெற்றி கிடைக்கும். உதவிக்கு ஆள்பலமும் இல்லை. அதற்குரிய நேரம் இல்லாமல் இருந்தது.

மாயாஜால வித்தையை குருவிடம் கற்க இவரால் இயலவில்லை. காரணம் உகிலுள்ள எல்லாவற்றையும் செய்து பார்த்து, முதலிடம் வரவேண்டுமெனில் முடிகிற காரியமா என்ன?

ஒருமுறை அமெரிக்க மாயாஜால மன்னன் ஜான் கால்வெட் கண்களை கட்டிக்கொண்டு, சென்னை மாநகரில் கார் ஓட்டப் போகிறார் என்ற செய்தி அனைவரையும் வியப்படையச் செய்தது. கண்களைக் கட்டிக் கொண்டு கார் ஓட்டுவதா? அது முடிகிற காரியமா என்ன? பலரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் கண்களை எப்படிக் கட்டிக் கொள்வார் என்பதை விரிவாக புரியும்படி யோகியார் கூறினார்.

யோகியார் தன் கண்களில் மேல் கோதுமை மாவு வைத்து மறைக்கப்பட்டு கறுப்பு துணியால் கண்களைக் கட்டி வீட்டுக்குள்ளே நடந்து காண்பித்தார். மேஜிக் நிபுணரும் வித்தைகளை பலமுறை செய்து காட்டுவார்கள். எப்படி என்பதை யாரும் கூற மாட்டார்கள். யோகியாரும் அப்படித்தான்!

மனிதருள் மாணிக்கம்

சிவந்த நிறம். சுமார் ஆறடி உயரம். தீட்சண்யமான கண்கள். கருணையே இக்கண்களில் என்றும் நிலையாக குடிகொண்டிருக்கும். எழுதி, எழுதி சிவந்த கரங்கள். தமிழை என்றும் எப்பொழுதும் பேசியே நம்மை மகிழவைக்கும் வாய்.

உலகில் எது பற்றிக் கேட்டாலும் அதுபற்றி கருத்தரங்கம் நடத்தும் அளவிற்கு விஷய ஞானமுள்ள பல்துறை அறிவைப் பெற்றிருந்தார்.

நல்ல விஷயங்கள் எங்கிருந்தாலும் அவற்றைச் சரியான இடத்தில் சரியான நேரத்தில் சரியாக இணைக்கும் சாமர்த்தியம் யோகியாருக்கு உண்டு.

பணம் அவருக்கு ஒரு பொருட்டல்ல. அடியேன் சிறுவனாக இருந்தபோது பணத்தைப் பற்றி பேச்சு வந்தது. அன்று அவர் எனக்கு கூறிய அறிவுரை இதுதான். பணம் தேவைக்கு இருந்தால் மகிழ்ச்சி. அதிகமானால் மகிழ்ச்சி இழந்த நிலைதான். இது பணத்திற்கு மட்டுமல்ல. எல்லாவற்றிற்குமே பொருந்தும். பைசா என்பது பைசாசம். நம்மைப் பிடித்துவிட்டால் விடாது என்பார்.

இதுவும் நூற்றுக்கு நூறு உண்மை. எதுவுமே அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகி விடுமில்லையா? இவை எல்லாவற்றிற்குமே பொருந்தும். பைசா பிசாசு போன்றது என்று கூறும் யோகியார், பணத்தை கையில் வைத்துக் கொள்ளமாட்டார்.

பணத்தை கடைசிவரை பெரிதாக நினைக்காத மனிதராக இவர் வாழ்ந்தார். இவரால் ஒரு யோகியாக, நல்ல மனிதராக, சிறந்த ஞானியாக, எல்லாம் அறிந்த மேதையாக வாழ முடிந்தது.

மகாகவி யோகியார் யாரையும் எளிதில் நம்பிவிடுவார். தன்னிடம் பேசுகிறவர் யாரென நினையார். அவரது குணம், பண்பு, செயல்களைப் பாரார். சொல்பவர் சொல்வதை அப்படியே எடுத்துக்கொள்வார். சொல்பவர் உண்மையைத்தான் பேசுகிறார் என நினைப்பார். எல்லாருக்கும் நல்லதையே அவர் செய்கிறார் என எண்ணுவார். இவ்வாறு இவர் வாழ்ந்ததால் தான் இவரால் பணம் சேர்க்க முடியவில்லை. அதனால் பல துறையில் முன்னேற முடியவில்லை.

சில இடங்களில் மாதச் சம்பளத்திற்கு வேலை செய்யவும் துணிந்தார். சில மாதங்களுக்குப் பிறகு மாதச் சம்பளம் வருவது தாமதமாகும். இல்லை வராமலேபோகும். நின்றுவிடுவார். இவர் கடைசியாக வேலை பார்த்தது, "இந்தியா புக் ஹவுஸ்". அங்குதான் முன்னாள் அமைச்சர் திரு. நெடுஞ்செழியன், திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் ஆகியோரை பார்த்துப் பேசியிருக்கிறார்.

இவரது பெருமை உணர்ந்த திரு. நெடுஞ்செழியன் பின்னாளில் அமைச்சராக தான் பொறுப்பேற்றுக் கொண்டபின், யோகியாரின் நினைவு நாள் கூட்டம் ஒன்றில் பேசும் போது இவரது கவித்திறனையும் சிறப்பையும் நினைவு கூர்ந்தார்.

இவரால் முடிந்ததெல்லாம் எழுதி எழுதி குவிப்பதுதான். எழுதுவதற்கு பணம் தடை அல்ல அல்லவா? வர்த்தகம் செய்ய முடியாமல் இன்னும் இவரது எழுத்துக்கள் புத்தக வடிவில் வெளிவராமல் உள்ளன.

பணம் தருகின்றவர்களுக்கு எழுதித்தர மாட்டார். பாசத்தோடு இவரை நாடி வருவோர்க்கு கதை என்றோ, கவிதை என்றோ நினைத்த உடனேயே எழுதிக் கொடுத்துவிடுவார். பணத்தை பாதுகாக்க அல்லது சம்பாதிக்கத் தெரியாத மனிதராகத்தான் யோகியார் வாழ்ந்து மறைந்துவிட்டார் என்பதைத்தானே இது காட்டுகிறது.

கோபம் இவருக்கு சத்ரு. கோபத்தால் சிலர் ருத்திர மூர்த்தியாக எதிரே கோபதாண்டவமாடுவதையும் நாம் பார்க்கிறோம். ஆனால் இவரோ கோபம் என்றால் என்ன என்று கேட்கும் அளவிற்குக் கோபம் இல்லாதவராகக் காணப்படுவார். யாரையும் திட்டவோ, சபிக்கவோ மாட்டார். இதை இவரெழுதும் விமர்சனங்களிலும் கடைபிடித்து வந்தார்.

யோகியாரின் பண்பு நலன்களை, எழுத்துச் சிறப்பை எல்லாரும் அறிவார்கள். நட்பினை அவர் போற்றி, பழகுவதை பலரும் கூறக் கேட்டிருக்கிறோம்.

இவைகள் எல்லாவற்றையும் விட ஒரு உயரிய பண்பு ஒன்று உண்டு என்றால் அது நம் யோகியார் தன் மனைவியை மதிக்கும் தன்மைதான்.

எந்த ஒரு மனிதன் தன் மனைவியை மதிக்கிறானோ அவன் புகழ்பெறுவான் என்று கூறுகிறது கிரேக்கிய பழமொழி. ஆங்கிலத்தில் கூட **"Behind every Successful man there is woman"** என்று உண்டு. இதில் பெண் என்று கூறப்படுவள் மனைவி என்றும் வைத்துக் கொள்ளலாம். யோகியாரின் மனைவி கமலம்மாள் பொறுமை, அடக்கம், அன்பு, பாசம், ஈகை என நற்குணங்களைப் பெற்றிருந்தார். கணவருக்கு பணிவிடை செய்வதில் சமர்த்தர். ஒரு பெண் நல்ல மனைவியாக மட்டுமல்ல; நல்ல மந்திரியாகவும் இருக்க வேண்டும் என்பார்கள். திருமதி கமலம்மாள் மனைவி, மந்திரிஸ்தானத்தில் மட்டுமல்ல; அதற்கு மேலும் வாழ்ந்து தன் கணவரின் கடைசி மூச்சிருக்கும்வரை உட்காராமலே உழைத்தார்; என்றே கூற வேண்டும்.

மகாகவி யோகியார் தேவி பக்தர், காளி உபாசகர் என்பதெல்லாம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். மனைவி மீது எந்த அளவுக்கு அன்பும், பாசமும் வைத்து இருந்தாரோ அதே அளவுக்கு மதிப்பும் மரியாதையும் வைத்து இருந்தார்.

யோகியாரைப் பொருத்தவரை தன் மனைவியை அம்மா என்றுதான் அழைப்பார். வாம்மா, போம்மா என்றுதான் கூறுவார். மற்றவர்களுக்கு முன் அறிமுகப் படுத்தும் போது இல்லத் தலைவி என்ற முறையோடு அறிமுகப்படுத்துவார்.

3. யோகியாரும் திரைப்படமும்

''யோகியார் ஒரு மிகச் சிறந்த கவிஞர். என்னைப் போலவே அவரும் சினிமாத்துறையில் சிலகாலம் இருந்து வீணடித்துவிட்டார்'' என்றார் கவியரசு கண்ணதாசன்.

வ.எண்	திரைப்படம்	ஆண்டு, திரைப்படத்தில் யோகியாரின் பங்கு
1.	இருசகோதரர்கள்	1936, கதை, வசனம், பாடல்.
2.	பக்த அருணகிரி	1937 முழுப் பொறுப்பு
3.	அதிர்ஷ்டம்	கதை, பாட்டு, வசனம், இயக்கம்.
4.	கிருஷ்ணகுமார்	இயக்கம்
5.	ஆனந்தன்	இயக்கம்
6.	கிருஷ்ணபக்தி	வசனம், பாடல்.
7.	லஷ்மி	வசனம், பாடல்.

இவையன்றி சில படங்களுக்கு பாடல்கள் மட்டுமே எழுதியிருக்கிறார். திரையுலகம் அக்காலத்திலிருந்து மக்களை மகிழவைக்கும் மிகப் பெரிய சாதனமாய் விளங்கி வருகிறது. இந்தியாவைப் பொருத்தவரை திரைப்படங்களைத்தான் மக்கள் அதிகமாக விரும்பிப் பார்க்கிறார்கள்.

1930 ல் ஆரம்பித்த திரைப்படங்கள் முதலில் பக்திப் படங்களாக வெளிவந்தன. பின்னர் சரித்திரக் கதைகளைப் படமாக்க முனைந்தனர். பின்பு சமூகப் படங்கள் தலை தூக்க ஆரம்பித்தன. திரைப்படத்தின் ஆரம்ப காலத்தில் யோகியார் நுழைந்தார்.

மக்கள் விரும்பிப் பார்க்கும் வண்ணம் சமூகம், பக்திப் பாடல்களை யோகியார் வழங்கி புகழ் பெற்றார். அன்றைய "இருசகோதரர்கள்" என்ற பெயரில் வெளிவந்த படம்தான் காலம் மாறி அண்மையில் வெளியான 'சம்சாரம் அது மின்சாரம்' ஆகியது. அன்று சகோதரர்களுக்கு இடையில் ஏற்படும் சண்டையில் வீட்டுக்கு நடுவே கோடிடுவார்கள். இன்று சம்சாரத்தில் தகப்பனாருக்கும் பிள்ளைக்கும் ஏற்பட்ட சண்டையில் வீட்டிற்கு நடுவே கோடு கிழித்தார்கள்.

மக்களை இரண்டரை மணி நேரம் இருக்கையில் ஆணியடித்தாற் போல் அமரச் செய்த பெருமை யோகியாரைச் சாரும். இதை ஒரு சமூகத் தொண்டாக ஏற்று செய்து வந்தார் என்பது, இவர் இயக்கிய படங்களின் மூலம் நமக்கு தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

"இரு சகோதரர்கள்" படம், குடும்பப் பிரச்சனைகளை மையமாக வைத்து சகோதரர்களின் மன மாற்ற விளைவுகளைச் சொல்லும் படம்.

"பக்த அருணகிரி" அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது. பெண்பித்து எப்படி ஒரு மனிதனைச் சீரழித்துவிடும் என்பதை இப்படம் எடுத்துக் காட்டுகிறது.

"அதிர்ஷ்டம்" ஒரு பிச்சைக்காரி பணக்காரியானால், அது அதிர்ஷ்டம் தானே? அதை சுவைபடக் கூறுகிறது இப்படம்.

"கிருஷணகுமார்" வாழ்வின் உள்ளர்த்தத்தை உணர்ந்த மனிதன் முன்னேறத் தொடங்கினால் இமயமலை கூடச் சிறிய கல்லாக உருமாறும் என்பதை எடுத்துச் சொல்லும் படம்.

"ஆனந்தன்" படத்திற்கு அக்கினி பூரண மகிமை என்ற ஒரு மாற்றுப் பெயரும் அதற்குண்டு. பெயருக்கேற்ப இரு கருத்துக்களை வலியுறுத்துகிறது. இதில் புராணக் கதையைத் தழுவி சமூகக் கதை அமைக்க முடியமென நிருபிக்கப்பட்டன.

''கிருஷ்ணபக்தி'' கண்ணனின் சேவகன் என்று சொல்லாமல் சொல்லிய படம்.

"லக்ஷ்மி" பெண்ணின் பெருமையை பார் முழுதும் பறைசாற்றும் படம்.

இவ்வாறு திரைப்படங்களின் மூலம் சமுதாய நினைவுகொண்டுள்ள குடிமகன் என்பதை தெளிவாக யோகியார் கூறுகின்றார்.

அந்தக் காலத்தில் சிறந்த நாடகாசிரியர்கள்தான் புகழ் பெற்ற திரைப்பட கதாசிரியராக மாறியுள்ளனர். இன்று கூட நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியாரின் எழுத்தோவியங்கள் திரைப்படங்கள் எடுக்கும் அளவிற்கு சிறப்பாகயிருக்கிறது.

நூற்றுக்கணக்கான நாடகங்களை யோகியார் அன்றே வானொலிக்கு எழுதியவர். அந்தப் பயிற்சியின் விளைவால்தான் திரைக்கதை, வசனம் அமைக்க முடிந்தது.

இவரது வசனச் சிறப்பை பாராட்டாமல் யாரும் இருந்ததில்லை. அதிர்ஷ்டம் படத்தில் நீதிமன்ற காட்சிகள் ஒரு மணி நேரத்திற்கு இடம் பெற்றன. இந்த ஒரு மணி நேர நீதி மன்ற காட்சிகளை நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பலமுறை பார்த்து ரசித்திருக்கிறார்கள். அகலிகைக்காக வாதாடிய யோகியார் வேறு யாருக்குத்தான் வாதாடி சிறப்புச் செய்ய மாட்டார்.

அதிர்ஷ்டம் படத்தில் அன்றைய மிஸ் மெட்ராஸாக இருந்த சூரிய குமாரி பாடுவதாக ஒருகாட்சி, பாடலை இயற்றியவர் யோகியாராவார்கள்.

"ஐயா சிறுபெண் - ஏழை என்பால்
மனம் இரங்காதா

இப்பாடல் மட்டும் பத்தாண்டு காலமாக எல்லாப் பிச்சைக் காரர்களும் பாடும் பக்திப் பாடலாகி இருந்தது.

யோகியாரும் தம்பியும் ஒருமுறை காரில் சென்றனர். அப்பொழுது ரயில்வே தண்டவாளத்தைக் கடக்க வேண்டிய நிலை. ரயில் வர இருந்ததால் ரயில்வே கேட்டை மூடியிருந்தனர். காரிலிருந்த இருவரும் கீழே இறங்கி கார்மீது சாய்ந்தவாறு நின்றிருந்தனர்

அங்கே வந்த ஒரு சிறுபெண் ஐயா பாடலைப்பாடி யாசகம் கேட்டாள். தம்பி ராமச்சந்திரன் யோகியாரிடம் பணம் கொடுத்துப் போடச் செய்தார். பாட்டை இயற்றிவர்தான் தனக்குப் பணம் தருகிறார் என்பதை அறியாமலே அந்தப் பெண்மணி நகர்ந்தாள். இப்படி விந்தை நிகழ்ச்சிகள் யோகியார் வாழ்விலும், திரையுலகிலும் நடந்திருக்கின்றன.

எல்லீஸ் ஆர்டங்கன் டைரக்ட் செய்த "இரு சகோதரர்கள்" படத்தில் பாடல்கள் மற்றும் வசனத்தை எழுதினார்.

ஓடி விளையாடுவோம்

பாடியே பந்தடிப்போமே

பலவிதமா யாடுவோம்

வேறு ஒரு பாட்டு

கஞ்சா - கள்ளுக்கடை

காதலியுடனே குஷியாய்

அஞ்சா தீரனடா

ஆசையோட மகிழ்வோம்

பின்னர் யோகியார் தானே டைரக்ட் செய்த "கிருஷ்ணகுமார்" என்ற படத்தில்

கண்ணன் பிறந்தான் - காசினிமீதே

கவலைகள் நீங்கிடுமே - கமலக்

கண்ணன் என்று பாடியுள்ளார்.

கண்ணன் மற்றொரு கண்ணன் பாட்டு ;

கண்ணன் திருப்பெயரென்

காதில் விழுந்தவுடன்

எண்ணந் தித்திக்குதடி - கிளியே

எங்கும் மணக்குதடி

இப்படி எழுதிய பாட்டிற்குப் பிறகு இன்று நாம் கேட்கும் பாடல் போல ஒரு பாட்டையும் தனது "கிருஷ்ணகுமார்" படத்தில் எழுதியுள்ளார் யோகியார்.

'அதிர்ஷ்டம்' படத்தின் பாடல்கள், கதை, திரைக்கதை (ஸீனரியோ என்று தான் போட்டிருக்கிறார்கள்) வசனம் டைரக்ஷன் அனைத்தும் யோகியார்தான். இந்தப் படத்தில் சூர்யகுமாரி (இவர் தற்சமயம் லண்டனில் வசிக்கிறார். அன்று மிஸ் மெட்ராசாக இருந்தவர்) செல்லம், டி.எஸ். தமயந்தி சகுந்தலா, வி.வி சடகோபன், கொத்தமங்கலம் சுப்பு, எம்.என்.சீனிவாசன், ஆர்.ஆர் கிருஷ்ணய்யர், சியஞ்சு வி.எஸ் கிட்டப்பா, ஆர்.எம். மெய்யப்பா, கணபதி பட், ரெங்காச்சாரியார், டி.எஸ்.தியாகராஜன், வி.அழகப்பன் ஆகியோர் நடித்துள்ளனர்.

கதைச் சுருக்கத்தின் முதல் வரியே" சர்வம் காதல் மயம் ஜகத்" என்றுதான் ஆரம்பிக்கிறது. கதை என்ன தெரியுமா? மூன்று பக்கம் உள்ள கதையின் சுருக்கம் இதோ!

கோடீஸ்ரவர் ஒருவருக்கு சூர்யா என்ற பெண் குழந்தை ஒன்று இருந்தது. ஆனால் சிறுவயதிலேயே அந்தக் குழந்தை காணாமல் போய்விட்டது. இறந்த கோடீஸ்வரர் தனது சொத்து முழுவதும் தனது காணாமல் போன பெண் சூர்யாவிற்குக் கிடைக்க வேண்டும், அப்படி கிடைக்கவில்லை என்றால் யாரோ ஒரு ஜம்புலிங்கமும் ஸ்வர்ணமும் கல்யாணம் செய்து கொண்டு அந்த சொத்தை அனுபவிக்க வேண்டும் என்று இருந்தது. கோடீஸ்வரரின் வக்கீல் சோமநாத் தன் பெண்ணின் பெயரும் ஸ்வர்ணம் என்று இருப்பதால் இந்தச் சொத்தை அடைய திட்டமிட்டார். உண்மையான ஸ்வர்ணம் எங்கே? சோமநாதன் வெற்றி பெற்றாரா? இதில் உண்மையான சூர்யா கண்டுபிடிக்கப் பட்டாரா என்பது போன்ற பல கேள்விகளுக்கு இந்தப் படம் கடைசியில் பதில் கூறுகிறது.

இதில் முன்பே சொன்னபடி ஒரு பிச்சைக்கார பாட்டு பிரபல்யமானது. இந்தப் படத்தில் உள்ளவை பன்னிரெண்டு பாடல்கள். வண்டிக்காரன் பாடுவதாக உள்ள பாட்டு. இந்தப் படத்தில் மிகவும் பிரபலமானது.

பட்டணத்து வண்டி - மோட்டார் வண்டி - இங்கே

பட்டாக் கழன்றதே நொண்டி வண்டி

குட்டப் பெருச்சாளி குண்டுக் காரனே - நம்ப

குந்தாணி மூக்கையன் சொந்தக் காரனே -

கொத்தமங்கலம் சுப்பு பாடுவதுபோல ஒரு பாடலும் உண்டு.

ஏத்தம் இறைக்கிற நேத்தியிலே தண்ணி

பாத்தியிலே பாயுதே - சோக்கா

கோத்தி வயல் மேயுதே

முழுமையான எண்சீர் விருத்தத்தை ஒரு பாட்டாகவே யோகியார் தனது படத்தில் வைத்துள்ளார் என்பது அந்தக் காலத்தில் மிகவும் சிறப்பான செய்திதான்.

அடிகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில் லாமல்
கிடமுள மோஹனமாடக் கழைக் கூத்தாடச்
செப்பிடு வித்தைக ளாடத் தெரிந்தோ மில்லை
தடமுலை வேசையராகப் பிறந்தோ மில்லை
சனியான இங்கிலீஷை விட்டுப் பெண்க
ளிடமிருந்து தூது சென்று பிழைத்தோமில்லை
என்ன சென்ம மெடுத்துலகில் இருக்கின்றோமே!

ஏலக்கடை விற்பனைக்கும் ஒரு பாட்டு வைத்துள்ளார்.

சீமாங்க சீமாட்டிங்க சீக்கிரமே வாங்க இங்கே
சின்னப்பணம் பெரிய.சாமான் சீக்கிரமே வாங்க

மிஸ். மெட்ராஸ் சூர்யகுமாரி பாடும் 'ஐயா சிறு பெண்' பாட்டின் ஒரு சரணம் மட்டும் இங்கே.

காக்கைக்கொரு கவளமிட்டுக் கூடுவீரே - கெட்ட
நாய்க்குமொரு எச்சிலிலை தானிடுவீரே - ஒரு
போக்குமில்லாச் சிறுமியென்பால் கருணைவராதா

என்று பாடும் பெண்ணாக நடிக்கிறார்.

'லட்சுமி' என்ற ஒரு படத்தில் வசனம் - பாடல்களை எழுதியுள்ளார் யோகியார். மனோகர், எல். நாராயணராவ், ஸி.வி.வி.பந்துலு, ப்ரண்ட் ராமசாமி, கண்ணாம்பா, மெ.சரோ, ஸி.கே.சரஸ்வதி, வேணுபாய் ஆகியோர் நடிக்க, கே.பி. நாகபூஷணம் டைரக்ட் செய்துள்ளார். இப்படத்தில் 9 பாடல்கள் உள்ளன.

மாணவர்கள் பாடும் பாட்டாக முதலில் வரும் பாட்டு சைக்கிள் பாட்டு.

சல் - சலோ சலோசைகில் - வெகு
தமாஷ் தமாஷ் பல் - குஷி குஷி சல்
சலோ சலோ சைகில்
கிறுகிறு வேகம் - கிணு கிணு மோகம்
விரைவினில் வீட்டுக்கு போவோம் - நாம்

உலகத்தை ஆளும் தாயை வணங்கிப் பாடும் பாட்டு:

ஆதாரம் நீயே - அருள் புரிவாயே
அநந்த மாயே - துளசீ தாயே

கல்யாணப் பெண்ணைப் பார்த்து பெண்கள் பலர் கிண்டலாகப் பேசும் பேச்சே இங்கு பாட்டாக வருகிறது.

சிங்காரமே - எழிலலங்காரமே ஜோராய்
கல்யாணமே -
கண்களிலே காதல் ஒளி பாராய்
தாராய்!

கதாநாயகனும் கதாநாயகியும் ஒருவரை ஒருவர் கிண்டலடித்துப் பாடும் பாட்டாக ;

அத்தான் போடும் பொம்மையே
அனுமார் மூஞ்சி பொம்மையே - வெண்
கொக்குப் போலக் கோணலே
கோணங்கிக் கூனலே
சந்திரன் :
உல்லாச நேரம்
ஊஞ்சல் சிங்காரம்

பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீரங்க நாதனை நினைத்துப் பெண்பாடும் பாட்டாக

நாதனை மறவேனே - ஸ்ரீரங்க
நாதனை மறவேனே - காவேரி
நாடிவலம் செய்யும் நாயகன்

இந்தக் கால டுயட் போல உள்ள அந்தக் கால டுயட் :

தாரா : *ஒஹோ ராஜா*
சந்திரன் : *வா வா ராணீ*
கதிரொளி வீசும் கலைவாணி

கதாநாயகி தனியாக பாடும் பாட்டாக ஒரு சோக கீதமும் உண்டு:

என்னாசையே - பாழானதே
இனி வாழ்வேனோ!
தீருமா - என்றாகிலும் என் சோகவாழ்வு மாறுமா?

சந்தோஷத்திற்காக டான்ஸ் அல்லது சினிமா டான்ஸ் பாட்டு

இந்த உலகமே மெய்யடா!
சொர்க்கமும் - நரகமும் பொய்யடா!
இன்பமாக நீ ஆடடா பாடடா!

'திருமங்கை ஆழ்வார்' என்ற படத்திலும் சில பாடல்களை எழுதியுள்ளார் யோகியார் என்றும் கூறுவர்.

4. யோகியாரின் வெளிவராத எழுத்துக்கள்

யோகியார் எழுதிய சில கவிதைகள் மட்டும் "தமிழ் குமரி" என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக வெளி வந்துள்ளது. அச்சில் ஏறாத சில கவிதைகளையும், அந்தக் காலத்தில் சில பத்திரிக்கைளில் மட்டும் வெளியான கவிதைகளையும் இங்கு குறிப்பிட விழைகிறோம்.

காலையில் உதிக்கிறான் கதிரவன். அவனை அழகாக வரவேற்று மகிழ்கிறார் நமது யோகியார்.

காலைப் பொழுதில் சென்னைக் கடற்கரையில் - ஜோதிக்
கதிரவன் வரவினைக் காத்திருந் திட்டேன்
நீலக் கடலினோரு தூர விளும்பில் - பெரும்
நீல விசும்பும் வந்துகூடும் குகையில்
கோலச் சிவந்த வொளிக்கோளத்தெழுந்தே - மேகக்
கூட்டத்திற் கோடிவகைச் சாலங்கள் செய்தே
நாலு புறத்திலும் தன்கதிர் பரப்பி - சுத்த
ஞான வயிரநிறச் சோதி வீசினான்.

ஒரு பொருளை எடுத்துக் கொண்டு பாடல் புனைவது இவ்உலகில் சர்வசாதாரணமான ஒன்றாகிவிட்டது. அழகு பற்றியும், ஆசை பற்றியும் வந்த பாடல்களை எல்லோருமே அறிவார்கள். ஆனால் மகாகவி யோகியார் சுமார் அறுபதாண்டு காலத்திற்கு முன்னால் "பாட்டு, பாட்டு" என்றொரு கவிதையை எழுதியுள்ளார். எதெல்லாம் பாட்டு என்பதற்கு யோகியார் கொடுக்கும் விளக்கம்.

நிலவு பொழியு மமுதே பாட்டு
நீரில் விளையு மொலியே பாட்டு
கலவி மகிழும் களியே பாட்டு
காதல் கனியுங் கனிவே பாட்டு
குலவுங் குழவிக் குரலே பாட்டு
கோதை மடவார் விழியே பாட்டு
நலமும் புகழும் தெளிவும் பாட்டு
ஞானங் கவிதை யாவும் பாட்டே

நாடும் தமிழும் யோகியாரைப் பொருத்தவரை இரண்டு கண்கள் என்று கூறலாம். யோகியார் நாட்டைப் பற்றியும், தமிழைப் பற்றியும் எழுதியுள்ள பாடல்கள் பல. காங்கிரஸ் பொன்விழாப் பாட்டாக இவர் எழுதிய "வாழ்க மணிக்கொடி பாரதர் மெய்க்கொடி வாழ்கவே - அதை வந்து பணிந்து மகிழ்ந்திட வீரர்கள் சூழ்கவே" என்றபாடல் இவருக்கு 'தங்கப் பதக்கம்" பரிசு பெற்றுத் தந்தது. அன்று நம் நாடு விடுதலை பெற மகாகவி யோகியார் எழுதியுள்ள பல பாடல்களில் கீழ் உள்ள பாடல் அதிகமாக வெளியே தெரியாதது.

பல்லவி

விடுதலை முரசே - விடுதலை முரசே

சரணம்

வெற்றி விடுதலை பெற்று மகிழ்ந்திடக்
கொட்டிடுவாய் முரசே!
வீரப் புயலென வீசி யெழுந்திங்
குறுமிடுவாய் முரசே!

யாருக்கும் யாரும் அடிமையில்லை என்பதும், பெண்கள் அறிவு பெறுகவேண்டும் என்றும் கேட்கிறார் யோகியார்.

ஒருவர்க் கடிமை யொருவரென்ற வுறுதி ஒழியவே
உலக மீதில் யாவருக்கு மொருமை பொழிகவே
திருவும் கீர்த்தி கல்வி யாவும் சேர்ந்து வருகவே
தெய்வ மாதர் தங்களுக்கு ளறிவு பெருகவே

'காதல் மாட்சி' என்ற கவிதையின் முதலில் வரும் அடிகளில் அழகினை அழைக்கிறார் யோகியார்.

செங்கு முதலாயின் திருமணந்தான் வீசிடுமோ
பொங்கு மிதழ் மலர்த்தேன் புதுச்சுவைதானி னித்திடுமோ
துங்கமிகு நம்பவளச் சோபை துளும்பிடுமோ
நங்கையமு தமுத்தம் நயந்தொளிரும் தாமரையே.

'நாங்கள் வசித்து வரும் தோட்டம்' என்ற பாட்டு யோகியாரின் ஆசையான தோட்டம் மற்றும் அதன் நடுவில் ஒரு வீடு. அந்த தோட்டத்தில் பல பறவையினங்கள் என்று கற்பனைக் குதிரையை ஓடவிடுகிறார் யோகியார்.

பல்லவி

நாங்கள் வசித்து வருந்தோட்டம் - அதில்
நல்ல நிலவு நடமாட்டம்

சரணம்

மிக்க உயர்ந்தபெரு மரங்கள் - அதில்
மேவும் கரியமுட் புதர்கள் - ஒரு
பக்கத்தி லோடுநல் லோடை - எங்கு
பார்க்கினும் நறுமணவாடை.

"கிளித்தூது" என்ற பாடலில் தன் தேவியிடம் தூது சென்று தனது குறைகளைக் கூறும்படி வேண்டுகிறார் யோகியார்.

தாதவிழுங் கொன்றைமலர்த் தார்முடித்த தேவியிடம்
தூதுசென்றெந் தன்குறையைச் சொல்லுவையே பைங்கிளியே
முல்லை நகையாலே மூண்டபெருங் காதலிடை
அல்லற் படுதல்சொல்லி யழைத்துவா பைங்கியே

அடிமை வாழ்வு வாழ்வதை விடத் தாழ்மையில்லை என்றும், அதனின்றும் விலகுவதற்கு நம்மிடம் ஒற்றுமை வேண்டும், கல்வி வேண்டும் என்பதையும் காட்ட,

ஒருவர்க் கடிமை யொருவரென்ற வுறுதி ஒழியவே
உலக மீதில் யாவருக்குமொருமை பொழிகவே
திருவும் கீர்த்தி கல்வியாவும் சேர்ந்து வருகவே

எனவும்

ஜாதிமத கிளர்ச்சிகள் தலைவிரித் தாடுவதைக் கடிந்து

சாதிச் சேற்றில் சமயத்தின் குப்பையில்
சாத்திரக் கந்தலில் தடுமாறக் கூடாதென்றும்
சூழும்புலையரும் தோழரெமக்கெனச் சாற்றிடுவாய் முரசே

என்றும், பெண்களின் நிலைமையை உயர்த்தக் கருதி,

'தெய்வமாது தங்களுக்கு எறிவு பெருகவே' எனவும்,

பாடியுள்ளார்.

"ஞானக் கூட்டுறவு" என்ற கவிதையில் யோகியார் இயற்கையை, அதன் அழகை வர்ணித்துப் பாடுகிறார்.

நல்ல நிலவினிலே - மதி
நல்லொளி எங்கும் நடிக்கையிலே தென்றல்
ஒல்லை வருகையிலே - அங்கு
ஓடையி லோடுஞ் சலம்சிறு கற்களை
மெல்ல வுருட்டையிலே - அதில்
மேவிய வோசை சலசல வென்றிட

"மாலைப்பொழுது" என்ற பாடலில் யோகியார் காணுகின்ற அந்தி வண்ணமயமான மாலையைப் பார்த்து ரசித்து அப்படியே நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகிறார்.

மாலைப் பொழுதினிலே - நீல
வான வெளியினிடை மேலைத் திசையின்
கோலங்கள் சொலத்தரமோ - ஒரு
கோடிக் கவிதையுளு மடங்குவதோ
எத்தனை வகை நீலம் - அதில்

'காலம்' என்றொரு கவிதை 'தமிழ்குமரி' என்ற நூலில் உள்ளது. ஆனால் முதலில் அதை யோகியார் எழுதியது வித்தியாசமான சூழ்நிலையில் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. காரணம் 1932 - ம் ஆண்டு இந்தியாவில் உள்ள அனைவரும் விரும்பியது எது என்று எல்லோரும் அறிவர். அதைத்தான் தனது கவிதையிலும் கூறுகிறார் யோகியார்.

உயிர் கொடுக்கும் உத்தமர்கள் சிலரே
நாங்கள் தருகின்றோம்
எத்தனை தலைகள் உருள வேண்டும்
எத்தனை ஹ்ருதயங்கள் உடைபட வேண்டும்?
எத்தனை உயிர்கள் மடிய வேண்டும்?
முப்பது கோடியும் சாகட்டும்
இலையேல்
முப்பது கோடியும் வாழட்டும்
எப்படியேனும் சுதந்திரம் வேண்டும்
அதை நீ தருவாயா?

அந்தக் காலத்தில் சுதந்திரவேட்கை முதல்நிலை பெற்றது. காங்கிரசும் அந்த இயக்கத்திற்குள் இணைந்த பல விஷயங்களில் ஒன்று கதர். அதை நெய்யப் பயன்படுத்தப்படுவது ராட்டை. அதையும் யோகியார் தனது பாட்டில் பயன்படுத்தாமல் விடவில்லை.

ஆடு ராட்டே - சுழன்
றாடு ராட்டே - கெட்ட
அடிமை யழிந்ததென் றாடுராட்டே!

ராட்டை வரை வந்துவிட்ட யோகியார் மகாத்மா காந்தியை நினைக்காமல் இருப்பாரா என்ன? யோகியார் காந்தியைப் பற்றிப் பாடிய பாடல்கள் சாகாவரம் பெற்ற பாடல்கள்.

எண்ணருந் திடம னத்தோய்
ஏற்றநல் குணத்தின் மிக்கோய்
தண்ணரும் கருணை பூண்டோய்
சாந்தமெய்க் கடலை யுண்டோய்
நண்ணரும் ஞான வீட்டில்
நாடியே வதியு மெந்தாய்
புண்ணிய காந்தி யுன்றன்
பொற்கழல் போற்றி போற்றி!

காளியின் பக்தரான யோகியார் தனது இஷ்ட தெய்வமான காளியையே "படம் வரைதல்" என்ற பாடலில் வரைய முற்படுகிறார்.

<u>பல்லவி</u>

எப்படிப் படம் வரைவதோ காளி - உந்தன்
இன்ப ஜோதி வடிவங் காணாமல்

<u>அனுபல்லவி</u>

சொப்பனங் கூடநான் கண்டிலே னம்மா
சுருதியின் வர்ணனை கருதிலே னம்மா

<u>சரணம்</u>

இப்படியு மப்படியும் வரைந்துமே
எண்ணிலாத் தாள்கள் கிழிந்தன கொஞ்சமோ
ஒப்படி யானது ஒன்றுமிலை யம்மா
ஓய்ந்தன கைகளும் சாய்ந்த தென் னெஞ்சமும்

தாமரை ஒரு அழகிய மலர். அந்த மலரைப் பார்க்கிறார் யோகியார். நாமெல்லாம் பார்த்தால் மலரின் வண்ணம், அதன் தண்டு, மலரின் இதழ் ஆகியவைகள் மட்டுமே நம் கண்களுக்குத் தெரியும். ஆனால் மகாகவியான யோகியாரின் பார்வை வித்தியாசமான கோணத்தில் அமைந்துள்ளது.

காலைப் பொழுதினிலே கண்விழித்துக் கீழ்த்திசையின்

ஜாலக்கதில்பாடித் தனியே நான் போகையிலே

ஆங்கோர் தாமரைப்பெண் ணதிசயமாய் மலர்ந்திருப்பப்

என்று கூறி ஒரு காதற் பெண்ணை நம் கண்முன் காட்டுகிறார்.

"காற்று" என்ற தலைப்பில் யோகியார் பாடிய மற்றொரு கவிதையின் ஆரம்பமே நம்மை வசப்படுத்தி விடுகிறது.

காற்றே 'வலிமைக் கடவுளே" வருக

காதல் மலர்களின்போது கொணர்ந்திடு

கீதத் தீஞ்சுவை யூதி நடம் புரி

இளமையைப் பற்றியும், அதன் இயல்பைப் பற்றியும் "இளமைத் தெய்வம்" என்ற கவிதையில் விரிவாகக் கூறுகிறார்.

இளமை காக்க விரும்புகிலீரோ

இன்பங்காக்க முயற்சி செய்வீரோ

களையைப் பூணத் தவம் புரிவீரோ

காதல் காணத் துடிக் கின்றீ லீரோ

தளைகள் நீங்கத் தவிக்கின்றிலீரோ

தண்மதிக்கள் நிலாவினை மேவித்

திளையவேண்டிப் புகழ் சொலுகின்றேன்

தெய்வமாக விளங்கிடுவீரே!

தெய்வம் என்பது யார்? சிவனா, விஷ்ணுவா, யேசுவா, அல்லாவா புரியவில்லை. பின் யார் தெய்வம் என்று கேள்வியும் கேட்டு நமக்கு அவரே பதிலையும் இந்தக் கவிதையில் கூறுகிறார்.

ஈசனைக் கண்டறியோம் - முக்கண்

ஈஸ்வரனாம் சிவன்றனை யறியோம்

பாசங் களைபவனாம் - விஷ்ணு

பரந்தாமன் தனை. நாங்கள் பார்த்ததில்லை!

யேசுவின் தந்தை யென்பார் - அவர்

யாரென் றெவரு மறிந்ததில்லை

தேசுறுமல்லாவாம் - அந்தத்

தெய்வத்தை யொருவரும் தெரிந்ததில்லை.

சரி, தெரியாத தெய்வத்தைக் கண்டு பிடித்துவிட்டார் யோகியார். தெய்வம் யார்?

தெய்வமெங்கள் தெய்வம் - வான்

தேவர் தெய்வம் பாரதர் தெய்வம்

எந்தப் புலவனும் சரி, கவிஞனும் சரி வரம் வேண்டும் என்று கேட்காமல் இருந்ததில்லை. யோகியாரும் 'வரம்' என்ற தலைப்பில் தனியாக ஒரு கவிதையே பாடியுள்ளார்.

சிற்சில வரங்கேட்பேன் - அடி

தேவி நீயவை கொடுத்திடல் வேண்டும்

என்று கூறிய பின்பு எந்த ஒரு இடத்திலும் தனக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று விண்ணப்பம் செய்யவில்லை என்பதனால்தான் யோகியார் உயர்ந்து நிற்கிறார்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர் யோகியார் என்பதற்குப் பல இடங்களில் உதாரணம் காட்டலாம். ஆனால் யோகியார் இயற்கையை கவிதைகளில் பல வண்ணங்களில் தனது எண்ணங்களால் அலங்கரிக்கிறார். அதில் "காலையும் மாலையும்" ஒரு தனி வகை.

அழகுவான் தகட்டி லவள்படம் வரைதல் காண்

இருளெனும் பேழையி லின்னிசைத் தீஞ்சுவை

அமுத வர்ணங்க ளாயிர மாயிரம்

5. கம்பனும் யோகியாரும்

தமிழ் கூறும் நல்லுலகில் பல கவிஞர்கள், புலவர்கள் தங்களது கவிதைகளால் தமிழ்த்தாய்க்கு மாலையிட்டிருக்கிறார்கள். சங்க காலப் புலவர்களில் இருந்து தொடங்கி, இன்று வலம் வந்து கொண்டிருக்கும் கவிஞர்கள் வரை கம்பனைப் புகழாதவர்கள், யாரும் இல்லை. பலருக்கு கம்பன்தான் எல்லாம் என்றும் கூறுவார்கள். கம்பராமாயணம் இன்று உலக அரங்கில் மிகப்பெரிய ஒரு இடத்தைப் பிடித்துள்ளது என்றால் அது மிகையில்லை. கம்பனது கவிதைகளில் அவன் கையாண்ட சொல்லாட்சியும், பொருட்செறிவும் எல்லோராலும் பாராட்டப்பட்ட ஒன்று. கம்பராமாயணத்தையே பலர் மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் அளவிற்கு தங்களை மாற்றிக்கொண்டுள்ளார்கள் என்றால் பெருமையான விஷயந்தானே!

கம்பன் கவி
கவிகளுக்குக் கவியரசன்
கவியரசர்களுக்குச் சக்ரவர்த்தி
கவிச்சக்ரவர்த்தியும் வணங்கும்
கவிதை கடவுள்.

என்று கூறும் யோகியார், கம்பராமாயணத்தை ஒருகையிலும், தாயுமானவர் பாடல்களை ஒரு பையிலும் வைத்துக்கொணடு இந்த உலகத்தின் எந்த மூலை முடுக்குகளுக்குச் சென்றாலும் தமிழன் என்று தலை நிமிர்ந்து கூறலாம். அதற்கான தகுதி இவ்விரு புத்தகங்களினாலேயே வந்து விடுகிறது என்றும் யோகியார் கூறுவார்.

கம்பனைப் பொருத்தவரை அவன்மேல் யோகியாருக்குள்ள காதல் அபரிமிதமானது. அளக்க முடியாதது. கம்பராமாயணத்தையே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டும் என்றும் யோகியார் ஆசைப்பட்டார். அவர் இருந்த காலத்தில் சீதா கல்யாணத்தை மட்டுமே அவரால் மொழிபெயர்க்க முடிந்தது.

அகில உலகிலுமுள்ள பல்வேறு மொழிகளிலும் கம்பனது புகழ் பரவவேண்டும்; அவன் எல்லாக் கவிஞர்களையும் விட ஒரு படி மேலானவன் என்பதைக் காட்ட வேண்டும் என்பதுதான் யோகியாரின் ஆசை.

கம்பனைப்பற்றி எழுத வேண்டும் என்றால் யோகியாருக்கு இனிப்பு சாப்பிடுவதுபோல். கம்பர் கருத்துக்கள் நட்சத்திர மண்டலங்களைத் தாவித்தாவி முத்தமிடுகின்றன ; அவனது கவிதை அளக்க முடியாத ஆழங்களையெல்லாம் அளந்து பார்க்கிறது. அவனது மேதாவிலாஸத்தின் அகலம் அண்டத்தையும் தன்னுள் அடக்கிக் கொள்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் அவன் கட்டும் உணர்ச்சிக் கோபுரங்கள் படிப்படியாக உயர்ந்து போகிறது.

இத்தனைக்கும் மேலாக அதிசயமான வெறியும், வேகமும், வீர்யமும், ஆர்வமும், கனிவும் கூடிய கங்கா நதியின் கம்பீரமான கமனத்தைப் போன்று நடைபெறும் சொல்லாட்சியும், ஓசை இன்பமும், பொருட்செறிவும் நம்மைப் பரவசப்படுத்துகின்றன. நாமும், இவ்வபூர்வமான இன்பத்தை வாயால் சுவைப்பதா? காதால் பருகுவதா? உள்ளத்தால் உணர்வதா? உயிரால் அனுபவிப்பதா என்பது அறியாது திகைத்து, மயங்கி, தேனுண்ட வண்டெனத் தயங்கிப் புதிதாகியதோர் தேவ உலகிலே சஞ்சரிக்கின்றோம். நம்முடைய மனமும், அதன் சிறு சிறு கவலைகளினின்றும் நீங்கிக் காவியத்தில் வரும் கதாபாத்திரங்களின் குணானுபவங்களில் ஈடுபட்டு லயித்துப் போகிறது என்று கூறிய யோகியார் கம்பனைப் பற்றி ஒரு கவிதையையும் கூறுகிறார்.

'இம்பர் நாட்டில் செல்வம் எலாம்
எய்தி அரசாண்டு இருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கும் நிழலில் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திரள்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையைப் போல்
கற்றோர்க்கு இதயம் களியாதே!'

என்று கூறிய யோகியார் மேலும் சொல்கிறார்.

கம்பன் பெரியவன், மகாபெரியவன், மகா கவிகளுள் மகாகவி. வானத்தையே படுதாவாகக் கொண்டு கம்பன் ஆஜானுபாகுவான சித்திரங்களை வரைகிறான் என்று ஸ்ரீ.வ.வே.சு. ஐயர் கூறியுள்ளார். இதை முழுமையாக உணர்ந்த யோகியாரும், "உண்மை கம்பனிடம் சிறுமை என்பது எள்ளளவு கூடக் கிடையாது. வர்ணனையாகட்டும், வார்த்தா விலாசமும் சரி, உணர்ச்சிகளின் உத்வேகமென்றாலும், ரசனைக் கோவையானாலும், எங்கும், எதிலும், அவன் தனது அபாரமான பாடும் சக்தியால், கற்பனைத் திறமையால், காவியக் கனிவால், பெரிதுக்கெல்லாம் பெரிதாய், மகத்துக்கெல்லாம் மகத்தாய், மகோன்னதமான கனவுகளை சிருஷ்டித்து, சிருஷ்டித் தொழிலில் பிரம்மனோடு போட்டி போட்டு, அவனையும் வென்றுவிடுகிறான். ஒரு சிறு மலரைப் பார்த்து ஒரு சின்னஞ்சிறு துண்டுக் கவிதை எழுத அவனுக்குத் தெரியுமோ, தெரியாதோ? ஒரு மலர் என்றால் உலகமே வனமாகிறது. வனமெலாம் மலராகிறது. மலரெலாம் அகல விரிந்து அலகிலாதது ஆகிவிடுகிறது என்றுதான் அவனால் எழுத முடியும் போலும்," என்கிறார்.

யோகியாருக்கு கம்பன் மேல் உள்ள அபரிமிதமான காதலால் இந்த நாட்டையே போற்றுகிறார். வேறு எதற்காக இல்லாவிட்டாலும், கம்பன் பிறந்த நாடு, கம்பனது காவியம் தோன்றிய நாடு என்ற வகையிலேனும், இந்நாட்டை எந்த நாட்டினும் முன் நாட்டிக் கூற அடியேன் தயங்கில்லேன் என்கிறார் யோகியார்.

கம்பன் நமது கவிஞர்களில் எதை எல்லாம் கொண்டிருக்கிறார் என்று கேட்டால் சங்க இலக்கியத்தின் தனிக் கவிதைகளின் தழைவும், வள்ளுவர் வகுத்த வரன்முறை வளமையும், சிலப்பதிகாரத்தின் தொடர்நிலைச் செய்யுளின் சிறப்பும், சிந்தாமணியின் கதைக் கோவைக் கவிதைகளின் கனிவும், வேதக் கவிதைகளின் வியப்பும், வான்மீகியினது கவிதைகளின் வனப்பும், வியாசானது கட்டுக் கோப்பின் கணிப்பும், காளிதாஸனது காதல் கவிதைகளின் நளினமும், நயப்பும் கலந்து கனிந்து காவியக் களிப்பு கம்பனது கவிதைகளில் பளிச்சிட்டு மின்னிப் பரவசம் செய்கின்றது என்கிறார் யோகியார்.

தமிழில் மரியாதைக்குரிய சொற்கள் அவர், இவர். அவன், இவன் என்பது மரியாதை தராத சொற்கள் என்று கூறலாம். இவ்வளவு புகழ்ந்து கூறும் போது மகாகவி கம்பர் என்றுதானே அழைக்க வேண்டும். ஆனால் நாம் கம்பன் என்றுதானே அழைக்கிறோம். மரியாதை குறைவதில்லையா என்று கேட்டால் அதற்கும் யோகியார் பதில் வைத்துள்ளார்.

மகாகவியாகிய கம்பனை, கம்பர் என்று மரியாதை செய்யாமல், கம்பன் என ஏகவசனமாய் அழைப்பது குறித்துச் சிலர் ஆயாசப்படலாம். புதிதாகக் காணும் ஒருவரை உபசார மொழிகளால் உயர்வு படுத்துகிறோம். சகஜமாகப் பழகிய பின், அவரையே 'அவன்' என்று உரிமை கொண்டாடுகிறோம். எவற்றினும் உயர்ந்த வான்மீகரை வான்மீகன் என்றும் அடியேன் அழைக்கின்றேன். கேள்வியும் கேட்டு பதில் சொல்வதும் உண்டு. கவி என்றால் யார்? கவிதை என்றால் என்ன? கவிக்கும் மகாகவிக்குமுள்ள வித்யாசம் என்ன என்பதை கேள்வியும் கேட்டு அதற்கு உலக இலக்கியங்களில் இருந்து எடுத்துக் காட்டும் தருகிறார் யோகியார்.

புத்தம் புதிதாகப் பூத்த ஒரு பொன்மலர். அந்த மலரைப் பலர் பார்க்கிறார்கள்.

மலரைப் பற்றிய விஞ்ஞானியின் அறிவு தொகுத்து வகுத்துப் பார்க்கும் பகுத்தறிவு; பாமரன் அறிவு பகுத்தவற்றைத் தொகுத்து மலரை மலராகவே காணும் மாண்பு; வியாபாரியின் அறிவு பயன் அறிவு; பக்தன் அறிவு அதன்பிறகு அறிகுறியான அடையாள அறிவு; ஞானிக்கு மலர் அருவத்தின் அபூர்வமான சின்னம்; கவிராயன் அறிவோ பகுத்தல், தொகுத்தல், எழுவாய், பயனிலை என்பவற்றைக் கடந்த பரவசம். தானே மலராய் மலரே தானாய்க் கற்பனை காட்டி மிகுத்தறியும் மேன்மை. அவன் மலரைப் பார்ப்பதில்லை; அம்மலருள் தன்னையே பார்க்கின்றான்; எனவே, கற்பனையே கவிதையின் வேர், கலையின் மலர், காவியத்தின் கனி.

ஆம். இயற்கையாகச் சேற்றில் முளைக்கும் செந்தாமரை வேறு, கற்பனைக் கனவில், சிந்தனையில் முளைக்கும் செந்தாமரை வேறு. முன்னதைச் சுற்றி வண்டுகள் வட்டமிடும்; பின்னதில் அழகுத் தெய்வமான திருமகள் குடி இருக்கின்றாள். கடவுட் கவிஞன் கட்டிய கற்பனையில் பிறந்த வெண்தாமரையில் அறிவுத் தெய்வமான கலைமகளும், நீலத்தாமரையில் அன்புத் தெய்வமான அம்பிகையும் கொலு வீற்றிருக்கின்றனர். இவ்வாறு ஞானியின் அருவமான கடவுளை, கற்பனையால் உருவங்கொடுத்து, காவிய ஜீவன் ஊட்டிக் கவரும் சக்தி கவிஞன் ஒருவருக்கு மட்டுமே உண்டு என்பது யோகியாரின் கூற்று.

கவிக்கரசன் கம்பன் நான்முகனைக் கவிதை மலரில் உறைபவன் என்ற பொருளில் 'உறுகவி மலரோன்' என்கின்றான்.

காளமேகப்புலவர்,

'முண்டகத்தின் மேலே முழு நீலம் பூத்ததனைக்

கண்டது உண்டு கேட்டது இல்லை காண்'

என்று விடுகதை வினா எழுப்புகின்றான்.

கம்பனும்,

மை அவாம் குவளையெல்லாம்

மாதர் கண் மலர்கள் பூத்த

கை அவாம் உருவத்தார் தம்

கண் மலர்க் குவளை பூத்த

செய்ய தாமரைகள் எல்லாம்

தெரிவையர் முகங்கள் பூத்த

தையலார் முகங்கள் செய்ய

தாமரை பூத்த அன்றே'

என்று நீரும் நிலமும் போட்டி போட்டு மலர்களை நிரப்புவதாகக் கற்பனை செய்கின்றான். எனவே, கற்பனையே கவிதையின் காணியாட்சி என்கிறார் யோகியார்.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை

வெல்லும் சொல் இன்மை அறிந்து"

என்னும் வள்ளுவன் வாக்கிற்குச் செய்யுள் ரீதியில் உதாரணம் கூறவேண்டுமானால், கவிதை உலகிலே கம்பனைப் போன்ற பொருத்தமான உதாரணங்கள் கிடைப்பது அரிது.

முடி சூடி வரும் தன் மகனை ஆவலோடு எதிர் பார்க்கும் கௌஸல்யா தேவியின் முன் முடி இழந்த ராமன் வெற்றாளாய்ச் சென்றான் என்பதைக் கூறும் பாட்டிலே உள்ள வார்த்தைகளில் எதை மாற்றினாலும் பாட்டின் அழகு குறைந்துவிடும் என்று கூறுகிறார் யோகியார்.

'குழைக்கின்ற கவரி இன்றிக்
கொற்ற வெண்குடையும் இன்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம் பின் இரங்கி ஏக
மழைக்குன்றம் அனையான் மௌலி
கவித்தனன் வரும் என்று என்று
தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்
முன் ஒரு தமியன் சென்றான்'.

'மழைக் குன்றம்' என்றமையாலே ராமனது கருணையை மட்டுமின்றி அவனது தெய்வத் தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றான் கம்பன் - குன்று, குன்றிற் குலவும் முகில்கள், முகிலின் மேல் விரிந்து கவிந்துள்ளூ வானம், அவ்வானத்திலுள்ள கதிரவன் - இவ்வளவையும் ராமனது விராட் ஸ்வரூபமாக. 'மழைக் குன்றம்' என்பதால் ராமனாகிய கருணை மலையையும், 'குழைக்கின்ற கவரி' என்பதால் அம்மலையைச் சார்ந்து சார்ந்து குழையும் மேகங்களையும், 'கொற்ற வெண்குடை' என்பதால் மேலே விரிந்துள்ள வானத்தையும், 'மௌலி' என்பதால் வையத்துத் தொழிபடுத்தும் வானச் சகரமான கதிரவனையும், இவ்வாறு உலகமே தன் என ஆன ராமன் அத்தன்மையின் அறிகுறியாக முடிசூடி வருவான் என்ற கௌஸலையின் உள்ளுணர்வையும் கம்பன் இணைத்துக் காட்டுகின்றான், என்கிறார் யோகியார்.

மற்றொரு பாட்டையும் யோகியார் கூறுவதை நாம் இங்கு பார்க்க வேண்டியது மிக முக்கியம். யோகியாரின் சிறப்பும், கம்பனது பெருமையும் ஒரு சேர நாம் உணர முடியும்.

இதில் ராமாயணத்தின் ராமாவதார நோக்கத்தின் வஸ்து தர்மம் முழுமையுமே இந்த ஒரு பாட்டில் வார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அகல்யா சாப விமோசனம் ஆனதும் விசுவாமித்ரன் ராமனைப் பாராட்டுகின்றான்.

'இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனி இந்த உலகக்கு எல்லாம்
உய் வண்ணம் அன்றி மற்றோர்

துயர் வண்ணம் உறுவது உண்டோ

மை வண்ணத் தரக்கி போரில்

மழை வண்ணத்து அண்ணலே உன்

கை வண்ணம் அங்கு கண்டேன்

கால் வண்ணம் இங்கு கண்டேன்'

"தாடகை ஸம்ஹாரத்தில் துஷ்ட நிக்ரகமாகிய உன் கரலீலையைக் கண்டேன்; அகல்யா சாப விமோசனத்தில் சிஷ்ட பரிபாலனமாகிய உன் கால் லீலையைக் காண்கின்றேன்." (ராமாவதார லீலையில் கால் பகுதி தீர்ந்தது என்ற பொருளும் இங்கு தொனிப்பது காண்க) ஆகவே இனித் தீயோர் அழிவர்; நல்லோர் வாழ்வர்; உலகில் துன்பமே இராது; இன்பமே நிறையும் என்றெல்லாம் கூறும் விசுவாமித்ரனது வாக்கிலே,

மை வண்ணத்து அரக்கி போரில்

மழை வண்ணத்து அண்ணலே....

என்று எவ்வளவு அழகானதோர் வர்ணனையைக் கம்பன் புகுத்தியுள்ளான். தாடகையும் கறுப்பு; ராமனும் கறுப்பு. அவள் மை வண்ணத்து அரக்கி; இவன் மழை வண்ணத்து அண்ணல். இரண்டு கருமைகளுக்குந்தான் எவ்வளவு வித்தியாசம்? மை என்றால் ஆசை, வஞ்சனை, பொய், ஏமாற்று எல்லாம். மழை (மேகம்) என்றால் கருணை, அருள், அன்பு. அவள் அரக்கி; அகப்பட்டதை அழிப்பவள், மறைப்பவள், மாய்ப்பவள். அண்ணல் என்றால் யாவற்றையும் அளிப்பவன், அமைப்பவன், வளர்ப்பவன், காப்பவன். எனவே, மைவண்ணம், மழைவண்ணம்; அரக்கி, அண்ணல் என்ற சொற்களின் ஜாலத்தாலேயே உயர்வான ஆழ்ந்த கருத்துக்களைக் கம்பன் சுலபமாக அமைத்துவிடுகிறான். இத்தகைய அமைப்புகள் காவிய உலகத்திலேயே மிக மிக அபூர்வமானவை என்பது யோகியாரின் எண்ணம்.

மனிதனின் சொற்கள் முதல் முதலாக இசை கலந்த செய்யுட்களாகவே வெளிப்பட்டன. உலகத்தில் மிகமிகப் பழைய நூல்கள் எல்லாம் பாட்டுக்களே. ரிக்வேதம், ஜெண்ட் அவஸ்தா **(Zend Avestha)**, எல்டர் எட்டா **(Eleder Edda)**, நம் நாட்டுச் சங்க இலக்கியங்கள் எல்லாம் இசை கலந்த செய்யுட்களே.

கம்பன் ஒருநாள் ஏற்றப்பாட்டைக் கேட்டானாம். அன்று அது 'மூங்கிலிலைமேலே' என்று முடிந்ததால் அன்றிரவெல்லாம் 'இதற்கப்பால் என்ன வரும்?' என்று என்னென்னவோ யோசித்தும் கம்பனுக்கு ஒன்றும் விளங்கவில்லையாம். மறுநாள் அதிகாலையிலேயே ஏற்றம் இறைக்கும் இடத்திற்குச் சென்று, அப்பாட்டின் அடுத்த அடியைக் கேட்கக் காத்திருந்தானாம். ஏற்றம் இறைப்போர் பாட்டைத் துவக்கினர்.

'மூங்கிலை மேலே - தூங்கு பனிநீரே'

என்று ஆரம்பித்தனராம். இதைக் கேட்ட கம்பன் 'ஏற்றப்பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை' என்று பாராட்டினானாம்.

'பல சமயங்களில் ஒரு எதுகையே ஒருவருடைய கருத்துக்களைப் படைப்பதில் உதவியுள்ளது' என்று க்ளூலோ (Clulow), ட்ரைடன் (Drydon) என்னும் கவியைப்பற்றிக் கூறுகிறார்.

யோகியார் தன்னைப் பற்றிக் கூறும்போது

'நூறுகுடம் ரெண்டுதரம் நொடியில் இழுக்கணுமாம்'

என்ற வரியை எழுதிவிட்டு அடுத்த வரியில் 'நூறு' என்பதற்கேற்ற எதுகையைப்பற்றி யோசிக்கும்போது 'சேறு தடம்', 'மாறுபடும்', 'தூறடங்கும்', 'கூறுகொளும்' என்று எவ்வளவோ இருக்க 'ஆறு' என்பது என் மனத்திற் பளிச்சிட்டது. என்ன காரணமோ என் மனம் அதிலேயே லயித்தது, இவ்வார்த்தை என் கருத்தை விழுங்கித் தீர்த்தது. அவ்வளவுதான்,

'ஆறடங்கும் தொட்டியினில்'

என ஓர் 'ஆற்று வெள்ளத்தையே அடக்கக் கூடிய அவ்வளவு பெரிய தொட்டி' என்ற அற்புதமான கற்பனைக் கருத்து உருவாகிக் கவிதைக்கு உயர்வு கொடுத்தது. எனவே, வெறும் எதுகையே உயரிய ஓர் எண்ணத்தை உற்பத்தி செய்துவிட்டது. ஒரு மாட்டுப்பெண் தன் மாமியாருக்காகப் பாடும் பாட்டில்,

'துத்த கிணற்றடியில் தூங்கும் பாதல நீரைப்
பொத்தலோர் ஆயிரமாம் பொக்கை வாய்த் தோண்டியினால்
நூறுகுடம் ரெண்டுதரம் நொடியில் இழுக்கணுமாம்
ஆறடங்கும் தொட்டியினில் அவள் துளைய வெந்நீரைப்
போட்டு விளாவணுமாம் புடவை துவைக்கணுமாம்'

என்று 'நூறு குடம்' உற்பத்தி செய்த, என்னிச்சை இல்லாத 'ஆறடங்கும்' இப்பாட்டின் உயர்வு நவிற்சி அலங்காரமாய் அணி செய்கிறது, என்கிறார் யோகியார்.

கருத்தின் வழியே சொல் செல்ல, அச்சொல்லின் வழியே செய்யுள் செல்ல, அச்செய்யுள் வழியே இசை செல்ல - இவ்வாறான பல்லலங்காரங்களோடு கூடிக் கவிதை நடைபெற வேண்டுமென்பதே கம்பனது சித்தாந்தம்.

புதிய கருத்து, புதிய சொல்லாட்சி, புதிய எண்ணங்கள் எல்லாம் கவிதையில் எப்படி இருக்க வேண்டும் என்று கூறவரும் யோகியார் பழையதை மறுக்காமல் மாற்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். எப்படி? புதுமை என்பதாலேயே பழமை எல்லாம் தவறென்றோ, புதுமை எல்லாம் சரியென்றோ அர்த்தமில்லை.

பழமை நம் வாழ்வின் விதை, வேர், அடிமரம். புதுமை கிளை, இலை, மலர், காய், கனி. பழமையை நீக்கிப் புதுமை காண்பது நுனிமரத்திலிருந்து அடிமரத்தை வெட்டுவதாகும். புதுமையை விலக்கிப் பழமையிலே மூழ்குவது விதையைப் பெரிதாக்கி விளைவில்லாமற் செய்வதாகும். பழைய வஸ்து, புதிய மெருகு; பழைய கருத்து, புதிய கவின்; பழைய மது, புதிய கிண்ணி; பழைய விருட்சம், புதிய விதைகள் – இதுவே கவிதையில் புதுமை செய்யும் சித்தாந்தம்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே'

என்று நன்னூல் சூத்திரமும்,

'முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
அழியா மரபினது வழிநூல் ஆகும்'

என இறையனார் களவியலுரையும்,

'மரபு நிலை திரியா மாட்சிய ஆகி
உரை படு நூறாம் இருவகை யியல
முதலும் வழியும் என நுதலிய நெறியின'

எனத் தொல்காப்பியமும்,

'இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித்
திரிபு வேறுடையது புடை நூலாகும்'

எனக் களவியலுரையும் கவிதையில் புதுமை காணும் வகைகளையே பொருந்தக் கூறுகின்றன.

'எல்லோரும் ஒரே மனதாய் புதிய கருவிகளைப் புகழ்வர் எனினும் அவை பழையவற்றினின்றே உருவாகியுள்ளன' என ஷேக்ஸ்பியரும்,

'புதுமையாம் தனிப் பண்பு பழங்கண்களுக்குப் புதுக் கண்ணாடி அணிவதேயாகும்' என்று ஹிக்கின்ஸனும் (Higginson) கூறியுள்ளதை ஓர்க.

'புதுமையே இன்பத்தின் முதன்மையாம் தாய்'

என்று ஸௌத் (South) தும்,

'படிப்பதைவிடப் படைப்பது பெரிது'

என்று நெய்பூ (Niebhu) ரும்,

'தானே சிந்தித்துப் பிறரைக் காப்பியடிக்காமல் இருப்பவனே விடுதலை பெற்ற மனிதன்!'

என்று க்ளாப்ஸ்டோக் (Klopstock)கும்,

'எதையாவது படைப்பவனிடம் ஏதாவது புதுமை இருந்தே தீரும்.

என்று மஹாகவி கதே (Goethe)யும்,

'அடுத்தவர் வனத்திற் பூத்த வண்டி அளவு மலர்களைக் காட்டிலும் தானே உற்பத்தி செய்த புல் நுனியே மேலானதென்பதைக் கவிஞர்கள் என்று தான் உணர்வார்களோ?' என்று லோவெல் (Lowell)லும்,

'தன்னுள் ஒளி உள்ளவன் பிறரைச் சுற்றி உபக்ரஹங்கள் போல உழலமாட்டான்' என்று அன்னா (Anon) னும் கூறுவது புதுமையின் பெருமையேயாகும். கம்பன் கையாண்ட கதை மிக மிகப் பழையது. பரமசிவன் பார்வதிக்கு உபதேசித்தது என்பர்.

கம்பனும்,

தேவ பாடையில் இக்கதை செய்தவர்

மூவரானவர் தம்முளும் முந்திய

நாவினார் உரையின்படி நான் தமிழ்ப்

பாவினால் இது உணர்த்திய பண்பு அரோ'

என்று முதல் நூலுக்கு முக்கியத்வம் கொடுக்கிறான். இங்கும் கூட அவனது கவிதை மிடுக்கு தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளுகிறது. வான்மீகன் நாவினால் உரைத்ததைத் தான் பாவினால் உணர்த்திப் போவதாகக் கூறுவதைக் காணுங்கள். ஒரு மஹாகவியின் மஹாகாவியத்தைப் பின் கவிஞன் கையாளும் பொழுது முன் கவியின் கருத்துகளே அவன் மனத்தில் நின்று மொழிபெயர்ப்பாக வெளிப்படுவது இயற்கை. ஆனால் கம்பனோ மஹாகவிகளுக்குள் மஹாகவி. எனவே, வான்மீகனிடமிருந்து அவன் கதையை மட்டுமே கடன் வாங்குகிறான்.

வான்மீகனது காவ்யம் இயற்கை அன்னையின் இன்பகரமான காட்சியில், ஒரு நதியில், நிலவொளியில் அன்னமொத்த பொன்மயமான ஒரு தோணியில் ஏறிப் பவனி வருவது போன்றது. ஆனால் கம்பனது ராமாயணம் இதற்கு நேர்மாறானது. அவன் வாழ்ந்த காலம் காடு திருத்தி நாடாக்கி, நாகரிகக் கூடாக்கி, நன்மையும் தீமையும் ஊடாடும் நகராக்கி மக்கள் வாழ்ந்த காலம், என்று கூறும் யோகியார் இக்காலத்திற்கு ஏற்ப அவன் கவிதையும், நகர வாழ்வின் நலமாய், நகர மக்களின் உணர்ச்சியாய், இயற்கையே மனித உணர்ச்சிகளின் கண்ணாடியாக மாறும் கவினாய் விளங்குகிறது.

வான்மீகன் கதை 'ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு காலத்தில் ஒரே ஒரு அரசன்' என்று கதை சொல்லுவதுபோல் கனிவு காட்டுகிறது. கம்பன் கவிதை கதை சொல்லவில்லை. கதையை நாடகமாக்கிக் கண்முன் நடித்துக் காட்டுகிறது. வான்மீகி ராமன் அகல்யாவின் கதையைக் கேட்டு அவளுக்கு சாபவிமோசனம் அளிக்கின்றான். கம்பனோ ராம நாடகம் நடிக்கின்றான். எடுத்த எடுப்பிலேயே சாபவிமோசனக் காட்சி வந்துவிடுகிறது.

இந்த நாடகப் பாணியை- ஏன் சினிமாவின் சீர்மையைக் கம்ப ராமாயணத்தில் எங்கும் காணலாம். காவிய கம்பீரத்தில் மில்ட்டனை வெல்லும் கம்பன், கட்டுக்கோப்பில் ஷேக்ஸ்பியருடன் போட்டி போடுகிறான்.

'குகனோடும் ஐவரானோம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனோடும் அறுவரானேம் எம்முறை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்
புகல் அரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை'

என நால்வர் சகோதரர் எழுவராகும் நயப்பே கம்பராமாயணம்.

ராம ராவண யுத்தமே நோக்காக வான்மீகன் 'பௌலஸ்ய வதம்' என்று தம் ராமாயணத்தை நடத்துகிறான். கம்பனும் ராவண வதத்தையே காவியத்தின் லக்ஷ்யமாக்கினாலும், வான்மீகனைக் காட்டிலும் வேறுபட்ட நிலைமையில் முப்பெரும் நாகரிகங்களை ஸ்ருஷ்டித்து, ஒன்றை ஒன்றோடு மோதவிடுகின்றான்.

இதனாலேயே கம்பராமாயணத்தின் புதுமைகளை மனத்திற் கொண்டே, அபியுக்தர் ஒருவர் வான்மீகத்தை, 'ஆரணக்கவிதை' என்றும், கம்பனை 'காரணக் கொடையான்' என்றும் கூறுகிறார்.

'அம்பிலே சிலையை நாட்டி
அமரர்க்கு அன்று அமுதம் ஈந்த
தம்பிரான் என்ன முன்னோன்
தமிழிலே தாலை நாட்டிக்
கம்ப நாடு உடைய வள்ளல்
கவிச் சக்ரவர்த்தி பார்மேல்
நம்பு பா மாலை யாலே
நரருக்கு இன்று அமுதம் ஈந்தான்'

வான்மீகன் கவிதை வனத்தில் கனிந்து பாடும் குயில் என்றால், கம்பன் 'கம்பநாடன்' என்ற முறையில் காவிய நாட்டின் தனி அரசு செலுத்தும் கவிச் சக்ரவர்த்தி.

கம்பனது திறனை, பொருளை, சிந்தனையைப் போற்றிய யோகியார் தமிழில் எத்தனை வகையான பாடல்கள் உண்டோ அனைத்தையும் கம்பன் தனது ராமாயாணக் காட்சியில் படம் பிடித்துக் காட்டி விட்டான் என்று பெருமிதத்துடன் கூறுகிறார்.

கம்பனது காவியம், முதல் நூலாகிய வான்மீகத்தினின்றும் வேறான, புதியதொரு மோஹனம் மட்டுமல்லாமல், தமிழிலும் முன்னும் பின்னும், அன்றும்

இன்றும், என்றும் தனிப்பட்ட புதுமையோடு விளங்குகிறது. சங்கச் செய்யுட்களான அகவலும், வெண்பாவும், பண்ணிறைந்த விருத்தத் தொகையும் கம்பனிடத்திலே விருத்த விருத்தமாய்க் காவிய கதிபெற்றுக் கவின் காட்டுகின்றன. அவன் தன் காவியத்தில் தொண்ணூறு வகையான சந்தங்களை உபயோகித்திருக்கின்றான்.

கம்பனைப்போல் சந்தங்களை இத்துணை வலிமையோடும், வனப்போடும், வீரியத்தோடும் உபயோகித்தவர்கள் மிகவும் ஆபூர்வம்.

'கற்பு' என்பது பெண்ணிற்கு மட்டும் பொருந்தும் என்று கூறுவோர் பலர். ஆனால் கம்பன் மகாகவியாயிற்றே? வித்யாசமாக ஏதாவது செய்ய வேண்டாமா, அதனால் கற்பு எப்படி ஆடவர் பெண்டிர் இருவருக்கும் பொருந்தும் என்றும் கம்பன் கூறுகிறான் என்று ஒரு பாட்டுடன் நமக்கு மேற்கோள் காட்டி கூறுகிறார் யோகியார்.

'கற்பு' என்னும் சொல்லின் பொருளை யாவரும் அறிவர். ஆனால் அதைக் கம்பன் உபயோகிக்கும் தன்மை ஒருவகை ஆச்சர்யகரமானது. கற்பிக்கப் படுதலால் கற்பெனலாயிற்று என ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்துக் கற்பியலின் முதல் சூத்திரத்தின் உரையில் கூறியுள்ளார். கற்பு மாதர்களின் காணியாட்சி என்பதும் யாவரும் அறிந்ததே. கம்பனும் சீதாதேவியின் கற்பைப் பலபடியாகப் புகழ்ந்துள்ளான். ஆனால் ராவணனது மந்திரி சபையிலே, யானே சென்று மானுடரை வெல்வேன் என வீரம் பேசிய இந்திரஜித்தனை அடக்கும் வகையிலே விபீஷணன் உரையாக,

"நூலினால் நுணங்கிய அறிவு நோக்கினை
போலும் மாலுறு பொருள் உணரும் பூட்சியோய்!
கால மேல் விளைபவை உணரும் கற்பு இலாப்
பாலன் நீ இனையன பகரல் பாலையோ?'
'கருத்திலான் கண்ணிலான் ஒருவன் கைக்கொடு
திருத்துவான் சித்திரம் அனைய செப்புவாய்!"

என்று வரைந்துள்ளான். இதிலிருந்து 'கற்பு' என்பது பெண்மையின் பெருமையான ஒழுக்க சீலம் மட்டுமல்ல. படித்துப் படித்துத் தேர்ந்து, பண்பட்ட அறிவு; மயக்கம் நீங்கிய மனத்தெளிவு; பின் வருவனவற்றைத் தெரிந்துகொள்ளும் தீர்க்க திருஷ்டி; உண்மைத் தேட்டம்; ஞானம் என்பவையும் ஆகும் என்பதைக் கம்பன் வாக்கு விளக்கிக் காட்டுகிறது. நூலறிந்தான் போலப் பேசினான் இந்திரஜித்தன். அவன் பேசிய பேச்சு, 'மால் ஊறும் பொருள் உணரும்' மயக்கம். 'கால மேல் விளைபவை' உணரவல்ல தீர்க்க திருஷ்டியும், உண்மை நோக்கான ஞானமும் அவனுக்கு இல்லை. எனவே, அவன் 'கற்பு' இல்லாதவன் ஆகிறான். கண்ணும் கருத்தும் இல்லான் தீட்டிய சித்திரம் போல அவன் பேச்சு வெறும் சொல்லாடம்பரமே என்று கூறிய யோகியார், யான் அறிந்த வரையில் இந்தச் சொல்லை இந்தப்

பொருளில் கம்பனைத் தவிர வேறு யாருமே இவ்வளவு தெளிவாய்க் கூறியதில்லை, என்றும் சொல்லிப் பெருமைப்படுகிறார்.

ஒரு கவிக்குத் தோன்றும் கருத்தே மற்றொரு கவிக்கும் தோன்றுவது இயற்கை, அத்தகைய கருத்து சிலவற்றைக் கம்பன் உரைக்கும்போது, அதிலும் ஒரு புதுமை தோன்றத்தான் செய்கிறது.

'பொன்னைக் காட்டிலும் அழகு திருடரை அதி சீக்கிரயாகத் திருடத் தூண்டுகிறது' - என்ற எட்டு வார்த்தைகளால் ஆன வசனக் கருத்தை ஷேக்ஸ்பியர்.

'Beauty provokethe thieves sooner than gold'

ஆனால் இதே கருத்தைக் கம்பனோ நாலே வார்த்தைகளில் இசையுடன் கூட்டி,

'பொன்னினும் கள்வரைப் பொலிவு தூண்டுமால்' என்று இன்பம் காட்டிவிடுகிறான். இதிலும் 'தூண்டுமால்' என்பதிலுள்ள 'மால்' வெறும் அசையல்ல. 'மால்' மயக்கத்தின் அவசரம். எனவே, காட்டிலும் அவசரமாய் (Sooner than) என்னும் ஷேக்ஸ்பியர் வார்த்தைகளுக்கு நேரிணையாகத் தூண்டும் செயலோடு பொருந்த ஒரே சொல்லால் 'மால்' முழுக்கருத்தையும் முற்றக் காட்டுகிறது. மஹாகவி மில்ட்டனது துறக்க வீழ்ச்சி (Paradise lost)க் காவியத்தில் ஏவாள் (Eve) அங்குள்ள மரண மரத்தின் கனியைப் பறித்து உண்ணத் தொடங்கியபோது ஏற்பட்ட உற்பாதங்களை,

'Earth gelt the wound. Nature From her seat
Signing through all her works
gave sighs of woe,
That all was lost. Back to the thicket slunk
The Guiltie serpent'

என்று வர்ணிக்கின்றார்.

ஆங்கிலக் கவிதையை தமிழில் யோகியார் நமக்காகத் தருகிறார்.

'உலகம் அப்புண்ணை உணர்ந்தது, இயற்கை
தன்னுடைச் சலனத் தழைவுடு விம்மிப்
பொம்மிய துன்பப் பொருமல் காட்டிற்று;
குற்றம் நிறைந்த கோளராத் தனது
புற்றிடம் மெல்லப் புகுந்தது'

என்னும் வர்ணனையோடு, சீதாதேவியைக் கவர வந்த முனிவேஷம் பூண்ட ராவணனுக்கு, அவள் ஆசனமளித்து உபசரித்தபோது,

'நடுங்கின மலைகளும் மானும் நாஅவிந்து
அடங்கின பறவையும், விலங்கும் அஞ்சின
படங்குறைந்து ஒடுங்கின பாம்பும், பாதகக்
கடுந்தொழில் அரக்கனைக் காணும் கண்ணினே'

என்று இயற்கையில் ஏற்பட்ட உற்பாதங்களைப் பற்றிய கம்பனது வர்ணனையையும் ஒப்பிட்டுப் பாருங்கள், மில்ட்டனது துயரப் பெருமூச்சு கம்பனிடம், 'சூழ்ந்துள்ள காட்டில் மலைகளும் மரமும் நடுங்கின; பறவைகளின் கூச்சல்கள் அடங்கின; விலங்குகள் அஞ்சின' என்ற வகையில் உருவாகி வெளிப்படுகிறது. வெறும் உணர்ச்சி செயல்களின் விளைவாக விளக்கம் பெறுகிறது. தவிர, 'புற்றிடம் பாம்பு புகுந்தது என்பதைக் காட்டிலும் 'படம் குறைந்து ஒடுங்கின' என்ற எடுத்த படத்தைக் குறுக்கிக்கொண்டு 'ஒடுங்கும்' பாம்பின் சித்திரம் மேலானதல்லவா?

இப்படி எத்தனை எத்தனையோ சித்திரங்கள், வண்ணங்கள், சிறப்புகள், சீர்கள், வார்த்தைக் கோப்புகள், வளங்கள் எல்லாம் கம்பனது கவிதையில் காணலாம். உண்மையாகவே கம்பனது காவியம் ஒரு புதுமைக் களஞ்சியம் என்று கூறுகிறார் யோகியார்.

மகாகவி யோகியாருக்கு கம்பனைப் பற்றியும் அவனது கவிதைகளைப் பற்றியும் கூற ஆரம்பித்தால் நேரம் போவது கூடத் தெரியாது. அவருக்கு கம்பராமயணம் மனப்பாடமாக தெரியும். எந்த இடத்தில் இருந்தும் எந்தக் குறிப்பும் அவரால் கம்பராமாயணத்தில் இருந்து எடுத்துக்காட்ட முடியும். இன்னும் சொல்லப்போனால் கம்பனது பாடலின் சாயலிலேயே சில பாடல்களை யோகியார் இயற்றியுள்ளார்.

6. யோகியாரின் பார்வையில் பாரதி

பாரதியாரைப் பற்றி பல கவிஞர்கள், புலவர்கள் தங்களது எண்ணங்களை கவிதையாக வடித்துள்ளனர். பாரதிக்கு பின் வந்த யோகியார் மட்டும் சும்மா இருப்பாரா என்ன? அவரது எண்ணங்கள் பாரதி விழாக் கருத்தரங்கு ஒன்றில் 10121962-ம் ஆண்டு தலைமை ஏற்று நிகழ்த்திய உரையில் இருந்து சில துளிகள்.

பாரதியார் நம் எல்லோருக்கும் குருநாதர். தற்காலத் தமிழ் இலக்கியத்தின் தந்தை. கவிஞன் என்ற ஹோதாவில் எனக்கு அவர் ஒரு தெய்வீக ஸாந்நித்யமாவார்.

பாரதியைப் பார்த்துள்ளார் யோகியார். எப்படி இருப்பார் பாரதி என்பதற்கு யோகியாரின் வார்த்தைகளிலேயே விபரங்கள் உள்ளன.

நிமிர்ந்த நடை, நேரான பார்வை, மெலிந்த உடல், மொட்டைத் தலை, முறுக்கு மீசை, கிறுக்கு நெஞ்சம், எலுமிச்சம் பழ நிறம், படபடத்த பேச்சு, இடிக்குரல், கையில் ஒரு பிரஞ்சு நாவல் - இது தான் நான் முதல் முதல் கண்ட பாரதி. அவர் அதற்கு முன் தாடி வைத்திருந்ததாகக் கேள்வி; நான் பார்த்ததில்லை. உட்காரும் போதெல்லாம் மண்டிபோட்டுப் பிணம் விறைத்தாற்போல் விறைத்துவிடுவார். விழித்த கண் விழித்தபடியேருக்கும். சாப்பாடு மிகவும் சொற்பம், கூப்பாடு அதிகம், கஞ்சா வெறியும், அபினிக் குமுறலும் மீறிப்போகும். அவரது பிரசங்கம் ஒரு தனிவகை. அவரது வாக்கில் இனிமையில்லை, மென்மை கிடையாது. ஆனால் கடுமையுண்டு, கோபம் துள்ளும். பொதுவாகச் சொல்லப் போனால் ‘வழ வழ கொழ கொழ’ என்ற விளக்கெண்ணைப் பேச்சை பாரதி வெறுத்தார்.

தெளிவு, எளிமை, வலிமை, ஒளி இவைகளே அவரது பாஷையின் நடை.

இப்படி பாரதியை நமக்குக் காட்டிய யோகியார் வேறொரு இடத்தில் கூறுகிறார்.

பாரதி பிறப்பில் பிராமணர், பிரஹசரணம். ஆனால் அவரது முகத்தில் பிராமணக்களை சிறிது கூட இல்லை. வெறியினால் சிவந்த அகன்ற விழியும், துடிக்கும் மீசையும் போர்வீரனை ஒத்திருக்கும். பார்த்தவுடனேயே அவரை பிராமணரென்று கண்டு பிடிக்க முடியாது. உடல் தோற்றத்தில் மட்டுமல்ல குணத்திலும் கூட பாரதி என்கிற பிரமணன் வேறு, மற்ற பிராமணர்கள் வேறு. மற்ற பிராமணர்களுக்கு இயற்கையாகவுள்ள அச்சம் இவரிடம் சிறிது கூட இல்லை. இவர் தீட்டு, மடி, விழுப்பு, ஆசாரம் முதலிய தடபுடல்களையெல்லாம் வெறுத்தார். சாதிப் பாகுபாட்டை வேரோடு வெட்டி வீழ்த்த விரும்பினார். பெண்களை பரமமாதா காளியாகவே கொண்டாடினார். சமத்துவம், சகோதரத்துவம் முதலியவைகளே அவரது வாழ்க்கையின் லட்சியமாயிருந்தன.

பாரதியார் பிறந்த காலம் எத்தகையது? அக்காலத்திற்கு ஏற்ப அவர் என்ன செய்தார்.

“செந்தமிழின் சீர் மறைந்து,
பாவாணர் குலம் சிதைந்து
செழுமை நீங்கி
அந்தமிழ் அடிமைகளாய்
அந்நியராய் ஆங்கிலராய்
அலையுங் காலை
எம் தமிழ்நாடெம் தமிழர்
எங்கள் குலப் பண்பாட்டின்
ஏற்றம் கூற
வந்த பிரான் பாரதியாம்
மணிப்புலவன் வான் கவிஞன்
வாழ்க மாதோ”

மற்றும் நம் பாரதியார் தமிழ்மொழிச் சாதனையின் உச்சம்! எனவே நான் பாடினேன் என்று கூறுகிறார் யோகியார்.

சங்கத் தமிழ் மறவர்
தனிவலியும் வள்ளுவனார்
தரும நீதி
எங்களிளங் கோவினிசை
இன்சிலம்பும் சித்தர்களின்
இயல்பும் வேதம்
பொங்கு மொழி நால்வருடன்
பன்னிருவர் தேனிசையின்
போதத்தோடு
துங்கமுறும் கம்பனுரைக்
காவியமும் கொடுமுடி
கொள் தூய்மை பெற்றான்!

ஆம்! பாரதியார் புலமையின் சிகரம். இதுவரையில் தமிழ் நாட்டில் எத்தனையோ பாரதிகள் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர்; ஏன் நான் ஒரு

பாரதிதான். எனினும் அடைமொழிகளில்லாமல், சொந்தப்பெயரையும் குறிப்பிடாமல், எவருமே "பாரதி" என்று மட்டும் சொன்னால் அது நம் பாரதியாரை மட்டுமே குறிக்கும். எனவே அடியேன் பாடுகிறேன் என்று கூறுகிறார், யோகியார்.

பாரதியே பல புலவர்

பாரதியென் நடைமொழியால்

பண்புற்றாரே

பாரதியென் றிடிலெங்கள்

பாரதி யில்லாமலிந்தப்

பார்மேல் வேறே

பாரதியார் இப்பெயரின்

பண்பெல்லாம் தனக்கெனவே

படைத்துக் கொண்டான்

பாரதி எம் தனித்தலைவர்

சி.சுப்ர மணிய என்னும்

பாவின் வேந்தன்."

மற்றும் பாரதியார் வெறும் கவிஞர் மட்டுமல்லர். ரிஷிக் கவிஞர்; தீர்க்கதரிசி அவர் இன்றுள்ளவற்றை யெல்லாம்,

"அன்றுரைத்தான் எமைத்தட்டி
எழுப்பி விட்டான்
என்றுமுள உண்மைகளை எமக்கருளிக் குருநாத
னெனவே நின்றான்.
தின்றுழலும் வறுமையிலே
சிதைந்தாலும் மனம் சிதையாச்
சிங்கம் போன்றான்
பொன்றிடினும் பொன்றாத
புகழுடையான் பாரதி எப்
போதும் வாழி!"

அவரது தீர்க்க தரிசனத்திற்குப் பல உதாரணங்களை கூறலாம். நமது ஐந்தாண்டுத் திட்டங்களில் பல அவரது கனவில் கண்டவையே என்று முடிக்கிறார் யோகியார்.

7. சான்றோர்களின் திறனாய்வு

வலம்புரி சோமநாதன்

(யோகியார் மேல் அளவற்ற மதிப்பும் மரியாதையும் கொண்டவர். இவர் தனது கருத்துக்களை இங்கு கவினுர வரைகிறார்)

என் இளம்பருவம் ஒரு சிற்றூரில் கழிந்தது. அது கலைமகளின் திருவருளைப் பெறாத ஊர். அதனால்தானோ என்னவோ நான் பயின்ற பள்ளி அந்த ஊரின் எல்லைக்கு வெளியே இருந்தது.

அந்த ஊர் மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். நல்லவர்கள். யாரும் கல்வி கல்லாதவர்கள்.

அந்தச் சிற்றூரிலிருந்து நகரத்திற்கு மாறியபிறகுதான் பாடப்புத்தகங்கள் அல்லாமல் வேறு புத்தகங்களும் உண்டு என்பதை அறியலானேன்.

1946ல் ஒரு புத்தக விற்பனைக் கடையில் மேலாளராக வேலை கிடைத்தது, வேலையில் சேர்ந்த முதல் நாளே கடைக்கு ஒரு பார்சல் வந்தது. பிரித்துப் பார்த்தால் ஐந்து புத்தகங்கள், அத்தனையும் 'தமிழ்க்குமரி முதலிய பாடல்கள்' என்ற தலைப்பில் புதிதாக வெளிவந்த கவிதைத் தொகுப்பு நூல்! ஆசிரியர் ச.து. சுப்ரமணிய யோகி என்று போட்டிருந்தது. விற்பனைக்காக எங்களிடம் வந்திருந்தது.

வழக்கத்திற்கு மாறாக அதைப் பிரித்துப் பக்கங்களைப் புரட்டினேன். மேலோட்டமாகப் பார்த்தேன், என்ன அதிசயம்! சொற்கள் புரியாமல், பொருள் புரியாமல் பாடப்புத்தகங்களில் என்னை இம்சைப்படுத்திய செய்யுட்களும் தமிழும் அந்தப் புத்தகத்தில் ஒரு வசீகரமான புதிய வடிவம் பெற்று என்னைப் பேரானந்தத்தில் ஆழ்த்தின.

படிக்கப் படிக்கத் தெவிட்டாத ஒருவித லயம் நிறைந்த சொற்கள்! பொருளும் எளிதில் புரிவதாகவும், வருத்தமில்லாமல் சிந்திக்கத் தூண்டுவதாகவும், புதுமையைத் தோற்றுவிப்பதாகவும் இருந்தது.

ஒரு வரி விடாமல், ஒரு பக்கம் விடாமல் புத்தகம் முழுவதையும் ஒரே நாளில் படித்து முடித்தேன். பள்ளியில் வருடம் முழுவதும் படித்தும், சில செய்யுட்களைக் கூட அறிய முடியாத நிலையில், ஒரே நாளில் யார் உதவியுமின்றி ஒரு புத்தகம் முழுவதையும் படித்து மகிழ முடிந்ததை எண்ணியபோது அது ஒரு சாதனையாகவே தெரிந்தது. அந்தக் கவிதைகளில் ஏற்பட்ட ஒரு ஈடுபாடு, அவற்றைத் திரும்பத் திரும்பப் படிக்கவும், பாத்துப் படித்து அதில் ஒரு இன்பம் காணவும் செய்தது.

அதே புத்தகத்தில், உலகப் புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் யாத்த 'ருபையாத்' என்ற கவிதைத் தொகுப்பை யோகியார் தமிழில் ஆக்கியிருந்தார். அதில் ஒரு பாடல்!

மாதவிப் பூங்கொடி நீழலிலே - நல்ல
மணிக்கவிதை நூலொன்றும்
தீதறு செந்தேன் கரும்பும்
தினைமாவும் பக்கத்தில்
காதலி நீ பாட்டிசைத்து
கனிவோடு கூடுவையேல்
ஏதும் இனித் தேவையில்லை.
இதுவன்றோ பரமபதம்!

ஐம்பது வருடங்களுக்கு முன்பு பழமையில் ஊறிக்கிடந்த ஒரு சமுதாயத்தில், இளைஞர்களுக்கு இதைவிட வசீகரிக்கிற கருத்து இத்தனை எளிமையான தமிழில் கிடைக்குமா? இந்த 'ருபையாத்' தொகுதி முழுதும் ஒரே இரவில் யோகியாரால் ஆக்கப்பட்டது என்று பின் நாட்களில் அவருக்கு வேண்டியவர்கள் சொல்ல நான் அறிந்தேன்.

இயேசு காலத்தில் வாழ்ந்து, இயேசுவால் மன்னிக்கபெற்ற ஒரு பொதுமகள் 'மேரி மக்தலேனா' வின் வாழ்க்கையை ஒரு குறுங்காப்பியமாக யோகியார் யாத்திருந்தார். அதுவும் 'தமிழ்க்குமரி' புத்தகத்தில் வெளியாகியிருந்தது. அதில் ஒருபாடல் ;

நெறியறியாக் காளையரை
நெருக்கிப் பொன் பறிப்பதுவும்
குறியழியக் கல்வியிலே
கோப்பதுவும் அல்லாமல்
பிறிதரியோன். காமப்
பெருஞ்சூதும் வஞ்சனையும்.

மேரி மக்தலேனா இயேசுவிடம் தன் சரிதத்தைச் சொல்லும் இந்த வரிகளைப் படிக்கும்போது நம் ஊன் உருகும்; உயிர் உருகும்! ஒரு பெண்ணின் அவலத்தை, ஐம்பது வருடங்களுக்கு. முன் பாமரர்க்கும் ஏற்றபடி இப்படிப் பாடலில் ஏற்றியவர் யோகியார்.

யோகியாருக்கு ராஜம் என்று ஒரு குழந்தை இருந்தது. சிறு பிராயத்திலேயே இறைவன் திருவடியை அடைந்துவிட்டது. அந்தப் பிரிவை ஆற்றாமல் அவர்

இயற்றிய பாடல்களும் அந்தத் தொகுதியில் இடம் பெற்றிருந்தன. அதில் இரண்டு பாடல்கள்!

அப்பா அப்பா என்றும்
அம்மா அம்மா என்றும்
இப்பாரில் இனி நம்மை
யாரழைக்கப் போகின்றார்?
பட்டுடுத்திப் பொட்டிட்டு
பள்ளிக்கு உனை அனுப்ப
திட்டமிட்டதெல்லாம்
திசைமாறிப் போச்சுதடி!

இந்தப் பாடல்கள் கல்மனதையும் கரைக்காவா?

அந்தத் தொகுதியில் உள்ள அத்தனை பாடல்களுமே எனக்கு மனப்பாடம்! இப்பொழுது என் நினைவாற்றல் குறைந்திருப்பதால் இங்கே குறிப்பிட்டுள்ள பாடல்களிலும் மேலான பல பாடல்களை என்னால் நினைவுபடுத்தி இங்கே தரமுடியவில்லை.

'தமிழ்க்குமரி'யும் இப்பொழுது புத்தகச் சந்தையில் இல்லை. தமிழர்களின் பாக்கியம் தமிழக அரசு இப்பொழுது யோகியாரின் நூல்களைப் பொது உடமை ஆக்கியிருப்பதால் இனி அது அச்சில் வரும்.

பண்டிதர்களுக்கு மட்டுமே உரிய இலக்கியமாகத் திகழ்ந்த தமிழ்ச் செய்யுட்களை வள்ளலாரும், பாரதியாரும், கவிமணியும், பாவேந்தரும், நாமக்கல்லாரும் மக்கள் இலக்கியமாக முற்றும் மாற்றியிருந்தாலும் என் அளவில் அந்த மாற்றத்தை நான் முதலில் அறிய நேர்ந்தது யோகியாரின் கவிதைகளில்தான்.

எனவே தமிழ் இலக்கியத்திலும் கவிதைகளிலும் எனக்கு ஆர்வமும் ஈடுபாடும் ஏற்படக் காரணமாக இருந்தது யோகியாரின் கவிதைகள்தாம். அவைதாம் எனக்கு இலக்கிய ஞானஸ்நானம் அளித்தவை. அதனால் என் உள்ளத்தில் யோகியாருக்கு எப்போதும் ஓர் உயர்ந்த இடம் இருந்து வருகிறது. குருவுக்கு மேலான தெய்வம் உண்டா?

'தமிழ்க்குமரி'யைப் படித்த பிறகு யோகியாரைப் பற்றி அறியவும், அவரைக் காணவும் நான் பேரவா கொண்டிருந்தேன். வாய்ப்புகளும் அடுத்தே கிடைத்தன.

சேலம் மாவட்டத்தில் சங்ககிரி என்று ஒரு ஊர். அந்த சங்ககிரிதான் யோகியாரது சொந்த ஊர் என்று அறியலானேன்.

அங்கிருந்த பெரியவர்களிடம் யோகியாரைப் பற்றிக் கேட்டேன். பலருக்கு அவரைப்பற்றி தெரிந்திருக்கவில்லை. தெரிந்த ஒரு சிலரும், "அவரோடு பேசியதில்லை. பார்த்திருக்கிறோம். அவர் ஒரு மேன்மகன், கற்றவர். எங்கள் ஊரில் அவர் பிறந்தது எங்கள் பாக்கியம்" என்ற அளவில் ஒரு பயபக்தியுடன் சொன்னார்களே தவிர, அதற்குமேல் சொல்லத் தெரியவில்லை. ஒரு சைவப் பெரியார். அவரிடம் வினவினேன். அவர்தான், "யோகியார் பிள்ளைப் பிராயத்திலேயே கம்பராமாயணம் முழுவதையும் கற்றுக் கரை கண்டவர்; பாடல் புனைவது அவருக்கு சுவாசிப்பது போல இயல்பாக நிகழும் செயல். இங்கிருந்து அவர்கள் போய் நெடுங்காலம் ஆகிவிட்டது என்றாலும் சொந்த ஊர் என்பதால் எப்பொழுதாவது இங்கு வருவார்கள், இரண்டு நாட்கள் தங்குவார்கள். போவார்கள். மற்றபடி அவர் பெரும் படிப்பாளியாகவும் இங்குள்ளவர்கள் பாமரர்களாகவும் இருப்பதால் அவரோடு யாரும் உரையாடியதில்லை. இங்கு தங்கும் நாட்களிலும், மாலை நேரங்களில் அவரும், அவர் சகோதரரும் பட்டணத்து மக்களைப் போல் ஊரின் ஒரு பகுதியாக விளங்கும் குன்றின் பக்கம் உலவப் போவார்கள். விழித்திருக்கும் நேரமெல்லாம் ஜீவனத்துக்காக உழைக்கும் இந்த ஊர் மக்களுக்கு அது ஒரு புதுமையாகவும், அதே சமயம் அது மேலோர்கள் பழக்கமாகவும் தோன்றி, அவரிடத்தில் ஒரு பெரும் மதிப்பை ஏற்படுத்தியது. அவரைப் பார்ப்பதே எங்களுக்குப் போதுமானதாக இருந்தது. அதனால் நாங்கள் அவரிடம் பேச முயன்றதில்லை," என்று சொன்னார். சைவத் திருமுறைகளை தினமும் ஓதும் ஓதுபவரே பெரும் மரியாதையுடன் சொன்ன அந்த வார்த்தைகள் யோகியாரைப் பற்றிய மரியாதையை என்னிடம் மேலும் வளர்த்தது.

கோயமுத்தூரில் பெரிய கடைத்தெருவில் நகராட்சி மன்றத்திற்கு எதிரில் 'காசினாத் அண் கோ' என்ற பெயரில் ஒரு பெரிய மருந்தகம். இப்பொழுதும் இருந்து வருகிறது. 1945-49ல் நா. ஏகப்ப செட்டியார் என்ற பெருமகன் அதை நடத்திவந்தார்.

அந்தப் பெருமகன் ஏகப்பர் இல்லத்தில் யோகியாரும் அவர் சகோதரர் சந்துரு அவர்களும் சில நாட்கள் வந்து தங்கியிருந்தார்கள். அந்த நாட்களில் அவரை அருகிருந்து காணவும் அவரது அருங்குணங்களை அறியவும் எனக்கு நல் வாய்ப்பு கிட்டியது. அதை என் வாழ்வில் நான் அடைந்த பெரும் பேரென்றே சொல்ல வேண்டும்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே! நலமிக்க

நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே! -

என்ற மூதுரைப் பாடல் எவ்வளவு பொருள் பொதிந்தது என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

யோகியார் நல்ல உயரம். ரோஜா மலர் தோற்கும் நிறம். கணீரென்ற குரல்.

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை"

என்று பாரதி பாடினாரே! அது இவரைக் குறித்துத்தான் பாடப்பெற்றதோ என்று தோன்றும். 'நிமிர்ந்த ஞானச் செருக்கு' என்ற வரியை 'அடர்ந்த ஞானப் பொலிவு' என்று மாற்றிக் கொண்டால் கிடைக்கும் ஒரு ஓவியம்தான் யோகியார்!

சிறுமைக் குணம் அவர் இருக்கும் எல்லைக்குள்ளேயே வராது. பெருங்குணம்! பெரும் மனம், பெரும்புலமை!

யோகியார் தமிழில் மட்டும் புலமை வாய்க்கப் பெற்றவரல்ல. ஆங்கிலத்திலும் பெரும் புலமை வாய்ந்தவர்.

ஆங்கிலத்தில் "யாமா அண் யாமி" என்ற குறுங்காப்பியத்தை 400 செய்யுட்களில் இயற்றியிருந்தார். தட்டெழுத்துச் செய்திருந்த அதன் பிரதியை பின்நாட்களில் சென்னையில் அவர் வீட்டில் ஒரு முறை வாங்கிப் பார்த்தேன். அதி அற்புதமான காவியம்.

தமிழில் அவர் யாத்த குறுங்காப்பியங்களை விட இது சற்று விரிந்தது. புத்தகமாக வெளிவரவில்லை. அந்தக் கைப்பிரதி இருந்தால், இப்பொழுது இந்தியர்களின் ஆங்கிலப்படைப்புகளைத் தொடர்ந்து வெளியிடுவதில் ஆர்வம் காட்டும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பதிப்பகம் அதை வரவேற்று வெளியிடும். யோகியாருக்கு உலகப் புகழ் உண்டாகும்!

ஏகப்பர் இல்லத்தில் நாங்கள் முதல் நாள் மதிய உணவு உண்டபோது ஒரு நிகழ்ச்சி. ஒவ்வொருவரும் சாப்பிடச் சாப்பிட பரிசாரகர் இலையில் அன்னம் படைத்தார். அப்படி ஒரு முறை அவர் யோகியார் இலையில் அன்னம் படைக்க முற்பட்டபோது. பக்கத்தில் இருந்த அவர் சகோதரர் சந்துரு "போதும்" என்று சொல்லி பரிசாரகரைத் தடுத்தார். "அப்படியா?... சரி... போதும்" என்று சொல்லி யோகியாரும் இலையிலிருந்து எழுந்தார். எங்களுக்கு அது வியப்பாக இருந்தது. தான் உண்ணும் அளவுகூடவா ஒருவருக்குத் தெரியாது என்று எண்ணினோம். ஆனால் அதுப்பற்றி நாங்கள் யாரும் சந்துருவைக் கேட்கவில்லை. சதா சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் பெரியோர்களுக்குப் பல சமயங்களில் புற உலக நினைவு இருக்க வழியில்லை என்று நாங்களாக எண்ணிக் கொண்டோம்.

யோகியாரோடு அப்போதும் சரி பின்நாட்களிலும் சரி, அவர் யாரையும் தாழ்த்திப் பேசியோ தன்னை உயர்த்திப் பேசியோ. நான் அறியேன்.

'தன்னை வியத்தலும் இலமே!

பிறரைப் பழித்தலும் இலமே!'

என்ற பண்டையத் தமிழர்களின் கொள்கைக்கு யோகியாரின் வாழ்க்கை ஒரு சான்று!

அதே ஆண்டு என்று நினைக்கிறேன்.

அதே கோவையில் பிறிதொரு சமயம் தொழில் மேதையும், இந்தியப் பொருளாதாரத்தில் புதிய பார்வை உடைய சான்றோருமான ஜிடி.நாயுடு அவர்கள் பாரதி விழா நடத்தினார்கள். அந்த விழாவில் காலையில் யோகியார் தலைமையில் ஒரு கவியரங்கமும், மாலையில் பாவேந்தர் தலைமையில் அறிஞர்கள் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

கவியரங்கத்தில் கலந்துகொண்ட சில இளங்கவிஞர்கள் தங்கள் கவிதைகளை வெறும் சொற்றோரணங்களாக இட்டுக் கட்டியிருந்தார்கள். அவர்களது கவிதைகளில் இலக்கு இல்லை; பொருட்செறிவில்லை; உள்ளத்தைக் கவரும் சொல்லாட்சிகள் இல்லை; மக்களை மேம்படுத்தும் புதிய சிந்தனைகள், புதிய பார்வைகள் இல்லை; அவைகளுக்கான முயற்சியும் இல்லை, கவிஞர்கள் இப்படி உள்ளடக்கத்தில் கருத்துச் செலுத்தாமல், வெறும் வடிவத்தை மட்டும் அதுவும் அழகற்ற, புதுமையற்ற, உயிரற்ற வடிவத்தைப் படைக்க முயல்வதை யோகியார் வன்மையாகக் கண்டித்தார். பாரதியைப் பாடவந்த கவிஞர்கள் பாரதியின் வழியைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கம். அத்துடன் அவர் கண்டித்தது அந்த இளைஞர்களை அல்ல. அந்தக் காலகட்டத்தில் பாவேந்தர், கவிமணி, நாமக்கல் கவிஞர், யோகியார் ஆகியோரின் கவிதைகளால் ஈர்க்கப்பெற்று, கவிதை எழுதுவதற்கு எந்த வகையிலும் தகுதியில்லாத பலரும் கவிதை எழுத முற்பட்டு, கவிதைகளுக்குரிய கௌரவத்தைக் குலைத்தும், அத்தகைய இலக்கும், உயிரும் அற்ற கவிதைகள் பெருகுவதற்கு, வழியமைத்தும் வந்தனர். அந்தப் போக்கைக் கண்டித்துப் பேசிய பேச்சே அது. ஆனால் மனம் உடைந்த கவியரங்கக் கவிஞர்கள் யோகியாரை விமர்சிக்கத் துவங்கினர். தாழ்த்தியும் பேசினர். அப்படிப் பேசியதில் பாவேந்தர் ஆதரவு தங்களுக்கு இருக்கும் என்று தப்புக் கணக்கும் போட்டனர். ஆனால் மாலையில் பேசிய பாவேந்தரோ அந்தக் கவிஞர்களைச் சீறிப் பாய்ந்தார், "யோகியாரை விமர்சிக்க யாருக்குத் தகுதி இருக்கிறது. அவர் கூறியதில் என்ன பிழை? வார்த்தைகள் மட்டுமா கவிதைகள்? கவிதைகள் மனிதனை உயர்த்த வேண்டாமா? உள்ளங்களை உருக்க வேண்டாமா? புதுப்பாதை காட்ட வேண்டாமா? பண்டைய இலக்கியங்களைப் பழுதறக் கற்று, சமுதாயத் தேவைகளையும் நன்கு உணர்ந்து அதன்பிறகு நுழையவேண்டிய உலகம் கவிதை உலகம்! அதைத்தான் யோகியார் சொன்னார்! என் போன்றார் விரும்பிப் பயிலும் கவிதைகளை ஆக்கும் பெரும் புலவர் யோகியார்!" என்று யோகியாரை உச்சத்தில் கொண்டு போய் வைத்தார். அதைக் கண்ணாறக் கண்டு மகிழ்ந்தவன் நான்.

பின்வரும் நிகழ்ச்சியும் அதே 1949ல் தான் நடைபெற்றது. சென்னையில் நான் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தேன். யோகியாரும் அதே ஹோட்டலில் அது சமயம் தங்கியிருந்தார். "அம்பிகாபதி" "சகுந்தலை", "கவிகாளமேகம்", "மீரா", "மந்திரிகுமாரி" போன்ற திரைக் காவியங்களை இயக்கிய எல்லிஸ்

ஆர்டங்கன் என்கிற ஒரு பிரபல அமெரிக்க இயக்குனர், தன் திரைப்படங்களில் ஆதாரப் பிழைகள் நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவும், இந்திய மரபுகள், தமிழர்களின் பழக்க வழக்கங்கள், மதச் சடங்குகள் இவைகளைத் தாம் பிழையறப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் யோகியாரை சில படங்களில் தனக்கு ஆலோசகராகவும், சில படங்களில் திரைக்கதை ஆசிரியராகவும் அமர்த்திக் கொள்ளுவார் என்றும், அந்தப் பணிகளுக்காக ஹோட்டல்களில் அறை எடுத்துக் கொடுத்து அவரைத் தங்கச் செய்வாரென்றும், அதுபோன்ற ஒரு சந்தர்ப்பம்தான் அப்பொழுது அமைந்திருந்தது என்றும் அறிந்து கொண்டேன்.

நாங்கள் அங்கு தங்கியிருந்த ஒரு நாள் மாலை நான் அவர் அறைக்குப் போனபோது அவரும் டங்கனும் திரைக்கதையில் உச்சகட்டக் காட்சியைப் பற்றிக் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். என்னை அங்கேயே அமருமாறு சொல்லிவிட்டு அவர்கள் விவாதத்தைத் தொடர்ந்தார்கள். நானும் கதவைச் சாத்திவிட்டு அங்கு உட்கார்ந்தேன்.

உச்ச கட்டக் காட்சியில் வில்லனைக் கொல்வதா, மன்னித்து விடுவதா என்பது பற்றி விவாதம்

'கொல்வதுதான் என் முடிவு' என்று டங்கன் சொன்னார். 'எனக்கு அது உடன்பாடில்லை' என்று யோகியார் சொன்னார். வாதம் சூடேறியது.

'கொல்லுவேன்' என்று ஒருவரும் 'வேண்டாம்' என்று இன்னொருவரும் திரும்பத் திரும்ப காரசாரமாக விவாதம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அறைக்கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு நான் கதவைத் திறந்தேன். அங்கே ஒரு போலீஸ் படையே நின்று கொண்டிருந்தது. எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

போலீஸ் மேலதிகாரி உள்ளே வந்தார். சுற்றுமுற்றும் கண்ணோட்டம் விட்டபடி. "இங்கே யாரைக் கொல்ல சதி நடக்கிறது?" என்று கேட்டார்.

அப்பொழுது தான் எங்களுக்கு விஷயம் புரிந்தது. "கொல்லப்படுவது நிஜ மாந்தர்களல்ல; கதை மாந்தர்கள்" என்பதை அவர்களுக்கு யோகியார் புரியவைத்தார். போலீசாரும் சிரித்தபடி போனார்கள்.

1939-ல் 'அதிர்ஷ்டம்' என்று ஒரு திரைப்படம் வந்தது. அது யோகியார் எழுதி இயக்கிய படம். சமூகப்படம். தமிழில் திரைப்படங்கள் தோன்றத் துவங்கிய எட்டாம் ஆண்டு அது. பெரும்பாலும் புராணக்கதைகளும் பக்திக்கதைகளும் கிராமிய நாடோடிக் கதைகளுமே படங்களாக வெளிவந்து கொண்டிருந்த காலகட்டம் அது. அந்த சமயத்தில் ஒரு சமூகப்படம் வெளிவந்ததே ஒரு புரட்சி. அந்தப் புரட்சியைச் செய்ததோடு யோகியார் நின்றுவிடவில்லை, திரைப்பாடல்களிலும் புரட்சி செய்தார். ஹிந்தி மெட்டுகளுக்குத்தான் அப்பொழுது பெரும்பாலான தமிழ் சினிமாப் பாடல்கள் எழுதப் பெற்றன. இசையில் கவர்ச்சி

இருக்குமே தவிர பாடல்கள் உள்ளத்தைத் தொடா, சொற்களும் பிளவுபட்டு இருக்கும். சொற்களின் தொடர்பும் முன்பின்னாக மாறியிருக்கும். மொத்தத்தில் சினிமாப் பாடல்கள் கதையை மேம்படுத்துவதாகவோ, உள்ளத்தில் கலப்பதுவாகவோ இரா. அந்த நேரத்தில் 'அதிர்ஷ்டம்' என்ற அந்தப் படத்தில் ஒரு ஏழைப் பெண் பாடுவதாக யோகியார் ஒரு பாடல் எழுதியிருந்தார். அது

"ஐயா! சிறுபெண், ஏழை என்பால்
மனம் இரங்காதா?"

என்று வரும் பாடல். இது ஹிந்திமெட்டுக்கு எழுதியதுதான். இருந்தாலும் தமிழ் இசையாகவே இருக்கிறதல்லவா!

1951 – 52இல் சென்னை அழகியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற T.சூர்ய குமாரி என்ற பெண்மணியைத்தான் அந்தப்படத்தில் யோகியார் ஏழைச்சிறுமியாக நடிக்கவைத்திருந்தார். அந்த வகையில் திரையுலகில் ஒரு சரியான புதுமுகத்தை அறிமுகம் செய்த பெருமையும் யோகியாருக்கு உண்டு. சூர்யகுமாரி அவர்கள் சிறந்த பாடகியும் கூட. அந்தப் பாடலையும் அவரேதான் பாடியிருந்தார்.

பெருங்கவித்திறனும், பெரும்புலமையும் உடைய ஒரு பெரியவர் எப்படி சினிமாத் துறையில் நுழைந்தார். பயிற்சி எதுவுமின்றி எப்படி அவரால் ஒரு படத்தை இயக்க முடிந்தது என்று நான் வியந்தபோது, "அதுதான் யோகியாரின் சிறப்பு. அவர் ஓதாது உணரும் அறிஞர். கண்டதையும் கற்பார். கண்டதும் கற்பார். எந்தக் கலையும் அவருக்கு அயலானதல்ல" என்றார்கள்.

அதுமட்டுமல்ல, சினிமா ஒரு கலை என்பதையும் மக்களிடம் அது உண்டாக்கப்போகும் தாக்கத்தையும் அவர் அன்றே அறிந்திருக்கிறார். அதை மதித்திருக்கிறார்: அவர் தொலைநோக்கை அது காட்டுகிறது.

தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும்புலமை வாய்ந்த யோகியார், பெரும் இலக்கியங்கள் பல படைக்கும் திறன் வாய்ந்த யோகியார் தமிழில் மூன்று சிறு காப்பியங்களும் ஆங்கிலத்தில் ஒரு காப்பியத்தோடும் தம் இலக்கியப்பணியை நிறுத்திக் கொண்டது இன்றும் எனக்கு ஒரு புதிராகவே இருக்கிறது.

அவர் கவிஞராக மட்டும் இருந்திருந்தால் பல நூல்கள் யாத்திருப்பார். ஆனால் அவரோ ஒரு சித்தர். மகா புருஷர். தன் உள்ளே வாழ்ந்தவர். யோகி!

ஹீரா
இந்தியா புக் ஹவுஸ் தலைவர் கூறுகிறார்

நாங்கள் ஃபேர்ள் பப்ளிஷிங் என்று ஒரு கம்பனி வைத்திருந்தோம். அமெரிக்காவில் பதிப்பிக்கப்பட்டு அதிகமாக விற்பனையான சில புத்தகங்களைத் தமிழிலும், மலையாளத்திலும் வெளியிட உரிமை பெற்றிருந்தோம். எங்களுக்கு தமிழும் ஆங்கிலமும் சரளமாகத் தெரிந்த ஒருவர் தேவைப்பட்டார். எனது

அலுவலகத்தில் பணிபுரிந்த திரு.ராமநாதன் மூலமாக மகாகவி யோகியார் பற்றி கேள்விப்பட்டு அவரை அழைத்து வரச் சொன்னேன். அவரும் ஒரு நாள் என்னைக் காணவந்தார். உயர்ந்த உருவம், தங்கமான நிறம், நல்ல அறிஞர் என்பது பார்த்த மாத்திரத்தில் எனக்குத் தெரிந்தது. 1958-59-ஆம் வருடம் எடிட்டர்-இன்-சீப் என்ற பதவியில் அவரை அமர்த்தி எங்களுக்குத் தேவையான புத்தகங்களின் மொழிமாற்றங்களையும் செய்து கொடுக்கச் சொன்னோம்.

உட்கார்ந்தால் மணிக்கணக்கில் பல பக்கங்களை வேகமாக எழுதும் திறன் பெற்றவர் அவர் என்று சில நாட்களிலேயே எனக்குத் தெரிந்தது. அன்று அவர் எழுதியதுதான் சித்ர அரிச்சுவடி, சித்ர அகராதி போன்ற பல புத்தகங்கள். தனியாக உட்கார்ந்து எழுதுவார். மற்றவர்களது உதவியே அவருக்கு தேவைப்படாது. இந்தப் புத்தகங்களில் இருந்து பார்த்து குறிப்பெடுப்பது; அந்தப் புத்தகத்தில் இருந்து இந்த விஷயத்தை எழுதுவது என்று எதுவுமே இல்லாமல் தானாகவே, தனது திறமையால், மொழிபெயர்க்கும் திறனை மட்டும் பயன்படுத்தி பல புத்தகங்களை, எல்லோரும் பாராட்டும் வண்ணம் எழுதியுள்ளார் யோகியார். அவரது எழுத்துக்கள் எல்லாம் மணிமணியாக கண்ணில் ஒற்றிக் கொள்வது போல இருக்கும். கம்பாசிடருக்கு எந்த கஷ்டமும் இல்லாமல் தெளிவாக இருக்கும். விஷயம் அதிகம் தெரிந்தவர் யோகியார். ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் பாண்டித்யம் பெற்றவர் யோகியார் என்று கூறினால் அது தவறில்லை. காரணம் இரண்டிலும் இவர் கதை, கட்டுரை, கவிதை எழுதியுள்ளார். இவருக்கு சமஸ்கிருதமும் ஓரளவிற்கு நன்றாகத் தெரியும்.

புரோபசர் பாஸ்கரன், மணி, கிருத்திவாஸ் திருமதி.சொன்டி ஆகியோருடன் நாங்கள் பல மணிநேரம் தமிழைப் பற்றியும், மற்ற இலக்கியங்கள் பற்றியும் பேசுவோம். தமிழ், இலக்கியம், கவிதை என்று பேச ஆரம்பித்தால் யோகியார் கருத்துக்கள் என்றுமே மிகவும் ருசிகரமாகவும், புதுமையாகவும், ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். சுத்தமாகத்தான் பேசுவார். அதே சமயம் தான் சொல்வது தான் சரி என்று நம்மை என்றுமே ஒப்புக்கொள்ள வைக்க வேண்டும் என்பதற்காக பேசமாட்டார். ஆனால் அவர் எடுத்து வைக்கும் கருத்துக்கள் சரியாக, நாம் ஒப்புக் கொள்ளும் வண்ணம், ஏற்புடையனவாக இருக்கும்.

ஒருமுறை நானும் யோகியாரும் நடிகர் சுப்பையாவின் கிராம வீட்டிற்கு சென்றிருந்தோம். சுப்பையாவிற்கு யோகியார் தன் வீட்டிற்கு வந்ததில் பெரும் மகிழ்ச்சி. எங்களை வரவேற்றதோடு அன்று அவர் வீட்டில் விருந்துண்ணவும் செய்தார். அங்கும் நாங்கள் பேசியது (அல்லது யோகியார் பேச நாங்கள் கேட்டது) தமிழ் மற்றும் உலக இலக்கியம் தான்.

சிறந்த, நல்ல மனிதர். உரக்கப் பேசுவார், யாருக்கும் துன்பம் நினைக்காதவர். கோபமே வராதவர். ஆனால் அப்படிப்பட்டவருக்கும் எனது அலுவலகத்தில் ஒரு

முறை சிறு பிரச்னை ஏற்பட்டது. எங்களது மலையாள மொழிபெயர்ப்பாளர் கோபி. இவரைப் பற்றி தவறாக புரிந்து கொண்டு ஏதேதோ சொல்ல, யோகியார் விவரமாக எனக்கு ஒரு சிறு குறிப்பு வரைந்து நடந்தவற்றை தெரிவிக்க, நான் கோபியைக் கூப்பிட்டு யோகியாரைப் பற்றி கூறி அவர் எவ்வளவு பெரியவர் என்று தெரிவித்து விஷயத்தை சுமுகமாக முடித்தேன்.

என்னை அவருக்கு மிகவும் பிடிக்கும். ஒருமுறை பம்பாய் மாதுங்காவில் உள்ள தமிழ்ச் சங்கம் யோகியாரை அழைத்து பாராட்டி மகிழ்ந்தது. ஆனால் யோகியாரைப் பொருத்தவரை தனக்கு பதக்கம், பாராட்டு, மரியாதை கிடைப்பதைப் பற்றி எல்லாம் கொஞ்சம் கூட கவலைப்படாதவர். அதை பெரிதாக எண்ணாதவர்.

நான், என்னுடன் காரைச்சித்தர் என்று அழைக்கப்படும் சுவாமிஜியும், நண்பர் மணியும் சேர்ந்து மது அருந்துவோம். ஆனால் எங்களுடன் அமர்ந்து மணிக்கணக்காக பேசிக்கொண்டிருப்பாரே தவிர யோகியார் மது அருந்தமாட்டார். காரைச்சித்தர் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். **'Golden Lay'** என்ற ஒரு ஆங்கிலப் புத்தகத்தை எழுதி எடிட் செய்தது யோகியார் தான். தமிழில் அதுவே 'கனகவைப்பு' என்றும் வெளியானது.

எங்களது கம்பனியில் புத்தகங்கள் வெளியிடுவதை நாங்கள் நிறுத்த முடிவு செய்யவும், யோகியார் உடல்நிலை சரியாக இல்லாமல் போகவும், ஏதோ காக்காய் உட்கார பனம்பழம் விழுந்த கதையாக முடிந்தது. அதனால் யோகியார் மிகுந்த மனவருத்தத்துடன் எங்கள் அலுவலகத்திற்கு வருவதை நிறுத்திக் கொண்டார்.

என்னைப் பொருத்தவரை முதலும் கடைசியுமான "எடிட்டர் இன் சீப்" யோகியார்தான். அவருடன் யாரையும் ஒப்பிட முடியாது. அவருக்கு நிகர் அவர்தான்.

எஸ். நல்லபெருமாள்

(கம்பனுக்கு எப்படி ஒரு சடையப்பர் இருந்தாரோ அதுபோல் யோகியாரின் கடைசி காலத்தில் இவர். தனது அனுபவங்களை இங்கு பகிர்ந்து கொள்கிறார்)

யோகியாரின் கவிதைகள் அவரது ஆன்மீகத்தின் மலர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. அவை அவரது இதயத்தின் அடித்தளத்தில் இருந்து பீறிட்டு வரும் நீரூற்று. அவரது வாழ்வு முழுதும் தேவியின் அருளை நாடி அவளுக்கு அர்ப்பணித்த கவிதை நைவேத்தியமாகும். அவர் கவித்திறனும், யோகியின் குணமும் கொண்டு பூதேவியின் மீது அசையாத நம்பிக்கை கொண்டிருந்தவர்.

தமிழகத்தில் நிறைய பண்டிதர்களும், எழுத்தாளர்களும் யோகியாரை இம்மாநிலத்தின் மிகச் சிறந்த தமிழ் கவிஞரில் ஒருவராகக் கருதுகின்றனர். ஆனால் அவர் அடைந்திருக்க வேண்டிய பிரபலத்தை அவர் அடையவில்லை என்றும் நினைக்கின்றனர். இதற்கு காரணம் அவர் விளம்பரத்தை எப்போதும்

நாடவில்லை. மாறாக விளம்பரத்தை, பிரபலத்தை அவர் ஒதுக்கிவைத்தார். அவருடைய படைப்பு ஆர்வம்தான் அவரை எழுத வைத்தது. அவர் எழுதியது தன் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தவே. கவிதை, அவருக்கு இயற்கையாக அமைந்த ஆழமான ஈடுபாடும் தன்னை அறியும் தேடுதலும் ஆகும்.

அவருடைய படைப்புகளை வெளியிடுவதில் அவர் நாட்டம் காட்டியதில்லை. அவைகளை, பாதுகாக்கவும் அவர் நினைத்ததில்லை. அவர் என்னிடம் ஒரு முறை தான் சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதிய நீண்ட கவிதையைத் தனக்குத் திருப்தி இல்லாததால் கிழித்து எறிந்து விட்டதாகக் கூறினார்.

அகல்யையின் கதை வால்மீகி, கம்பன், வி.பி.சுப்ரமண்ய முதலியாரால் சித்தரிக்கப் பட்டிருக்கிறது. யோகியாரும் அந்தப் பொருளைக் கையாண்டுள்ளார். அவரது அகல்யை படைப்பு அழியாத் தன்மை பெற்றது. அதை அறிந்தவர்கள் அதன் சிந்தனை வளத்தையும் வார்த்தை அழகையும் பருகி அதை திரும்பத் திரும்பப் பாடுவதில் சோர்வு அடைவதேயில்லை. அகல்யை யோகியாரின் படைப்பால் மறுபிறவி எடுக்கிறாள். அந்தக் கவிதையின் மணம், ஒளி, படிப்போரை அந்தப் படைப்பு, அவரது சொல் சுத்தம், மனதை சுகப்படுத்தும் சொல்லாழும் ஆகியன தெளிவாக வெளிப்படுகின்றன.

அவருடைய "முதல் தேவி" எனும் படைப்பு அவருடைய கனவுகளையும் அவரது உள்ளத்தில் பதிந்த உணர்வு அனுபவங்களையும் மலரைப்போல் விரியச்செய்கின்றன.

பெர்ஷிய மொழியில் இருந்த ஓமர்கய்யாம் கவிதைகளை பிட்ஜெரால்டின் ஆங்கில மொழிபெயர்ப்பு அசலின் மேன்மையை எப்படி வெளிப்படுத்துகிறதோ அவ்வாறே யோகியாரின் தமிழ் மொழி பெயர்ப்பு அசலின் மெருகை அப்படியே மிளிரச் செய்கிறது.

ஆங்கிலத்தில் அறிஞர், தமிழில் எழுத்தாளர், சில சமயத்தில் பத்திரிகை ஆசிரியர், எப்போதும் கவிஞர். ஆக யோகியார் பல திறன்களை பெற்றவர். அவர் அருமையான தமிழ்க் கவிதைகளை எழுதியவர் என்பதைத் தவிர அவரது சாதனைகளை பலரும் அறிந்திலர். அவர் நிறைய தொடர் கட்டுரைகளையும், நிறைய சிறுகதைகளையும், நாடகங்களையும் எழுதியுள்ளார். அவற்றில் "காமினி" என்ற கவிதை நாடகம், "மரண தாண்டவம்" என்ற சிறுகதைத் தொகுப்பு, "சுதந்திரச் சுடர்" என்ற இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி எழுதிய நீண்ட கவிதை, "கதை கேளடா தமிழா" என்ற நீண்ட கிராமியப் பாடல், குற்றாலக் குறவஞ்சியைப் போன்ற "கொங்கர் குறவஞ்சி" என்ற நாட்டிய நாடகம், "சங்கம் வளர்த்த தமிழ்" என்ற இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் நினைவு கூரத்தக்க அரிய படைப்புகளாகும். .

இலக்கியத்தின் எந்த ஒரு பிரிவையும் அவர் எழுத்து அலங்கரிக்காமல் விடவில்லை. கவிதைகள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், மற்றவரின்

வாழ்க்கை வரலாறுகள், விமர்சனம், விஞ்ஞானம், யோகம், மனோதத்துவம் ஆகிய எல்லாமும் அவர் பேனாவிலிருந்து அருவிபோல் கொட்டி தமிழ் நெஞ்சங்களை மகிழ்வித்துள்ளார்.

யோகியார் ஆங்கிலக் கவிதைகள் எழுதுவதிலும் வல்லவர். அவர் ஆங்கிலத்தை நன்கு அறிந்து, அம்மொழியில் புலமை பெற்று, ஆங்கிலத்தில் பல கவிதைகள் எழுதியுள்ளார்.

அவர் கம்பராமயாணத்தின் ஒரு பகுதியை ஆங்கிலத்தில் டிசம்பர் – மாதம் 1961 வருடம் மொழிபெயர்த்தார். “சீதா கல்யாணம்” என்ற பெயரால் கம்பன் கழகத்தால் பிரசுரிக்கப்பட்ட அந்த நூல் அந்நாளில் சென்னையில் இருந்த அமெரிக்க தூதரக அதிகாரியாக இருந்த டாக்டர். தாமஸ் ய. சைமன்ஸ் தலைமையில் நடைபெற்ற விழாவில் வெளியிடப்பட்டது. டாக்டர் சைமன்ஸ் தன் உரையில் யோகியாரைப்பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

“யோகியார் ஆங்கிலத்தில் கவிதை எழுதும் ஆற்றல் பெற்றவர். நான் அவருடைய ராமாயண மொழிபெயர்ப்பைப் படித்தபோது ஒரு அசல் ஆங்கிலக் கவிதையைப் படிப்பது போல் உணர்ந்தேன். புகழ்பெற்ற இந்திய அரசியல் வல்லுநர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் கம்பராமாயணத்தின் சில பகுதிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ஆனால் அவர் அரசியலில் மிகவும் நெருக்கமாக ஈடுபட்டிருக்கிறார். யோகியார் கம்பராமாயணம் முழுவதையும் கவிதை நடையில் மொழிபெயர்க்க வேண்டும் என்று விரும்புகிறேன்”.

யோகியார் தமிழ் கவிஞராக புகழ் என்னும் கோவிலில் ஓர மதிப்பிற்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறார். நான் அவரை இந்தியாவின் மிகச்சிறந்த நவீனக் கவிகளில் ஒருவராக மதிக்கிறேன்.

நான் யோகியாருடன் மூன்று வருடங்களுக்கு மேல் மிக நெருக்கமாக பழகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். இந்திய கலாச்சாரத்தின் மலர்ந்த மிக நேர்த்தியான மலர்களில் யோகியாரும் ஒருவர். அவருடைய குழந்தையின் வெகுளித்தனம், ஆழ்ந்த புலமை, தன்னடக்கம், பரந்த சிந்தனை, மெருகேறிய செய்கைகள், அவருடன் பழகியவர்களை அவரது வாழ்வு முழுதும் நண்பர்களாகவும், போற்றிப் புகழ்பவர்களாகவும் ஆக்கிவிட்டன. அவருடன் இலக்கியத்தையும், கவிதைகளையும் விவாதிப்பது ஓர் ஆனந்த அனுபவம். அவருடைய எண்ணங்கள் ஆக்க பூர்வமானவை சுதந்திரமான எண்ண வடிவையும் இலக்கிய நயத்தையும், அறிவூட்டும் தன்மையையும் பெற்றிருந்தன. அவருடன் நெருங்கி இருந்தால் அவர் அசாதாரண அறிவாளி என்பது உடன் இருப்பவருக்குத் தெரியும்.

டாக்டர் எஸ்.கே.நாயர்,

(தமிழ், ஆங்கிலம் மற்றும் மலையாளம் தெரிந்தவர். இவரும் யோகியாருடன் பழகியுள்ளார். அவரது கருத்துக்கள்)

எல்லாக் கோணங்களிலிருந்தும் அவர் ஓர் முரண்பட்டவராகவே தோன்றுகிறார். அவர் ஓர் மேதாவி. ஆனால் எப்போதும் ஒரு குறுகிய வட்டத்தில் உழன்று வேண்டாத கொள்களை வலியுறுத்தியதில்லை. மதங்களைப் பொறுத்தவரை அவர் ஓர் வல்லமைக்கும் மேம்பட்டவர். ஆனால் அவரிடம் மத வெறி என்பது அறவும் கிடையாது. அவர் உண்மையாகவே ஓர் யோகி. எளிய வாழ்வை விரும்பி மேற்கொண்டவர். அவர் என்றும் சுயமை வேடம் பூண்டதில்லை. அவர் தென்னிந்தியாவின் மிகச்சிறந்த கவிஞர்களில் ஒருவர். ஆனால் ஒருபோதும் ஆணவமோ, புரியாத போக்கோ, மாறுபட்ட நடத்தையோ கொண்டதில்லை. சுருங்கச் சொன்னால் அவர் கவிஞர்களில், புலவர்களில், துறவிகளில் மனிதர்களில் ஓர் அரிய மனிதர்.

யோகியாரின் 'மேரி மகதலீனா', என்னுடைய கவனத்தைக் கவர்ந்தது. அவர் என்னிடம் அந்தக் கவிதையை எழுதிய சூழ்நிலையைப் பற்றி சொன்னார். அவர் சிறைவாசத்தின் போது ஒரு மலையாள நண்பர் கவி வள்ளத்தோலின் 'மக்தலேனா-மரியம்' என்ற படைப்பைப்பற்றி சொல்லியிருக்கிறார். அதுவே யோகியாருக்கு 'மக்தலீனா'வைப் பற்றிய எழுதும் உணர்வையும், உற்சாகத்தையும் கொடுத்தது. யோகியாரின் படைப்புக்கும், வள்ளத்தோலின் கவிதைக்கும் எந்தவித ஒற்றுமையும் இல்லை என்பது யோகியாரின் தனித்தன்மையை வெளிப்படுத்துகிறது.

கே.எஸ். ராமசுவாமி

(மகாகவியின் இனிய நண்பர் இவர். தனது எண்ணங்களை இங்கு தெரிவிக்கிறார்)

எங்களுடைய முதல் சந்திப்பு மிகச் சாதாரணமாக எந்தவித சம்பிரதாயங்களும் இன்றி நடந்தது. யோகியார் மிகக் கடுமையான நோயிலிருந்து அப்போதுதான் நலம் அடைந்து கொண்டிருந்தார். ஆனால் அவர் நண்பர்கள் மத்தியில் தன்னை மறந்து பெரும் உற்சாகத்துடன் புனிதமான ஆன்மிக ஒற்றுமை எப்படி ஓர் ஹிந்து வாழ்க்கை முறையில் இழையோடிக் கொண்டிருந்தது என்பது பற்றி மிக அரிய கருத்துக்ளை பெரும் மகிழ்வுடன் எல்லோருடனும் பகிர்ந்து கொண்டிருந்தார். அவருள் வியாபித்திருந்த கவிதைத் தீ கொழுந்து விட்டெறிந்து கொண்டிருந்ததை உணர்ந்த நான், அவருடைய மனித சரீரம் முழுவதும் ஆன்மாதான் என்று நினைத்தேன். யோகியார் நம் காலத்து எழுத்தாளர்களுடன் எப்படி மாறுபட முடிந்தது எனில், அவருடைய உள்ளத்தில் இருந்த கவிதைத் தீயும், பக்தி பரவசமும் அவருடைய எழுத்துக்கள் எல்லாவற்றிலும் வியாபித்திருந்தது. அவர் ஆங்கில கவி கீட்ஸ், இந்தியக் கவி காளிதாசரைப்போல் வாழ்க்கை நடத்துவதற்காக எழுதாமல் தன் உள்ளத்தில் அடித்தளத்தில் இருந்த வேட்கையை, தன்னுடைய தெய்வீக எண்ணங்களை கவிதை கொண்டு வெளிப்படுத்தினார்.

யோகியார் ஓர் அற்புத எழுத்தாளர். அவர் எதைத் தொட்டாலும் அது அழகைப் பெற்றது. சத்தியமும், அழகும் உருவான அவர், தன்னுடைய எழுத்துக்களில் மற்றவர்கள்பால் கொண்டிருந்த நேசத்தையும் உள்ளன்புடன் செயல்படும் அவரது அருங்குணத்தையும் தெளிவாக தெரிந்துகொள்ள முடிந்தது.

வி.பி.வி ராஜன்

(சென்னையில் வெளிவந்து கொண்டிருந்த 'மெயில்' நாளிதழின் ஆசிரியர். தான் சந்தித்த மிகச்சிறந்த கவிஞர்களில் யோகியார் ஒருவர் என்று கூறுகிறார்)

யோகியார் மற்றவர் எழுதிய கவிதைகளையும், தன்னுடைய படைப்புகளையும் மிகுந்த உற்சாகத்துடனும், அக்கவிதைகளின் பொருள் புரியும் வகையிலும் பாடுவதுண்டு. அத்தகைய ஓர் மாலை வேளையில்தான் அவரை நான் இருபது வயது கூட எட்டாத வாலிபனாக சந்தித்தேன். அவர் தனக்குப் பிடித்த கவிதைகளைப் பாடிய அருமையை உணர்ந்து அக மகிழ்ந்து போனேன். அவருடைய ஒவ்வோர் கவிதைகளிலும் ஓர் பாடம் அமைந்திருந்தது.

அவருக்கு முதற் பிரியம் கவிதை என்றாலும் தேசபக்தி அவரை 1930களில் மகாத்மா காந்தியின் அறைகூவல் ஈர்த்தது. அவர் எல்லா வசதிகளுடனும் சுகமாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் தன்னிச்சையாக அவர் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டார்.

ஆனால் ஈரோடு சுயமரியாதை இயக்கத்தின் **(Self-respect Movement)** தலைவர் ஈ.வி. ராமசுவாமி நாயக்கரின் சொந்த ஊர் ஆனதால், பெரும்பாலும் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டோர் அவரை விமர்சிப்பதிலேயே மிகுந்த நேரம் செலவிட்டனர். ஏனெனில் ராமசுவாமி நாயக்கர் பல வருடங்கள் ராஜாஜியுடன் சுதந்திரப் போராட்டத்தில் முழு மனதுடன் ஈடுபட்டிருந்ததுதான். ஆனால் யோகியார் நாயக்கரின் உரைகளை நன்கு ஆராய்ந்து அவற்றில் உள்ள குறைகளை மட்டுமே சுட்டிக்காட்டுவது வழக்கம். ஒரு வகையில் யோகியாரின் விமர்சனம் நாயக்கர் தனக்கு மிகவும் பிடித்த சில கொள்கைகளை வகுக்க உதவியது என்று கூடச் சொல்லலாம். இருவருமே, மனிதர்கள் எல்லோரும் ஒருவரையொருவர் மரியாதையுடன் நடத்த வேண்டும் என்பதில் ஒத்த கருத்து கொண்டிருந்தனர்.

யோகியார் மகாத்மாகாந்தியின் கருத்துக்களையும், வழிமுறைகளையும், அவற்றைத் தடுக்க ஆங்கிலேய அரசு எடுத்த நடவடிக்கைகளையும் எளிதாக எடுத்துரைத்தார். அவர் அரசியல், சட்டக் கருத்துகளை பாமரனும் புரியும்படி கவிஞனுக்கே உரித்தான பாணியில் விளக்கிக் கூறுவார்.

அவருக்கு எந்தப் பொருளும், எந்த எழுத்தாளரும் புதிதல்ல. அவர் எந்த புத்தகத்தையும் ஒதுக்கியதில்லை. நான் அவரை ஒரு தமிழ்க் கவிஞனாகவே பார்த்து வந்தேன். அவரது மறைவுக்குப் பின்னர்தான் நான் அவருடைய பிரசுரிக்கப் படாத ஆங்கிலப் படைப்புகளை படிக்கும் வாய்ப்பு கிட்டியது.

அவருடைய எளிமையும் அவரது தொலைதூர நோக்கும் எந்த பிரசுரகர்த்தரும் அவருடைய ஆங்கிலப் படைப்புகளை ஒதுக்க முடியா வண்ணம் செய்திருந்தன.

நன்கு விவரமறிந்த அவர், சுலபமாக உரையாடுவதில் வல்லவர். எந்தப் பொருள்பற்றியும் அவர் ஆணித்தரமாகவும், தெளிவாகவும் பேசும் வல்லமை பெற்றவர். 1940களில் அவர் அணுவின் ரகசியங்கள் 'திருமந்திரத்தில் அடங்கியுள்ளன என்பது பற்றிப் பேசும்போது செலவிட்ட நான்கு மணி நேரம் என் நினைவில் பலகாலம் நிலைத்து நின்றது.

அவர் இந்த வகையைச் சேர்ந்தவர் என்பதை எளிதாகக் கூற முடியாது. அவர் பழமைவாதியும் அல்ல; புதிதோடு ஒத்துப் போனவரும் அல்ல. என்னுடைய கருத்தில் கொஞ்சம் பழமையையும், கொஞ்சம் புதுமையையும் கலந்து வாழ்ந்தவர் யோகியார். அவர் கடந்த காலத்தின் சிறப்புகளையும், நிகழ்காலத்தின் முன்னேற்றத்தையும் இணைக்கும் பாலமாக அமைந்தார் என்று கூறினால் அது மிகை அல்ல.

கவியரசு வைரமுத்து

(மகாகவி யோகியார் மீது அளவற்ற அன்பு கொண்டவர் இவர். நேரில் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் இன்றும் வைரமுத்து அவர்களுக்கு உண்டு. யோகியாரின் நினைவுக் கூட்டம் ஒன்றில் பாடிய கவிதையில் இருந்து சிலவரிகளை இங்கு தருகிறோம்) படியுங்கள்.

யோகியாரின் எழுத்து
சுத்தக் கலையெழுத்து

யாப்புத் தோப்புக்குள்
பறித்துக்கொடுத்த
பக்குவக் கனிகள்

சந்தக் கம்பிகளில்
நடந்த
சர்க்கஸ் வார்த்தைகள்!

சாக்கடை அரசியலைச்
சற்றும் பாடாமல்
பூக்கடைக் கவிதைகள்
பொழிந்தவர் யோகியார்.

யோகியார்
அவர் ஒரு

ஈர வயல்!
சாரல் மழை
கோடை நிழல்
பாடு கடல்

உச்சி மலர்
இச்சித் தளிர்
வேய்ந்த குடில்
தோய்ந்த தமிர்

அவர் ஒரு
மறந்துபோன முத்து!
காலம் அவரைக் கண்டெடுக்கும்
தன்
நெற்றிச் சுட்டியில்
நிச்சயம் வைக்கும்.

பி.ஜி.சுந்தரர்ராஜன்

(சிட்டி என்ற புனைப் பெயரில் எழுதும் இவர். அகில இந்திய வானொலியில் பணியாற்றியவர். யோகியாரின் நண்பர். தனது கருத்துக்களை இங்கு கூறுகிறார்)

படைத்தலைவர்களும், போரில் வெற்றி அடைபவர்களும் சிறிது புழுதியை விட்டுச் செல்கிறார்கள். அரசர்கள் தங்கள் ஆட்சியின் கறை படிந்த நினைவுகளை விட்டுச் செல்கிறார்கள். சீசரைப் போன்ற வீரர்கள் போர்வாள்கள் துரு ஏறிப் போகின்றன. ஆனால் கவிஞன் என்றும் வாழ்கிறான். இந்த புகழை ஆங்கிலக்கவி டென்னிசனின் நினைவிற்காக வில்லியம் வாட்சன் என்பவரால் எழுதப்பட்டது.

வாட்சன் மேலும் சொன்னார்; சொர்க்கத்தின் வாயிலில் அமரகவிகளான ஷேக்ஸ்பியர், மில்டன், டோன்டே ஆகியோர் டென்னிசனை வரவேற்கக் காத்திருந்தனராம். இப்புகழுரை ச.து.சு. யோகியாருக்கும் சாலப் பொருந்தும் என்பது என் கருத்து.

வாட்சன் கூறுவதுபோல் யோகியார் பிற்காலத்திற்கு கருத்துச் செறிவு நிறைந்த, சொல்லுவதற்கு அரிய, எண்ணிலா அர்த்தங்களைக் கொண்ட எழுத்துக்களால் ஓர் அரிய செல்வத்தை விட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல அவர் மேற்கொண்ட வழிகளில் கவிதைதான் பிரதானமாகும். ஆகவே அமரரானபின் அவர் நம்முடன் கவிஞராகவே வாழ்கிறார். அவர் தேசீய உணர்வும் ஓர் பொது மறுமலர்ச்சியை உண்டாக்கிய சகாப்தத்தின் தோன்றலாய் இருப்பினும் அவருடைய எழுத்துக்கள் எந்த கட்டுக்கும்

அடங்கியதில்லை. அவர் அழிவில்லாப் பொருள்களைப் பற்றி, வாழும் மொழியில், முடிவில்லா ராகத்தில் கவிதை பாடினார்.

மகாகவி யோகியார் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டவர். ஒருமுறை ஒரு கிராமத்துக்கு நாங்கள் இருவரும் சென்றிருந்தோம் ஒரு குடிசையில் நுழைந்தவுடன் எங்களை வரவேற்று கஞ்சிகுடிக்க ஒரு மூதாட்டி வேண்டினாள். யோகியார் எந்தவிதமான தயக்கமும் காட்டாமல் வாங்கிக் குடித்தது அனைவரையும் மகிழவைத்தது.

அவருக்கு பாரதியாரின் பராம்பரியத்தை அடைந்த நல்வாய்ப்பு இருந்தது. ஆனால் அவரது கவிதைகளில், சொற்களில் இருந்த எளிமையைத் தவிர அவர் பாரதியாரின் படைப்புகளால் உந்தப்பட்டார் என்று செல்லமுடியாது. இலக்கிய மறுமலர்ச்சியின் குழந்தையாக, அப்போதிருந்த தேசீய உணர்வு மேலோங்கி இருந்த சூழ்நிலையை, தன் உணர்ச்சிப் பிரவாகத்தை மற்றவர்களுடன் புரிந்து கொள்ளும் முனைப்பை உருவகப்படுத்தினார்.

அவரது அகல்யா பாரதியின் பாஞ்சாலி சபதத்திற்கு ஒப்பானது. இழைக்கப்பட்ட அநீதியால் பொங்கி எழும் தார்மீகக் கோபம், உள்ளத்தைக் கவரும் வசனங்களுடன் சேர்ந்து படிப்போரைக் கிறங்க வைக்கும் தன்மையுடையது.

'மேரி மேக்தலேனா' அகல்யாவைவிட முற்றிலும் மாறுபட்ட அயல் சம்பிரதாயத்தின் படைப்பாயினும், அதுவும் யோகியாரின் வார்த்தை ஜாலத்தினால் அகல்யாவைப் போன்று ஜொலித்து பிரகாசிக்கிறது என்றே கூறவேண்டும்.

யோகியார் மிகவும் எளிமையான சுபாவம் கொண்டவர். பிறருக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறையுடன் இருந்தவர். குழந்தை மனம் படைத்தவர். ஒருநாள் இரவில் பத்துமணிக்கு மேல் என் வீட்டுக்கு வந்தார். மாலையிலிருந்தே அவர் உணவு உட்கொள்ளவில்லையென்று தெரிந்தது. வீட்டில் உணவெல்லாம் தீர்ந்து போய்விட்டது. எனது மனைவி அவசரமாக சமையல் செய்ய முயன்று கொண்டிருந்ததைப் பார்த்த யோகியார் அதெல்லாம் ஒண்ணும் பண்ண வேண்டாம். கொஞ்சம் பழைய சாதம் இருந்தால் போடு, போதும் என்று சொல்லிவிட்டார். அப்பொழுதெல்லாம், யோகியாரிடமோ, நண்பர்களிடமோ போதிய பணம் கிடையாது. ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிடும்பொழுது கையில் போதிய பணம் இல்லையென்று உணர்ந்த யோகியார், 'எனக்குக் காப்பி வேண்டாம், கூட ஒரு இட்லி சாப்பிடுகிறேன் என்று குழந்தைபோல் சொன்னார்.

குடியரசு தினத்தையொட்டி ஆண்டுதோறும் புது டில்லியில் இந்திய மொழிகளில் கவியரங்கம் நடைபெறும். பிரதம மந்திரி உட்பட பல பிரமுகர்கள் முன்னிலையில் நடக்கும் இந்த நிகழ்ச்சியை ஆல் இந்தியா ரேடியோ நேரடியாக ஒலிப்பரப்பும் ஒருமுறை தமிழுக்காக கவிஞர் ச.து.சு. யோகியாரை அணுகியபோது அவர் முதலில் மறுத்துவிட்டார். காரணம், அந்த சமயத்தில் டெல்லியில் அதிகக் குளிராய் இருக்கும். யோகியாரிடம் கம்பளி உடைகள் கிடையாது. மற்றும்,

இரண்டே நாட்கள் அவகாசத்தில் நம் நாட்டின் பெருமையை விளக்கும் நல்ல கவிதையைப் புனைவது சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டார். வரகவியான யோகியார். எந்த நேரத்திலும் உடனடியாகக் கவிதை புனையும் ஆற்றல் படைத்தவர் என்பது எங்களுக்குத் தெரியும். ஆதலால், நண்பர்களிடமிருந்து பல கம்பளி சால்வை போன்ற உடைகளை இரவலாக வாங்கி அவரை விமானம் மூலம் டெல்லிக்கு அனுப்பிவைத்தோம். அன்றிரவு விமான நிலைய அலுவலகத்தில் பயண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தபோது, யோகியார் கவிதை புனைந்துவிட்டார்.

டெல்லியில் அப்பொழுது ஆல் இந்தியா ரேடியோவில் செய்திப் பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்த சுந்தா என்ற நண்பருக்கு யோகியார் வருகையைப் பற்றி செய்தி அனுப்பிவிட்டோம். சுந்தாவும் டெல்லியில் யோகியாரை வரவேற்று தம் வீட்டிலேயே வைத்திருந்து குடியரசு தின சிறப்பு நிகழ்ச்சியில் யோகியார் கலந்து கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளெல்லாம் செய்துவிட்டார். அன்று நிகழ்ந்த கவியரங்கில் பாடப் பெற்ற கவிதைகளெல்லாம் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு நிகழ்ச்சி முழுவதும் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது. யோகியாரின் தமிழ்க்கவிதையை பல மொழிக் கவிஞர்களும், பிரதம மந்திரி நேருவும் வெகுவாகப் பாராட்டினார்கள்.

யோகியார் கவிதை நெய்வதில் உள்ள மெல்லிய அணுகுமுறையை அவரது 'ரூபாயத்தின்' **(Rubaiyat)** தமிழாக்கம் வெளிப்படுத்துகிறது. இந்த மிகக் கடினமாக கயிற்றின் மேல் நடக்கும் வேலையில் யோகியார் வாழ்க்கையை ஒரு தத்துவத்தின் முறைக்குள் கலந்துவிடுகிறார். அவருடைய தமிழ்க் கவிதைகளில் காணும் பரிசுத்தம் படிப்போரை இந்நூல் ஓர் மொழிபெயர்ப்பு என்று வியக்க வைக்கும். ஆகவே யோகியாரின் படைப்புகளை வகைப்படுத்துவது கடினமாகிறது. அவரது படைப்புகள் ஓர் அதிசயத்திலிருந்து இன்னோர் அதிசயத்திற்கு படிப்போரை கூட்டிச் செல்கின்றன. அவரது எழுத்துக்கள் மாயை அல்ல. ஏனெனில் அந்த அனுபவங்கள் உண்மையானவை, கண்டுக் கொள்ளக் கூடியவை, என்றும் நிலைத்திருக்கக் கூடியவை.

க.நா. சுப்ரமணியம்

நான் சந்தித்துப் பழகியுள்ள மனிதர்களில் மிகவும் சுவாரசியமானவர் என்று ச.து. சுப்பிரமணிய யோகி என்கிற கவியைச் சொல்ல வேண்டும். பல நாள் நானும், புதுமைப்பித்தனும், யோகியும், புதுமைப்பித்தனின் வீட்டு மாடியில் இரவு முழுவதும் நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருப்போம். புதுமைப் பித்தன் *அடியெடுத்துக் கொடுக்க அற்புதமான கவிதைகளை சுலபமாக, மனதில்* தைக்கும்படியாக பாடுவார் ச.து.சு.யோகியார். திருமூலர் மரபில் 49-வது தலைமுறையினராக வந்த சித்தர் என்று தன்னைக் கூறிக்கொள்வார்.

திருமூலர் திருமந்திரத்தில் அணுவைப் பிளப்பதற்கு விஞ்ஞான வழி சொல்லி யிருப்பதாக ஆராய்ந்து சொல்லி அரசாங்கத்திடம் 'ஒரு தீஸிஸ்' செய்து கொடுத்து இரண்டாயிரம் ரூபாய் பணம் வாங்கினார், ஒரு விஞ்ஞான கூடம் (Lab) ஏற்படுத்தித் தந்தால் திருமூலர் வழியில் அணுவைப் பிளந்து காட்ட இயலும் என்றும் அதற்கு பத்து லட்ச ரூபாய் செலவாகும் என்று ஒரு திட்டம் தீட்டி (சம்பந்தம்பட்ட அரசு துறைக்கு அவர் கடிதம் எழுதினார்)

1938 லிருந்து 1960 வரையில் ஒரு 22 வருடங்களுக்கு எங்கள் நட்பு நீடித்தது. இந்த கால கட்டத்தில் யோகியாரை அறியும் வாய்ப்புப் பெற்றிருந்தவர்களை நான் அதிர்ஷ்டசாலிகள் என்றுதான் கருதுவேன். பலவிதங்களில் என் வாழ்க்கையும் மனமும் வளம் பெறுவதற்கு உதவியவர் அவர் என்று சொன்னால் அது தவறேயாகாது.

"நீங்கள் சொல்கிற கதைகள் எல்லாம் நம்பும்படியாக இல்லையே" என்று ஒரு நண்பர் அவரிடமே சொன்னபோது அவர் சொன்ன பதில் "எல்லாவற்றையும் நம்பிக்கொண்டு வாழ்க்கை நடத்துபவன் முட்டாள். அதற்காக சுவாரசியமான விஷயங்களை ஒதுக்கிவிட வேண்டும் என்று யார் செல்லுவார்கள்" என்றார்.

ஆர்.எம்.கிருஷ்ணசாமி

(இவர் நல்ல ஒளிபதிவாளர். யோகியாருடன் பணிபுரிந்தவர். நெருங்கிபழகியதால் தனது எண்ணங்களை இங்கு பகிர்ந்து கொள்கிறார்)

மகாகவி யோகியார் இயக்கிய ஒரு தமிழ்ப் படத்தையொட்டி 1939ம் ஆண்டு யோகியாருக்கு நான் அறிமுகம் செய்து வைக்க அழைக்கப்பட்டிருந்தேன். அழகிய தோற்றத்துடன், பட்டு ஜிப்பா, பட்டு வேட்டி அணிந்த அந்த மனிதரைச் சந்தித்ததும் நான் ஏற்கனவே அவரை உருவகம் செய்துவைத்திருந்ததில் எவ்வளவு மாறுபட்டவர் என்று உணர்ந்தேன். தலைமுடி முழுதும் நரைத்திருந்தாலும் அவர் வயதானவராக காணப்படவில்லை. அவர் படமெடுப்பதின் நுணுக்கங்களை, அத்துறையின் தொழில் நுட்ப கலைஞர்களுடன் விவரித்ததைக் கேட்டு அவர் பெரிய கவிஞர், அறிவாளி மட்டுமல்ல படத் துறையை நன்கு ஆழமாகப் படித்த ஓர் வல்லுநர் என்பதையும் அறிந்துகொண்டேன்.

அவர் திரைக்கதை எழுதுவதுபற்றி விரிவாக, விபரமாக விவாதித்ததும் எனக்கு ஆச்சர்யத்தை அளித்தது. ஏனெனில் அப்போது தென்னிந்திய படத்துறை தனது குழந்தைப் பருவத்தில் தான் இருந்தது. அந்த நாளிலேயே யோகியார் ஒரு சின்னத்தைக் காட்டி ஒரு கருத்தை உணரவைக்கும் யுக்தியை கோலாபூர் ஷாலினி ஸ்டுடியோவினர் இயக்கிய 'அருணகிரி' என்ற படத்தில் கையாண்டார்.

அவருடைய உடல் நலம் மிகவும் மென்மையாக இருப்பினும் அவர் தளராது உழைப்பவர். காட்சி தன் விருப்பப்படி சிறப்பாக வரும் வரையில் விடமாட்டார். ஒரு படத்தில் ஓர் காட்சியில் ஹொன்னப்ப பாகவதர் ஸ்ரீ கிருஷ்ணனாகவும், நாரதராக காலஞ்சென்ற சாம்பமூர்த்தியும் நடித்தனர். அதில் ஹொன்னப்ப

பாகவதர் வசனங்களைச் சரியாக உச்சரிக்க வில்லை என்று கருதிய யோகியார் பல மணி நேரம் பாகவதரை பயிற்சி செய்ய வைத்து தனக்கு திருப்தியளிக்கும் வகையில் வசன உச்சரிப்பு அமைந்தவுடன்தான், அந்தக் காட்சியைப் படமாக்கினார். அவர் வேலையில் மூழ்கிவிட்டால் சிகரெட்டைத்தவிர வேறு எதைப்பற்றியும் நினைக்கவே மாட்டார். ஆனால் அவர் உடல் நலம் குன்றிய போது மருத்துவர்கள் சிகரெட் பழக்கத்தை விடும்படி சொன்னதும் அதை உடனே அறவே விட்டு விட்டார். அது ஆச்சர்யமான விஷயம்.

ஓர் முறை தன்னுடைய சொந்தத் தயாரிப்பான 'ஆனந்தனில்' வில்லனாக நடித்த தன்னுடைய உடன் பிறந்த தம்பியான எஸ்.டி.ஆர் சந்திரனை 15 அடி உயரத்திலிருந்து விழச் சொன்னார். முன்னெச்சரிக்கையாக பல துணைக் கலைஞர்கள் விழுபவரை காயப் படாமல் காப்பாற்ற உறுதியான வலையைப் பிடித்தபோதும் கீழே விழுந்த சந்திரன் உடல் தரையில் அடிபட்டு, அவருக்கு நினைவு போய்விட்டது. ஆனால் யோகியாரோ மறுபடி அந்தக் காட்சியை படமாக்க வேண்டும் என்று கூறி சில நாட்கள் கழித்து மீண்டும் எடுத்தார்.

தமிழ், ஆங்கில இலக்கியங்களை நன்கு பயின்று அவற்றிலிருந்து பல கதைகளையும், காட்சிகளையும் மனதில் கற்பனை செய்து உருவகப் படுத்திப் பார்ப்பார் யோகியார். ஆனால் அவர் தன்னைச் சுற்றி நடக்கும் சாதாரண விஷயங்களை எப்போதும் பொருட்படுத்தியதோ, கூர்ந்து கவனித்ததோ கிடையாது. ஒரு பெண் எப்படி உடை அணிகிறாள் என்றும், அது எவ்வாறு வேறுபடுகிறது என்றும் ஒரு படத்தில் காட்ட வேண்டும். யோகியார் ஐயர் பிரிவைச் சேர்ந்தவர். ஆனால் அவருக்கு தன் மனைவி எவ்வாறு புடைவையின் மேலாக்கை அணிவார் என்பது தெரியவில்லை. அவருடைய சுய தேவைகளைப் பற்றி அவர் எப்போதும் கவலைப்பட்டதுமில்லை. அவற்றில் கவனம் செலுத்தியதுமில்லை என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம். ஒரு சமயம் அவர் ஹிந்தி பிரச்சார சபை கட்டிடத்திற்குள் சென்று ஓர் நண்பரை அழைத்து, தான் வந்த வாடகைக் காரின் டிரைவருக்கு தியாகராய நகர் மூப்பரப்பன் தெருவிலுள்ள தனது வீட்டிற்கு வழி சொல்லச் சொன்னார். அவர் மிகுந்த அடக்கமும், குழந்தை மனமும், மற்றவருக்கு தீங்கு செய்யா நற்குணமும் உடையவர்.

எல்லிஸ் ஆர் டங்கன்

(புகழ் பெற்ற பல தமிழ்ப் படங்களை இயக்கிய வெளிநாட்டுக்காரர். இவர் இயக்கிய சில படங்களுக்கு கதை வசனம் எழுதியவர் மகாகவி.யோகியார். அமெரிக்காவில் தற்சமயம் வாழ்ந்து வரும் டங்கன், நாம் தொலைபேசியில் கேட்டுக் கொண்டற்கு இணங்க சுருக்கமாக தனது எண்ணங்களை நம்முடன் இங்கு பகிர்ந்து கொள்கிறார்.)

என்னுடைய தமிழ்ப்படமான இரு சகோதரர்களுக்கு **(Two Brothers)** அருமையாக திரைக்கதை, வசனம் எழுதிய ச.து.சு. யோகியை, சரோஜ் மூவிடோன் ஸ்டுடியோவில் 1936 ஆம் ஆண்டு நீண்ட நரை முடியும், சங்கிலித் தொடர்போல்

புகைத்துக் கொண்டிருந்தவராகவும் நினைவு கூர்கிறேன். அவர் வெள்ளை வேஷ்டி அணிந்து வாயில் சிகிரெட்டுடன் காமிரா பக்கத்தில் உட்கார்ந்திருந்ததை இன்றும் எனது மனக் கண்முன் கொண்டுவந்து பார்க்கிறேன். யோகியார் அருமையாக ஆங்கிலம் பேசுவார். மிகவும் பண்பட்ட நகைச்சுவை உணர்வு கொண்டவர். அவருடைய பேச்சும், கதைகளைப் பற்றியும் நீண்ட நேர உரையாடலும் என்னை மகிழவைத்தன. யோகியார் என்று என்னால் அழைக்கப்பட்ட அவர் நன்கு படித்தவர். அவருடைய "இரு சகோதரர்கள்" கதை படமானபோது ரசிகர்களிடையே நல்ல வரவேற்பிருந்தது. அதை அப்போது சென்னை மேயராக இருந்த எஸ். சத்தியமூர்த்தியும், மிகப்பெரிய மனிதரும், நல்ல நண்பருமான சி. ராஜகோ பாலாச்சாரியாரும் உவகையுடன் வரவேற்றும் பார்த்து மகிழ்ந்தனர்.

ஆர். பாஸ்கரன்.

(இவர் இலக்கியத் திறனாய்வுக்கு ஏற்ற ஒரு கட்டுரையை தந்து மகாகவி யோகியார் எப்படி அதில் மகுடமிட்டு உட்காந்திருக்கிறார் என்று தெளிவாக இங்கு கூறுகிறார்)

ச.து.சு. யோகியாரின் எண்ணற்ற எழுத்துப் படைப்புகளை (வசன நடை, கவிதைகள்) படித்து அவரது கருத்துக்களையும், உணர்வுகளையும் எண்ணிப் பார்க்கும்போது அவருக்கு வாழ்க்கை நெறிமுறைகளின் மேலிருந்த உணர்வு பூர்வமான உறுதி, அவரது எழுத்துநடை வெளிப்படுத்திய அவரது நேர்மை, ஒருங்கிணைந்த குணநலம் ஆகியவை, நமக்கு அவரை கவியாகவும், அவர் வாழ்ந்த காலத்தைப் பற்றியும் சில முடிவுகளுக்கு வர உதவுகின்றன. யோகியார் ஒரு தலைமுறைக்கு முன்னே வாழ்ந்திருந்தால் அவர் நீண்ட கவிதைகளையும் அரசவைக்கு உரிய, உடனடியாக எழுதப்படும் செய்யுள்களையும் எழுதியிருப்பார்.

மேதாவித்தனம், ஆற்றல் ஆகியவை வாழ்க்கை, கலை ஆகியவற்றில் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு, விவரித்து அவற்றிற்கேற்ப நடக்கும் திறனை ஒருவருக்கு கொடுக்கின்றன. யோகியாரின் மன உறுதியும், ஆன்மாவின் ஆழ்ந்த தேடுதலும் அவரை கலை, விஞ்ஞானம், மதம் ஆகியவற்றை மொத்தமாக உணர்ந்து அவற்றை மற்றவர்கள் பயன்பெறும் வகையில் எழுத்துப் படைப்புகளை வழங்க வைத்தன. இத்தகைய தன்மை ஒரு பாரம்பரிய நல் முறையாக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மதிக்கப்பட்டதாகும். இந்த மரபு விஞ்ஞானத்தின் புதிரை புரிந்து கொள்ளவும், கலைகளில் புதிய யுக்திகளைப் புகுத்தவும், சமூக, தனிமனித உயர்வை உறுதிப்படுத்தும் தன்மையையும் ஓர் தெய்வீக வட்டத்துள் தன்னை உணர்ந்து கொள்ளவும், அதை சமூகத்திற்கும் வெளிப்படுத்தும் ஆற்றலையும் ஓர் மனிதனுக்குத் தருகின்றன.

தமிழ் சமூகத்தில் இழையோடும் பலவித கருத்துக்களைத் தேடி உணர்ந்து, அவை எவ்வாறு சமூகத்தில் இணக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை தனது எழுத்து மூலம் வெளிக் கொணர்ந்த யோகியார், தன்னுடைய தேடுதலை இந்து மதத்தைக் கடைப்பிடிக்கும் ஒருவரின் நம்பிக்கையுடன் மத அனுபவமாகவே பார்க்கலாம்.

யோகம், சரணாகதி, மாயாஜாலங்கள் செய்ய வல்லமை, மனித சக்திக்கு அப்பாற்பட்ட அமானுஷ்ய சக்தி ஆகியவை அறிஞர், கவிஞர், கலைஞர் ஆகியோரை வழிநடத்தி, அவர்களுடைய படைப்புகளுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. இது யோகியாரைப் பொருத்தவரையில் சாதாரண அளவைவிட மிகவும் அதிகமாக பொருந்தும். தெய்வீகத்தை அவர் சக்தியாக வழிபட்டு இயற்றிய கவிதைகள், பண்டைய தமிழ் சித்தர்கள பௌதிகத்தை ஆராய்ந்து உணர்ந்தவற்றை யோகியார் அறிந்துகொண்ட விதம் அவருக்கு இத்துறையில் இருந்த ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்துகின்றன.

யோகியாரது கவிதை, விமர்சனங்கள் நாடக, திரைத்துறையை அவர் புரிந்துகொண்ட விதம், மற்றும் அவரது எண்ணிலடங்கா படைப்புகள், மற்ற நாட்டு உணர்வுகளை அவர் கிரகித்துக் கொண்டதின் அளவை நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன. அவர் வால்ட் விட்மேன், ஹெமிங்வே ஆகியோரது ஆங்கிலப் படைப்புகளை மொழிபெயர்த்திருக்கிறார். அந்த வேலை அவர் தனக்கு முன் வந்த தலைமுறையை விட எளியதாகவும், சுற்றி வளைக்காத தன்மையையும் உடையதாகச் செய்துள்ளார். மொழிபெயர்ப்பாளராக, வெளிநாட்டுச் சிறப்பைக் கண்டு மருளாதவராகவும், தன்னுடைய பண்டைய மரபுகளைப் பற்றி வெட்கப்படாதவராகவும் யோகியார் திகழ்கிறார். இது தமிழ்க்கலாச்சார வரலாற்றில் ஒரு புதிய நிகழ்வு என்பதை நான் கூறித்தான் ஆகவேண்டும்.

இன்றைய தலைமுறைக்கும், வருகின்ற தலைமுறைக்கும் ஏற்ப புதிய கருத்துக்களையும், நெறிகளையும் தந்தவர்களில் யோகியார் தலைவராக திகழ்கிறார்.

தமிழ் மறுமலர்ச்சி என்பது ஒரு கட்டுக்குள் அடங்கிய, ஆனால் புரட்சியின் வலிமைமிக்க ஓர் இயக்கமாகும். எண்ணற்றவர்கள் இதற்கு தங்களது வழியில் ஒளியை நல்கியுள்ளனர். ஆனால் அவர்களுள் உணர்வு சிதறாமல் யோகியாரைப் போன்ற சிலரே காடுகளையும் அவற்றைச் சுற்றியுள்ள மரங்களையும் ஒருங்கே பார்க்கும் ஆற்றல் பெற்றிருந்தனர். தமிழ்நாட்டில் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் மகாகவி யோகியார் என்று தைரியமாகக் கூறலாம். இவரது படைப்பில் புரட்சிக் கருத்துக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

மு. வரதராசன்

மகாகவி யோகியாரும் இவரும் பள்ளித் தோழர்கள். தனது தோழனைப் பற்றி மு.வ. கூறுகையில்

பள்ளிப் படிப்பின் பருவ முதலாய்த்

தெள்ளிய அறிவும் தேர்ந்த கருத்தும்

நந்தே யத்தினை நாடுறும் பற்றும்

செந்தமிழ் ஆர்வமும் சேர்ந்திட வளர்ந்தனை;

இந்திய நாட்டின் இணையிலாக் கலைகளும்
பிறநாட் டினர்தம் பீடுறு கல்வியும்
இன்ன இன்னஎன்று உன்னி உணர்ந்தே
நல்லன எல்லாம் நயந்து போற்றினை;
புத்தர் முதலாம் சான்றோர் ஒப்ப
எத்தே யத்தின் உத்தமர் தமையும்
உளத்தால் மதித்தே உயர்த்தி ஏத்தினை!

நட்புக்கு எப்படிப்பட்டவர் யோகியார் என்று கேட்டால் அதற்கும் மு.வ. அவர்கள் பதில் வைத்துள்ளார். யோகியாரின் பண்பு, மற்ற கவிஞர்களில் இருந்து யோகியார் எப்படிப்பட்ட கவிஞர் என்று கூறி கடைசியில் எல்லோருடைய மனத்திலும் அமர்ந்துள்ளார் என்று கூறி பெருமைப்படுகிறார் மு.வரதராசனார்.

நண்பர்க் கினியாய் நாட்டுக் கினியாய்;
பழகிய எவரும் பற்றிடும் பண்பினை;
பகைவரும் மதித்திடும் பான்மையின் விளங்கினை;
கவிஞர் போற்றிடும் கவிஞராய்த் திகழ்ந்தனை;
யோகி என்னும் யோகம் பெற்றனை;
உலகெலாம் இயக்கிடும் உயர்பே ரன்னை
சக்தி என்னும் நித்தியப் பொருளை
வழிபட் டுருகி வாழ்வில் உயர்ந்தனை;
இனைய சிறப்பினை யாகி
அனைவ ருள்ளமும் அமர்ந்தனை நீயே!

ந.பிச்சமூர்த்தி

(புதுக்கவிதைக்கு ஒரு பிச்சமூர்த்தி என்று கூறுவார்கள். யோகியாரைப் பற்றிய தனது எண்ணங்களை இந்த கட்டுரையில் கூறுகிறார்)

கவிதையைக் காவியநடையில்தான் அமைக்க வேண்டும் என்ற அசைக்க முடியாத கோட்பாட்டின் மீது எழுந்தவையே ச.து.சுப்ரமணிய யோகியாரின் கவிதைகள்.

யோகியாரின் கவிதைச் சிறப்பு என்று முதலில் தோன்றுவது அவருடைய காவிய நடைதான்; சப்த ஜாலங்களில் அவருக்கு இருக்கும் திறமைதான். அகல்யாணி என்ற அவருடைய காவியத்தின் முதல் வரியை எடுத்துக் கொள்வோம். பூவாத பூங்கமலம் புரையாத மணிவிளக்கம்ணி என்று

ஆரம்பிக்கிறார். காவிய நடை பயிலும் கவியாக இல்லாவிட்டால் பூக்காத பூங்கமலம் புரையாத மணிவிளக்குணி என்றுதான் எழுதவேண்டி இருக்கும். அப்படி இல்லாமல் செவ்வியல் ரீதியாக கவிதை செல்கிறது. யோகியாருடைய எந்தக் காவியத்தை எடுத்துக் கொண்டாலும் இந்த கம்பீரத்தைக் காணலாம்.

கம்பர் வழிக் கவிஞர் யோகியார் என்று கூறுவதால் அவருக்கு இழுக்கு எதுவும் இல்லை. யோகியாரின் காவிய நடை தனக்குத்தானே ஆன இனிமையும், நயமும், கம்பீரமும் இருப்பதை மறுக்க முடியாது. தற்காலக் கவிஞர்களில் காவிய நடையின் சிறந்த பிரதிநிதி யோகியார் ஒருவரே என்றுகூடக் கூறிவிடலாம்.

யோகியாரின் சப்த ஜாலங்களுக்கு உதாரணமாக இப்பாட்டைக் கூறலாம்.

துடி துடிக்குது வானம் - அதில்
இடியிடிக்குது மேகம் ;
படி குதிக்குது, வெடி வெடிக்குது,
கடு கடுக்குரல் காற்றடிக்குது,
நடுநடுக்குது கூதல் - சுற்றிச்
சிடுசிடுக்குது காடு,
வெடுவெடுப்பொடு கிடுகிடுத்திட
மட மடக்கதிர் சட சடத்திடப்
புடை புடைக்குது பாறை - அதை
உடைத்துருளுது வெள்ளம்

சௌந்தரா கைலாசம்.

எனது தந்தை மகாகவி யோகியார் இறந்த போது அடியேனது வயது 12. இறந்த அன்று தமிழக முதல்வராக அன்று இருந்தவர் காமராஜர். அவர் வந்து தனது இறுதி அஞ்சலியை செலுத்தினார். செய்தியை கேள்விப் பட்டவுடன் ஓடி வந்த இன்னொருவர் கவிதாயினி சௌந்தரா கைலாசம். சோகமே உருவாக யோகியாரின் பூத உடல் அருகே அமர்ந்திருந்தார். மதியம் ஒரு மணிக்குத்தான் வீடு சென்றார். 2 மணி சுமாருக்கு சுதேச மித்திரன் மாலை நாளிதழில் ஒரு கவிதையை எழுதி வெளியிட்டார்.

வீற்றிருந்த கிழமெல்லாம் வீற்றி ருக்கவென்னாள்
விளையாட்டோ? வெறியாட்டம் தானோ? நாங்கள்
போற்றிவந்த கண்மணியை - ராஜம் தன்னைப்
பொல்லாத கூற்றுவனே பறித்தாய் என்று

ஆற்றாமல் துயர்ப்பட்டே அழுதயோகி-
அதன் நடுவில் கவிமாரி பொழிந்த யோகி -
நேற்றிருந்த தமிழ்யோகி இன்றைக் கில்லை
நெஞ்சுற்ற புண்தீர மருந்தோ இல்லை.

கவிதையை காதால் கேட்கும் போது மகிழும் நாம் தாங்க முடியாத செய்தியை அதே காதால் கேட்க வேண்டி உள்ளதே என்று மனம் நொந்து பாடுகிறார்.

கவியென்று கொட்டுமவர் வாய்மலரும் போது !
களிநின்று கொஞ்சுமவர் கவிகேட்கும் போது
செவியென்று பெற்றோமே பெற்றோமென்றெண்ணி
சிந்தைமிக நான் மகிழ்ந்ததுண்டம்மா உண்டு.
செவியென்று பெற்றோமே ஏன் பெற்றோமென்று
சிந்தை இன்று நொந்துவிட்டேன் அவர் மறைவு கேட்டு
அவியென்று யோகியினை அவித்துவிட்ட காலன்
அடங்காமல் வெறியாட்டம் ஆடுகிறான் என்னே ?

எஸ்.வி. சகஸ்ரநாமம்

(திரைப்பட, நாடக நடிகர். தனது நாடகத்திற்கு எந்த அளவிற்கு யோகியார் உதவினார் என்று இங்கு கூறுகிறார்)

உயர்ந்த தமிழுக்குப் புதுநெறி காட்டிய புலவர்கள் வரிசையில் யோகியாரும் ஒருவர். நாட்டின் கலாசார பண்பாட்டுக்கு அந்தந்த நாட்டில் வாழ்ந்த மகாகவிஞர்கள் அளவு கோலாயுள்ளவர்கள்! கவிச் சக்கரவர்த்தி கம்பர் பரம்பரையிலே வந்த கவிஞர் என்ற பெருமை யோகியாருக்கு உண்டு. இதற்கு அவருடைய கவிதைகளே சான்றாக உள்ளது.

கவிச் சக்கரவர்த்தி கம்பனை தனது நெஞ்சக் கமலத்திலே நிறைவாக்கிக் கொண்டார் ச.து.சு. யோகியார். இவ்வளவு சிறந்த கவிஞரோடு என் வாழ்நாளில் தொடர்பு கிடைத்ததைப் பெரும் பாக்கியமாக கருதி வந்தேன். மகாகவி பாரதியின் "பாஞ்சாலி சபதம்" என்ற காவியத்தை நாடக மேடையிலே அரங்கேற்றும் பொழுது எங்களுக்கு ஊக்கம் கொடுத்த பெரியோர்களில் யோகியாரும் ஒருவர்.

எங்களுக்குப் புரியாத இலக்கியங்களை அவர் வாயிலாகக் கேட்டு விளக்கம் பெற்றிருக்கிறோம். வடமொழியிலும் தென்மொழியிலும் அவருக்குள்ள அனுபவம் நாடக மேடைக்குப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள நாங்கள் முயற்சித்தோம்.

நாடகவுணர்வு யோகியாரிடம் எவ்வளவு இருந்தது என்பதை அவருடைய கவிதைகளில் இருந்து ஒருவாறு அறியலாம். "காமினி" என்ற தலைப்பில் ஓர் அரிய இனிய காவிய நாடகம் ஒன்று ஆக்கியுள்ளார்! *(1946)*

"தேவிதந்திரம்" என்ற பழைய கிரந்த நூலில் வரும் ஒரு சிறுகதையை எடுத்துக் கொண்டு காலத்திற்கேற்றபடி கற்பனைத் திறத்துடன் படைத்தளித்திருக்கின்றார்! உயர்ந்த கருத்துடனும் நிறைந்த கனிவுடனும், பாரத சமுதாயத்தின் நிலையான ஆன்மீக தருமத்தை அடிப்படையாகக் கொண்டது இந்நாடக நூல்.

டாக்டர் எல்.கே. முத்துசாமி

(யோகியாரின் பால்ய நண்பர். இவர் ஈரோட்டில் டாக்டராக பணிபுரிந்தார். இருவரும் பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள். இவர் யோகியாரைப் பற்றி எழுதிய கட்டுரையில் இருந்து சில வரிகள்)

நானும் யோகியாரும் ஈரோடு மஹாஜன உயர்தரப் பள்ளியில் ஒன்றாகப் படித்தோம். படிக்கும் போதே நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டோம். சிறுவயதிலேயே யோகியாருக்குத் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய பாஷைகளில் கவிதை, கட்டுரைகள் படிப்பதில் ஆர்வம் அதிகம் உண்டு.

நான் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துத் தேறிய பிறகு ஈரோட்டைவிட்டு, சென்னையில் அரசினர் கல்லூரியில் சேர்ந்தேன். அதன் பிறகு நான் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த சமயம் யோகியாரும் சென்னைக்கு வந்து சுதந்திரச் சங்கு , ஆனந்த போதினி காரியலயங்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்ற வந்து சேர்ந்தார். அப்போது அவரும் நானும் ஒன்றாகவே இருந்தோம். பின் நண்பர்கள் பலர் சேர்ந்து வனமலர் சங்கம் என்ற ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தோம். அதில் திரு. பெ. தூரன், மத்திய மந்திரி கனம் ஸி. சுப்ரமணியம், திரு. ஜி. பார்த்தசாரதி, மத்திய மந்திரி கனம் ஓ.வி.அளகேசன், திரு. கே.எஸ்.பழனிச்சாமி, திரு. நெ.து.சுந்தரவடிவேல், திரு. கே.எம். ராமசாமி, திரு. கே.எஸ். பெரியசாமி, திரு. அ. அழகிரிசாமி ஆகியோர் அங்கத்தினர்களாக இருந்தார்கள். இச் சங்கம் பித்தன் என்றொரு மாதாந்திர சஞ்சிகையை வெளியிட்டது. ஆசிரியர் குழுவில் யோகியார் அங்கம் வகித்ததுடன், அதில் அவருடைய பாட்டுகளும் பிரசுரமாயின. அதில் வெளி வந்த பல பாடல்கள் மிகவும் அழகானவை.

1935-ம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சிறந்த தேசிய தமிழ்ப் பாட்டிற்குத் தங்கப் பதக்கம் பரிசளிப்பதாக அறிவித்தது.

யோகியாரிடம் நான், எஸ்டி., இதற்கு ஒரு பாட்டு எழுதி அனுப்பு என்று சொன்னேன். அட, போ என்னால் முடியாது என்று முதலில் மறுத்துவிட்டார். நான் வற்புறுத்தினேன். என் தொந்தரவு பொறுக்க முடியாமல் சரி எழுதிக்கோ என்று சொன்னார் அவர் கவிதை சொல்ல, நான் அக் கவிதையை எழுதி, நானே போட்டிக்கு அனுப்பி வைத்தேன். அந்தப் பாட்டுதான் சிறந்தது என தீர்மானிக்கப்பட்டு, யோகியாருக்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசு கொடுத்தார்கள்.

யோகியாருடன் நான் இருக்கும் போதெல்லாம் கவிதை காவியம் தெய்வபக்தி முதலியவை பற்றியே பேசுவார். இலக்கியத்தில் எல்லாத் துறைகளிலும் அவருக்கு ஈடுபாடு உண்டு. மேலெழுந்தவாரியாகப் படிப்பது அவருக்குத் தெரியாது. எதையும் ஆழ்ந்து சிந்தித்து படித்து அதில் நல்ல ஒரு அறிவைச் சம்பாதித்துக் கொள்வார்.

பள்ளிப்பருவம் முதல் கடைசி வரையில் அவரிடம் வயது முதிர்ச்சி தவிர குணபாவங்களில் எந்தவித மாறுதலையும் நான் பார்க்கவில்லை. குழந்தை உள்ளம் படைத்தவர். எதிலும் விருப்பும் வெறுப்பும் இன்றி ஒரு துறவி போன்று வாழ்ந்து வந்தார்.

பி.எஸ். செட்டியார்

இந்திய தேசிய காங்கிரஸ் பொன் விழா சம்பந்தமாகத் தமிழ்நாட்டில் 1935-இல் பாட்டுப் போட்டி நடந்தது. அதில், பாலபாரதி ச.து.சுப்பிரமணிய யோகியார் வெற்றி பெற்றார்.

ஆழிக்குள் தூங்கும் முத்தின் ஒளி அம்பலத்திற்கு வந்தால் தானே தெரியும்.

இவரது கவிதைகளில் பல, அந்தக் காலத்தில் சிறப்பாக நடந்து மறைந்த பித்தன் , புதுமை ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தன. பாரசீக கவியான உமார்கயாமின் நூலை முதன் முதலாகத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்த்தாயின் மலரடிகளில் வைத்த பெருமை யோகியாரையே சாரும். இக்கவிதை ஒன்றே இவரது இணையிலாப் புலமைக்குச் சிறந்த சான்றாகும்.

யோகியாரின் கவிதைகளில் கலா சௌந்தர்யத்தையும், கற்பனையின் வியப்புகளையும், ஜீவசக்தியையும் காணலாம். நடையழகு மிக அற்புதமாக விளங்கும். சொற்களில் கம்பீர்யமும், சௌந்தர்யமும் பிணைந்து நிற்கும். ஆழ்ந்த தத்துவத்தைக் கவியின் ஒவ்வொரு வரியும் எடுத்துக்காட்டும். இவர் பராசக்தியின் மீது பாடியுள்ள பாட்டுக்களைப் படிக்கும்போது, நம்மிடம் சக்திவெறி துள்ளும். பல அருமையான கீர்த்தனங்களையும் யோகியார் படைத்திருக்கிறார்.

இவரது உரை நடையும் தலை சிறந்தது. பொங்கற் புதுநாள் , குமார சம்பவம் முதவிய இவரது வளமான வசன பாகங்கள் இதற்குச் சான்றாக உள்ளன. இவரது காதல் மலர்கள் இன்பம் ததும்பும் இணையற்ற நூல்.

தமிழில் எவ்வளவு சரளமாகக் கவிதைகளும், கட்டுரைகளும் எழுதினாரோ, அதே ஆற்றல் இவருக்கு ஆங்கிலத்திலும் இருந்தது. ஆங்கிலத்தில் இவர் எழுதிய பல நூல்கள் உண்டு.

நம்முடைய காலத்திலே தமிழுக்குத் தொண்டு செய்தவர்களிலே சிறந்த ஒருவர் யோகியார். நம் வாழ்நாளில் தமிழால் தழைத்தோர் பலரைப் பார்க்கிறோம். சிலரைச் சிறப்புக்கள் தேடிவந்தன. ஆனால் தமிழுக்குத் தொண்டு செய்தவர்களுக்குள்ளே யோகியார் அதிர்ஷ்டசாலியல்ல.

எம்.ஜி.ஆர்.

(தமிழக முன்னாள் முதல்வர். மகாகவி யோகியாரிடம் தமிழ் கற்றேன் என்று கூறுகிறார்)

நான் சொல்லும் இந்த நிகழ்ச்சி சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு நடைபெற்றது என்று நினைக்கிறனே். அப்பொழுது நான் சில படங்களில் நடித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் நான் நடிக்க வேண்டிய ஒரு பாத்திரத்தின் வசனங்களை எங்களுக்குச் சொல்லிக் கொடுக்க யோகியார் வருகிறார் என்று தெரிந்தது. எங்களிடையே வந்த யோகியார், தான் எழுதிக்கொண்டு வந்திருந்த வசனங்களை படித்துக் காட்ட ஆரம்பித்தார். அவர் சென்றபின் நாங்கள் கூடி நின்று அவரது வசனத்தை கேலியும் கிண்டலும் செய்தோம். காரணம் அன்று நாங்கள் சுத்தமான தமிழில் "வாருங்கள், தாங்கள் எங்கே செல்கிறீர்கள்" என்று பேசிக் கொண்டிருந்தோம். ஆனால் யோகியார் அவர்களோ "வாங்க எங்க போறீங்க" என்று வசனம் எழுதியிருந்தார். அன்று சிரித்த நாங்கள் பின்நாளில் அவரது வசனங்கள் போலவே படங்களிலும் பேசப்பட்டதை அறிந்தோம். அன்று அவரைக் கேலி செய்ததை நினைத்து நான் மிகவும் வருந்தினேன். யோகியார் ஒரு தீர்க்கதரிசி நாளை நடப்பதை இன்றே அறிந்த மகான் என்று தைரியமாகக் கூறலாம்.

கவியரசு கண்ணதாசன்

(பல கூட்டங்களில் மகாகவியைப் பற்றி புகழ்ந்து கூறியுள்ளார். அப்படி ஒரு கூட்டத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவில் இருந்து சில கருத்துக்கள்)

யோகியார் அடக்கமானவர். அமைதியாக வாழ்ந்தவர். அவர் எதையும் விமர்சனம் செய்து புண்படுத்தி எவருக்கும் தொல்லை கொடுக்காதவர். அவருடைய கவிதைகளிலே அவருடைய இளகிய மனப் பண்பினைக் காண்கிறோம். ஒரு நல்ல கவிஞனுடைய லக்ஷணம் அவனுடைய இருதயம் மென்மையாக இருக்கிறதா என்பதுதான். யோகியாருடைய இருதயம் முழுக்க முழுக்க மென்மையானது என்பதை அவருடைய கவிதைகள் நமக்குக் காட்டுகின்றன.

அவர் அகலிகைக்காக வாதாடுகிறார். ஒரு சிறந்த வழக்கறிஞர் கூடக் குற்றக் கூண்டிலே நிற்கும் ஒரு பெண்ணுக்குப் பணம் வாங்கிக் கொண்டு அவ்வளவு அழகாக வாதாட முடியாது. எப்பொழுதோ மறைந்துபோன ஒரு அகலிகைக்காக அவர் நெஞ்சுருக வாதாடுவதை நாம் இன்றைக்கும் காண்கிறோம். அவர் வாதாடுகின்ற ஒவ்வொரு முறையையும் பார்த்தால் அவர் எவ்வளவு தூரம் அந்தப் பாத்திரத்தின்மீது, அகலிகையின்மீது, ஆர்வம் கொண்டு ஆசைகொண்டு, அவள் சார்பிலே கேட்கிறார் என்பதை நாம் உணர்கின்றோம்.

சாதாரணமாக ராமனே கேட்க முடியாத அவ்வளவு அற்புதமான கேள்விகளை யோகியார் கேட்கின்றார். அகலிகையை இந்திரன் கெடுத்தான். இந்திரன் அவள்

கணவனுடைய வடிவிலேயே வந்து கெடுத்துச் சென்றுவிட்டான். அதுவும், அதிகாலை நேரத்திலே முனிவன் வெளியே போக, இந்திரன், முனிவன் ரூபத்திலே உள்ளே வந்து அவளோடு உறவு கொண்டான். உறவு கொண்டபோதுகூட கவிஞர் வெகு ஜாக்கிரதையாக "என்று மில்லாப் பேராசை என் கணவர் கொண்டாரே – இன்று கண்டேன் பேரின்பம் யான்! என்று இணங்கிவிட்டாள்" என்று அங்கு வந்தது தன் கணவன் என்று முடிவு செய்த பிறகுதான், அவளுக்கு அந்தக் களங்கத்தை வரச்செய்கின்றார். பிறகு அசல் கணவன் வந்தபோது, இந்திரன் வெளியே செல்ல, அவனும் சபிக்கப்பட்டு, அகலிகையும் கல்லாகச் சபிக்கப்படுகிறாள். ராமன் அங்கே வந்து, சாப விமோசனம் கொடுத்த பிறகு, அகலிகையை கௌதமர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வாதாடும் சமயம் ராமன் யோகியாராகவே இருந்திருப்பாரோ அல்லது அந்த இராமன்தான் இன்று யோகியாராகவே பிறந்தானோ என்று தோன்றக்கூடிய அளவு அந்த வாதம் தெளிவாக அங்கே நிலை நாட்டப்படுகிறது.

"நான் வேறு! இந்திரன் வேறு என்றாவது தெரிந்திருக்க வேண்டாமா?" என்று கேட்டான் முனிவன். அதற்குத்தான் யோகியார் எவ்வளவு பெரிய வழக்கறிஞராக, ஜாக்கிரதையாகவும், அழகாகவும் பதில் சொல்லுகின்றார்.

"முக்காலம் தானுணரும் முனிவன் நீ ஏமாந்தால்
அக்கால் உன் அன்பால் ஏமாந்ததும் ஓர் அற்புதமோ?"

என்று கூறுகிறார்.

"நீ காலையிலே விழித்த போது கூவினது அசல் கோழியா? போலியா என்றுகூடத் தெரியாது வெளியேறினாய். அவளோ ஒரு காலமும் அறியாதவள். அசலா போலியா என்று அறியாது ஏமாந்தாள். முக்காலும் உணர்ந்த நீ ஏமாந்தபோது, ஒருக்காலும் உணராத பேதை ஏமாந்ததில் பிழை ஏதும் இல்லை." இதற்கு மேல் அப்பீல் எதுவும் கிடையாது. எந்தக் கோர்ட்டாரும் ஏற்க முடியாது. இந்த வாதத்திற்குப் பின்பு அகலிகையை ஏற்றுக் கொண்டது நியாயமாகும். ஆக இந்த வாதம் பழம் நூல்களில் இல்லை. அகலிகைக்காகவே இங்கு யோகியார் வாதாடுகிறார்.

ஆர்.கே.வேங்கிடசாமி

(இளம்பிராய முதல் ஈரோடு நகரில் கல்வி பயின்றார்கள், பழகினார்கள், நட்புக்கு இலக்கணம் வகுத்தார்கள்.)

பாலபாரதி ச.து. சுப்பிரமணிய யோகியார் எனது நெருங்கிய நண்பர். ஈரோட்டில் நானும் அவரும் மகாஜன உயர்தரப் பள்ளியில் ஒன்றாகப் படித்து வந்தோம். பள்ளியில் 6-வது வகுப்பில் படிக்கும் மாணவனாக இருந்த காலத்திலேயே தானாகவே கவிதை இயற்றும் சக்தி யோகியாருக்கு இருந்தது. அத்துடன் அவர் அந்த வயதிலேயே யோகாப்பியாசம் செய்துவந்தார். குறிப்பிட்ட சில நண்பர்கள்

அவருடன் கூடவே இருப்பர். அதில் முக்கியமானவர்கள் டாக்டர் எல்.கே. முத்துசாமி, திரு. கே. கிருஷ்ணசாமி, திரு. எம்.பி. பெரியசாமி *(தூரன்)* ஆகியோராவர்.

ஆங்கிலத்திலும், தமிழிலும் முதல்வராக விளங்கினார். மாணவ நிலையிலேயே தேசிய உணர்ச்சி அவருக்கு அதிகம் உண்டு. உணர்ச்சியும் வேகமும் தரும் பாரதியார் பாடலைப் போலவே அவரும் தனியாக ஈரோடு காவேரிக் கரையில் சென்று உட்காரும்போது வீறுகொண்டு பாடல்களைப் பாடுவார்.

அவர் பிறப்பில் பிராமணனாக இருந்தாலும் உயர்ந்த ஜாதி, கீழ் ஜாதி என்ற வேறுபாடு இல்லாமல் இருந்தார். அவர் காங்கிரஸில் சேர்ந்தவுடனே பூணூலை அறுத்து எறிந்துவிட்டார். மேலும் அவருக்கு இருந்த முக்கிய நண்பர்கள் யாவரும் மற்ற வகுப்பைச் சேர்ந்தவர்களே. ஜாதகம் கணிப்பதிலும், கவிதை எழுதுவதிலும், பாடல் இயற்றுவதிலும் அவருக்கு இணை யாரும் இல்லை என்று நான் நினைக்கிறேன். அவர் தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர்.

எளிய சந்தம், எளிய நடையில் கவிநயம் மின்ன அவர் எழுதியிருக்கும் கவிதைகள் அவரை மக்கள் கவிஞராகவும் காட்டுகின்றன. சினிமாத் துறையில் சிறந்த டைரக்டராகவும், பாடலாசிரியராகவும் விளங்கியவர். கம்பராமாயணத்தின் சில பகுதிகளை அதே கவிதை எழிலுடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பெருமை பெற்றார்.

கவிஞர் திருலோக சீதாராம்.

(யோகியார் எங்களது கவிஞர்களுக்கு தலைவர் என்று சந்தோஷத்துடன் கூறுகிறார்.)

பேச்சு, நடை, தோற்றம், நட்பு, மனப்பண்பு, அழகுணர்ச்சி ஆகிய ஒவ்வொன்றிலும் கவிஞராக வாழ்ந்த அவருடன் நட்புரிமை பூண்டிருந்த பாக்கியசாலிகளுக்கு நானும் ஒருவன்.

தி.க.சண்முகம்

(நாடகக் கலையில் எல்லோராலும் போற்றப்படுபவர். இவர் யோகியாருடன் தனது சந்திப்பை கூறுகிறார்.)

கவிஞர் ச.து.சுப்பிரமணிய யோகியார் அவர்களை முதன் முதலாக 1934-இல் நான் ஈரோட்டில் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். யோகியார் அவர்கள் அப்போது தீவிரமான காங்கிரஸ்வாதி. ஆம். அந் நாளில் தேசியப் பணிபுரிந்து வந்த காங்கிரஸ்காரர்கள் பெரும்பாலோரை நான் அறிவேன்.

கவிச் சக்கரவர்த்தி கம்பனிடத்திலே யோகியார் அவர்களுக்குத் தனியான ஈடுபாடு. கம்பனின் கவிதைப் பெருங் கடலில்லே மூழ்கித் திளைத்தவர் அவர். அவருடைய பல பாடல்களிலே அதன் சாயல் வெளிப்படுவதைக் காணலாம்.

அகலிகை கல்லாகச் சபிக்கப்பட்டாள் ; கவிஞர் பாடுகிறார்.

"இவ்வண்ணம் பல்லாண்டாய்
இழிவண்ணமாய்க் கிடந்தாள்
மைவண்ணம் தீர்ப்பதற்கோர்
மழைவண்ணமாய் வந்தான்"

கவிஞரின் இப்பாடல் கம்பனைப் பயின்றவர்களுக்குக் கம்பனின் அழியா ஓவியக் கவிதை நினைவுக்கு வந்தே தீரும்.

"இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனி இந்த உலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர்
உயர்வண்ணம் ஏதுமுண்டோ?
மைவண்ணத் தரக்கி போரில்
மழைவண்ணத் தண்ணலே உன்
கைவண்ணம் அங்கு கண்டேன்
கால்வண்ணம் இங்கு கண்டேன்"

இராமனின் கால்வண்ணச் சிறப்பை விசுவாமித்திரர் வாக்கிலே கம்பன் வெளிப்படுத்தும் அற்புதக் கவிதை இது.

1944-ஆம் ஆண்டில் ஈரோட்டில் நாடகக் கலை மாநாடு ஒன்றை நாங்கள் முன்னின்று நடத்தினோம். அந்த முதல் மாநாட்டிற்கு கவிஞர் யோகியார் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

"அக்கலையும் இக்கலையும்
ஆய்ந்தறிவார் நாடகத்தை
எக்கலையும் கூடும்
இயல்பென்பார் - முக்கலையாம்
செந்தமிழில் நாடகங்கள்
சீர்பெற்றுயர்ந்திடவே
வந்த மகாநாடு நிதம் வாழி."

கவிஞரின் வாழ்த்து கவிதையாகவே மலர்ந்தது.

6-4-53-இல் சென்னை வானொலியில் திரு யோகியார், திரு. பெரியசாமித்தூரன் ஆகிய இரு சிந்தனையாளர்களோடும் 'எது நல்ல நாடகம்?' என்னும் பொருள் பற்றி உரையாட எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அது ஒரு சுவையான நிகழ்ச்சியாக அமைந்தது. அன்றைய உரையாடலில்

யோகியார் அவர்கள் நாடகத்தைப் பற்றிப் பல அரிய கருத்துக்களை வெளியிட்டார் அவை எனக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தன.

எஸ். மீனாக்ஷிசுந்தர முதலியார்

(யோகியார் ஈரோடு மஹாஜன உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயிலுங்காலை எஸ். மீனாக்ஷிசுந்தர முதலியார் அவருடைய சரித்திர ஆசிரியராக இருந்தவர் பள்ளிக்கூட மாணவனாக இருக்கும் போதே தேசபக்த ஆர்வத்தின் காரணமாக யோகியார் எழுதிய சிறு கவிதைத் தொகுப்பு ஒன்றை தேசபக்த கீதம் என்ற மகுடத்துடன் 1924-இல் வெளியிட்டார். அதில் மீனாக்ஷிசுந்தர முதலியார் எழுதிய முன்னுரை இது)

ஒரு சமயம் ஸ்வாமி இராமகிருஷ்ண பரமஹம்ஸர் "உலகத்திலுள்ள மனிதர்களெல்லாரும் பைத்தியம் பிடித்தவர்களே. ஒவ்வொருவரும், மண், பெண், பொன், புகழ், உத்தியோகம் என இவைகளில் ஏதாவது ஒன்றின்மேல் பைத்தியம் பிடித்தவராகின்றனர். நானோ எல்லாம் வல்ல பரம்பொருள் மேல் பைத்தியங் கொண்டேன்" என்று கூறியுள்ளார். அத்தகைய பக்திப் பயித்தியம் கொண்டவர்களில் எனது மாணவன் ச.து.சுப்பிரமணியனும் ஒருவன்.

நான் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவனுக்கு உபாத்தியாராக வந்த காலை, மாணவர்களில் சிலரும், உபாத்தியாயர்களில் இரண்டொருவரும் இவனை பைத்தியம் **(He is a Crack)** என்று என்னிடங் கூறியது என் நினைவுக்கு வருகின்றது. சீக்கிரத்தில் நான் அவனுக்குப் பிடித்திருக்கும் பைத்தியத்தைக் கண்டு பாராட்டினேன். அப்படிப்பட்ட பைத்தியத்தில் கொஞ்சமாவது மேல் நாட்டு நவீன நாகரிகப் பைத்தியம் கொண்ட நமது நாஸ்திகச் சிறுவர்களுக்குப் பிடிக்க வேண்டுமென்று என் மனம் பெரிதும் விழைகின்றது.

"உள்ளத்திலுண்மை யொளி யுண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்ற பாரதியாரின் திருவாக்கின்படி இந்நூலாசிரியன் வயதில் சிறியோனாயினும் கவிஇயற்றுதற்குக் காரணமான பல காவியங்கள் கற்றிலனேனும், இவனது உள்ளத்தில் ஊற்றெடுத்துத் துள்ளிப் பெருகும் பக்தி வெள்ளமே பாட்டுகளாகி வெளிவந்திருக் கின்றது. தெய்வ பக்தியில் எப்படியோ அப்படியே இவன் தேச பக்தியிலும் சிறந்தவன். இவைகளையெல்லாம் வாய் மாத்திரத்தில் நிறுத்திவிடாமல் காரியத்தில் காட்டிவருகின்றான். பரீட்சை பாஸ் பண்ணுவதையே புருஷார்த்தமாகவும், பண்டை நாகரிகத்தைப் பழித்து நாஸ்திகத்தில் நம்பிக்கை கொள்வதையே நாகரிகமாகவும் எண்ணியுள்ள மாணவர்களுக்கு மதாபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானம் முதலியன உண்டாகும் பொருட்டு பாரதி நிலையம் என்ற உயர்ந்த நோக்கங்களைக் கொண்ட வாலிபர் சங்கமொன்றை ஸ்தாபித்துத் தன்னாலியன்ற தொண்டு தன் தாய் நாட்டிற்குச் செய்து வருகின்றான். எல்லாம் வல்ல இறைவன் இவனுக்கு உற்சாகத்தை வளர்த்துத் தேசசேவையில் நீடித்துழைக்க ஆற்றலும், ஆயுளும் அருள்வாராக.

8. பரிசுகள்

விடுதலைக்கு முற்பட்ட இந்தியாவையும், விடுதலை பெற்ற இந்தியாவையும் காணும் பேறு பெற்றவர் யோகியார். தாம் வாழ்ந்த காலத்திலேயே பாராட்டப் பெறும் வாய்ப்பும் பெற்றவர் இவர் பெற்ற பரிசுகள் இவரது பன்முகப் புலமையை எடுத்துக் காட்டுகின்றன. அப்பரிசுகள் வருமாறு ;

வ எண்	பரிசு	விபரம்	ஆண்டு
1.	தங்கப்பதக்கம்	காங்கிரஸ் பொன்விழா கவிதைப் போட்டி (கொடிவணக்கம் கவிதைக்காக)	1935
2.	ஆயிரம் ரூபாய்	கிராமிய நாடகப் போட்டி (நவபாரதம்-நாடக நூலுக்காக)	1962
3.	தங்கப் பதக்கம்	தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம். சிறந்த திரைப்பட வசனகர்த்தருக்காக	1963
4.	ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு	இராசா சர் அண்ணா மலையாரின் அறக்கட்டளை சார்பில் பரிசு-சாத்தனாரின் கூத்த நூலுக்காக	

9. மறைவு

இலக்கியச் செல்வாக்கு, பத்திரிகை பாராட்டுகள் திரைப்பட புகழ் நாடகத்தின் மூலம் பிரபலம் என்று அனைத்தும் பெற்றுத் தான் வாழ்ந்த காலத்திலேயே புகழுடன் விளங்கியவர் யோகியார். இவர் 1963-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 27-ஆம் நாளன்று காலை ஐந்து (5) மணியளவில் தமது ஐம்பத்தொன்பதாவது வயதில் இவ்வுலகைவிட்டு மறைந்தார்.

"தன்னலமில்லாத தேசபக்தர்களுக்கும், தற்புகழ்ச்சியில்லாத தமிழ்க் கவிஞருக்கும், உண்மை பேசும் உயர்ந்தோருக்கும், விளம்பரத்தை வேண்டாத கலைஞனுக்கும் இந்த நாட்டில் எவ்வளவு கோரமான தண்டனை கிடைக்குமோ, அத்தனை துன்பத்தையும், துயரத்தையும், வறுமைகளையும் வேதனையையும் புன்சிரிப்போடு அனுபவித்து, இந்த புண்ணியபாரத நாட்டை விட்டு விடுதலை பெற்றுவிட்டார் நண்பர் யோகியார் அவர்கள்."

யோகியாரின் மறைவைக் குறித்து எஸ்.டி. சுந்தரம் மனம் வருந்திக் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கருத்தால் யோகியார் தன்னலம் கருதாத தமிழ்ப் பணியும் செல்வ வளமில்லாத வறுமைப் பின்னணியும், அதே சமயத்தில் வறுமையால் மனம் தளராத உண்மைக் கவிஞராக, சிறந்த அறிஞராக யோகியார் விளங்கியமையும் தெளிவாகின்றன.

புகழ்பெற்ற கவிஞன் என்றாலும் அவரது கடமையிலிருந்து யோகியார் என்றுமே தவறியதில்லை. ஒரு நல்ல கணவனாக, உயர்ந்த தந்தையாக, ஊரும் உலகமும் போற்றும் உன்னத மனிதராக வாழ்ந்து, மறைந்தவர் யோகியார். தமிழ் கூறும் நல்லுலகு உள்ளவரை அவரது புகழ் என்றும் மங்காமல் ஒளிவீசும் என்பது திண்ணம்.

பின்னிணைப்பு

தமிழ் இணைப்புகள்

1. ச.து.சு. யோகியார் வாழ்க்கைக் குறிப்புகள்.

இயற்பெயர்	:	ச.து. சுப்பிரமணியம் என்ற யோகியார்.
புனைபெயர்	:	பேயன், காளிதாசன், பித்தன்.
பட்டப் பெயர்	:	பால பாரதி.
தந்தையார்	:	எஸ். துரைசாமி அய்யர்.
தாயார்	:	மீனாட்சி அம்மாள்.
பிறந்த ஊர்	:	பாலக்காட்டை அடுத்த எலப்பள்ளி.
வாழ்ந்த ஊர்	:	சங்ககிரி, சேலம் மாவட்டம்.
தம்பி	:	ச.து. இராமசந்திரன்.
மனைவி	:	கமலம்மா.
மகன்	:	அசோக் குமார்.
அறிந்த மொழிகள்	:	தமிழ், வடமொழி, ஆங்கிலம்

ஆண்டு		குறிப்புகள்
1904	:	நவம்பர் திங்கள் 30-ஆம் நாள் கவிஞரின் பிறப்பு.
1913	:	'பால பாரதி' என்ற பட்டம் சூட்டல்.
1918	:	தந்தையின் மறைவு.
1921	:	எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி பெறல்.
1924	:	'தேச பக்த கீதம்' கவிதைத் தொகுப்பு வெளிவரல்.
1925	:	திருமணம், கமலம்மாவை மணத்தல்.
1932	:	ஜனவரித் திங்கள் 22-ஆம் நாளன்று சிறைக்குச் செல்லல்.
1935	:	சங்கீத சாகித்திய கவிதைப் போட்டியில் கலந்து கொண்டு, 'கொடி வணக்க'ப் பாடலுக்குத் தங்கப் பதக்கம் பெறல்.

1936	:	'இரு சகோதரர்கள்' என்னும் திரைப்படத்திற்குக் கதை, வசனம், பாடல் எழுதுதல்.
1937	:	'பக்த அருணகிரி' என்னும் திரைப்படத்தை இயக்கியதுடன், கதை, வசனம், பாடல் ஆகியவையும் எழுதுதல்.
1942	:	'தமிழ்க்குமரி' என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளிவரல்.
1957	:	'கடலும் கிழவனும்' மொழிபெயர்ப்பு நூல் (புதினம்) வெளிவரல்.
1958	:	'மனிதனைப் பாடுவேன்' - மொழிபெயர்ப்புக் கவிதை நூல் வெளிவரல் அத்துடன், 'சந்நியாசியும் சர்வாதிகாரியும்' என்னும் மொழிபெயர்ப்புக் கட்டுரைத் தொகுப்பு நூல் வெ்ளிவரல்.
1962	:	கிராமிய நாடகப் போட்டியில், 'நவபாரதம்' என்னும் கவிதை நாடக நூலிற்கு, ஆயிரம் ரூபாய் பரிசாகப் பெறல்.
1963	:	தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் அளித்த, சிறந்த திரைப்பட வசனகர்த்தருக்காகத் தங்கச்சங்கிலியும், பதக்கமும் பெறல்.
1963	:	ஜூலைத் திங்கள் 27-ஆம் நாளன்று இயற்கை எய்தல்.

2. ச.து.சு. யோகியாரின் படைப்புகள்

படைப்புகள் (தமிழ்)	ஆண்டு
கவிதை	
1. தேசபக்த கீதம்	1924
2. தமிழ்க்குமரி (முதல் பதிப்பு)	1942
தமிழ்க்குமரி (மூன்றாம் பதிப்பு)	1963
3. கதையைக் கேளடா தமிழா	1952
4. விடுதலைச் சிந்து	-----
5. புதுக்கவிதை (கிடைத்தவை சில)	

உரைநடை

1 கவி உலகில் கம்பன் 1979

சிறுகதை

1. குளத்தங்கரைக் குயில்கள் *(இதழில் வந்தது)* 1934
2. மரண தாண்டவம் *(சிறுகதைத் தொகுப்பு நூல்)* 1948

கவிதை நாடகம்

1. காமினி *(காவியக் கவிதை)* 1946
2. பவானி *(குறவஞ்சி)* 1956
3. நவபாரதம் *(குறவஞ்சி)* 1962

கட்டுரை

1. எனது சிறைவாசம் *(தன் வரலாறு)* 1932
2. கவி பாரதி *(திறனாய்வு)* 1932
3. சங்கம் வளர்த்த தமிழ் *(திறனாய்வு)* 1956

நூலுரை

1. சாத்தனார் அருளிய கூத்த நூலிற்கு உரையும் பொழிப்பும் *(முதல் தொகுதி)* 1968

மொழிபெயர்ப்பு
ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு

1. ருபயாத் *(கவிதை)* 1963
2. மனிதனைப் பாடுவேன் *(புதுக்கவிதை)* 1958
3. அத்தர் *(கவிதை)*
4. இதுதான் ருசியா *(உரைநடை)*
5. கடலும் கிழவனும் *(புதினம்)* 1957
6. மான்குட்டி *(புதினம்)* 1956
7. சந்நியாசியும் சர்வாதிகாரியும் *(கட்டுரை)* 1958
8. வுட்ரோவில்சன் வாழ்க்கை வரலாறு

தமிழ்-ஆங்கிலப் படைப்புகள் - வெளிவந்தவை

1. **காரைச்சித்தரின் "கனகவைப்பு" - Golden Lay By Kari Siddhar - Introduction to Siddhas and Siddha Miracles By S.D.S. Yogi.**

மொழிபெயர்ப்பு

தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு - கவிதை

1. கம்பராமாயணம் 'சீதா கல்யாணம்'.

ஆங்கில படைப்புகள் - வெளியிடப் பெறாதவை

1. **Rubian - Poetry.**
2. **A day with my master - Prose**
3. **A Secret of Atom - Prose.**
4. **The Hindu Atom - Prose.**
5. **Yama - Yami - Drama.**
6. **Dew Drops - Sayings of Yogiar**
7. **The Puranas.**
8. **The Stray thoughts**
9. **Golden Net**

இந்த புத்தகம் எழுத உதவிய நூல்கள்

1. தமிழ்க்குமரி
2. புதுமை, புத்தன் - இதழ்கள்
3. ச.து.சு. யோகியார் நினைவு மலர்
4. ச.து.சு. யோகியார் பற்றிய திறனாய்வு தொகுப்பு
5. கவி உலகில் கம்பன்
6. மரணத்தை வென்ற மகான்
7. கூத்த நூல்

மகாகவி பாலபாரதி ச.து.சு. யோகியார் இந்த நூற்றாண்டின் ஈடு இணையற்ற கவிஞர். திறமையான எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், பார்புகழும் பாடலாசிரியர், பன்மொழி அறிஞர். இவர் எழுதி வெளிவந்த 'தமிழ்குமரி' இவரை புகழின் உச்சிக்கே கொண்டு சென்றுவிட்டது. கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இயக்கம் என்று திரை உலகில் பல்வேறு பிரிவுகளில் அன்றே பணியாற்றிய வல்லவர். நமது தாய் நாட்டின் விடுதலைக்காக போராடி சிறை சென்ற உத்தமர். மயாஜாலவித்தை செய்து எல்லோரையும் மகிழ்வித்தவர். பண்பின் உறைவிடம், பாசத்தின் பிறப்பிடம். இவை எல்லாவற்றையும் விட மென்மையான, கோபமே வராத உயர்ந்த உள்ளம் கொண்ட மாமனிதர்.

இந்த நூலின் ஆசிரியர் எஸ்.ஆர். அசோக்குமார் (சலன்), சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேல் பத்திரிக்கைத் துறையில் பணியாற்றி வருபவர். எல்லோரும் படித்து, ரசித்து, புரிந்து கொள்ளும் வண்ணம் எளிய தமிழில் பொருட்செறிவுடன் சுவைபட எழுதுபவர். மகாகவி பாலபாரதி ச.துசு யோகியாரின் அருந்தவப் புதல்வர். தந்தையை போலவே கதை, கட்டுரை, நாடகம், இசைப் பாடல்கள் பல எழுதியுள்ளார்.

கவி புனைவதிலும் ஆற்றல் மிக்கவர். அகில இந்திய வானொலியில் 1000 நிகழ்ச்சிகளுக்கு மேல் பங்கு கொண்டுள்ளார். அதில் சுமார் 250 நிகழ்ச்சிகளை இவரே வடிவமைத்து தயாரித்துள்ளார். பலதரப்பட்ட வல்லுனர்களை, குறிப்பாக சினிமா, விளையாட்டு, மருத்துவம் மற்றும் பொதுப்பிரிவு என்று அனைத்துத் துறையினறையும் தனது கேள்விக் கணைகளால் துளைத்து அறிவுபூர்வமான பதில்களைப் பெற்றுப் பாராட்டப்பட்டவர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இவரது பங்கு அளவிடமுடியாதது. தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளிலும் புலமைப் பெற்றவர். சமூக சிந்தனை மிகுந்தவர், சாதனை செய்ய துடிப்பவர். இது இவரது மூன்றாவது படைப்பு.

S.D.S. Yogiar (Tamil)
ISBN 81 - 260 - 0779 - 6

Rs. 25/-

இருபத்திரண்டு மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி உலகிலேயே மிகப் பெரிய வெளியீட்டகம்.